நன்றி - நூலகத்திட்டம்

SARINIHAR

சரிநிகர்

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இப்போது இணையத்தில்
sarinihar.com

இதழ் - 216, ஜன. 07-13, 2001

# மலையகம்: அரசின் இனவெறி!



பலியாகும் அப்பாவி மலையகத் தமிழர்!





போர் நிறுத்தம்: புலிகளுக்கு வெற்றி!

ஊடகம்: போரும் புனைவும்

தமிழ்க்கட்சிகள்: அரசியல் களத்தில் ...

சாகித்தியப்பரிசு: திருட்டுக்களும் புரட்டுக்களும்





மிருசுவில்: புதைகுழிகள் ஓயாதோ?



தருமுசிவராமு: ஒரு கலைஞனின் நினைவாக...

Funny Boy
சர்ச்சைக்குரிய நாவல்
தமிழில் தொடராக



நன்றி - நூலகத்திட்டம்




# இல்லத ஏதிரியுடன் யுத்தம் புரியும் பிரதமர்

– விவேகி

எங்கள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவிடம் எப்போதும் ஒரு நேர்மை-யுண்டு. தனக்குத் தெரியா-தவற்றைத் தெரியாது என்று வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்ற மாதிரிச் சொல்லிவிடுவார். நாட்டில் இரண்டாவது பொறுப்புமிக்க பதவியை வகித்தாலும், கூட மனுஷன் நேர்மைக்குக் கொடுத்த முக்கியத்துவத்தில் தனது பதவிக் கௌவரத்தைக்கூட இரண்டாம் பட்சமாக்-கியவரல்லவா? அல்லது ஒப்புக்காகவேனும் சொல் ஹெய்ம் பிரபாகரனைச் சந்தித்த நிகழ்வு பற்றி "எனக்கு இது பற்றி முன்னரே தெரியும்" என்று ஒரு வார்த்தை கூட சொல்லாமல் அந்த விடயம் தனக்குத் தெரியவே தெரியாது என்று சாதித்தவரல்லவா?

இனவாதம் ஒரு புறம் இருக்கட்டும். விடுதலைப் புலிகளும் பொறுத்த மட்டில் பிரதமர் எப்போதும் நேர்மையானவர் தான். "விடுதலைப் புலிகளை ஒழிக்கும்வரை ஓயமாட்டேன்" என்றார். கிராமங்கள் தோறும் விகாராதிபதிகளின் உதவியுடன் ஒருலட்சம் இளைஞர்களைத் திரட்டி போதிய பயிற்சி கொடுத்து மூன்று வருடங்களுக்குள் விடுதலைப் புலிகளை நசுக்கி விடுவேன்" என்றார். "ஞாபகமிருக்கட்டும் பேச்சுவார்த்தை இடம்பெற்றாலும் யுத்தம் தொடரும்" என்று எச்சரித்தார். யுத்த அமைச்சர் சொல்ல



வேண்டிய வார்த்தைகளை புத்த சாசன அமைச்சரான பிரதமரே கொட்டிவிட்டார்.

எவரும் பிரதமரின் கூற்றுக்களைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை. அரச தரப்பாரும் காதில் போட்டுக் கொள்ளாதபோது விடுதலைப் புலிகளுக்கு என்ன வந்தது. அவர்களும் தாங்கள் தீர்மானித்தபடியே ஒரு தலைப்பட்சமான ஒரு மாத கால யுத்த நிறுத்தத்தை டிசெம்பர் 24ம் திகதி நள்ளிரவு முதல் அமுல் படுத்தப் போவதாக அறிவித்தார்கள்.

பிரதமரல்லவா நாட்டு மக்களுக்கு ஏதாவது சொல்லித்தானே ஆக வேண்டும். "புலிகள் யுத்த நிறுத்தம் செய்தால் நாங்கள் யாருடன் போரிடுவது? இரண்டு கைகள் தட்டினால் தானே ஓசை வரும். ஒரு கையை அசைத்துப் பாருங்கள். ஓசை வரவில்-லையே... எனவே எங்கள் வீரர்களும் போர்புரிய மாட்டார்கள்" என்று அறிவித்து விட்டார்கள்.

"யார் கேட்கிறார்கள். பிரதமரின் சொல்லை?" விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தம் செய்த பிறகு இராணுவத்தினர் மும்முரமாக இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்கள். சட்டப்படி அவர்கள் தான் யுத்த நிறுத்தம் செய்யவில்லையே. எனவே யுத்தத்தை தொடர்ந்து முன்னெடுக்-கும் உரிமை இராணுவத்தினருக்கு தாராள-மாகவே உண்டு. யுத்த நிறுத்தம் செய்து விட்டால் ஜனவரி 24ம் திகதிவரை யுத்தம் செய்யும் உரிமை விடுதலைப் புலிகளுக்கு கிடையவே கிடையாது. எனவே ஒரு தலைப்பட்டசமான யுத்த நடவடிக்கையில் எதிர்பார்ப்பில்லாமல் இலங்கை இராணுவத்-தினர் வெற்றிமேல் வெற்றிகளைக் குவித்து வருகிறார்கள். இராணுவத் தளபதியும் பெருமிதத்துடன் பாராட்டுக்களைத் தெரிவித் திருக்கிறார்கள்.

சற்றும் மனந்தளராத பிரதமருக்கு மக்கள் முன் சொல்வதற்கு இப்போது இரண்டு விதமான கருத்துக்கள் உள்ளன. ஒன்று "உலகத்திலேயே எதிரி இல்லாமல் வான்படை, பீரங்கிப்படை, உதவியுடன் காற்றோடு யுத்தம் செய்த ஒரே இராணுவம் எனது நாட்டு இராணுவம்" என்று மார்தட்டி அறிக்கை விட முடியும். இரண்டாவது "விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்தத்துக்கு பின்னர் இலங்கை இராணுவ யுத்த நடவடிக்-கையில் ஈடுபட்டதாக நான் கேள்விப்பட-வேயில்லை" என்று அழுத்தமாக கூற முடியும். பிரதமர் இரண்டில் எதைச் செய்-வரோ, பொறுத்திருந்து பார்ப்போம்.

மறைந்த அமைச்சர் தொண்டமான் அடிக்கடி அரசியல் தமாஷ் செய்து முழு நாட்டையுமே குஷிப்படுத்தி விடுவதில் வல்லவர். அவர் பேரன் ஆறுமுகம் தொண்-டமான் மட்டும் என்ன குறைந்தவரா. அவரும் ஒரு தமாஷ் செய்து பார்த்திருக்-கிறார். தோட்டத் தொழிலார்களுக்கு 400 ரூபா சம்பள உயர்வு வழங்கத் தாமதமானால் அரசுடன் கொண்டிருக்கும் உறவுகளைப் மறுபரிசீலனை செய்ய வேண்டிவரும் என்றொரு பயமுறுத்தல் தமாஷை பொது-மக்கள் மத்தியில் விட்டிருக்கிறார். அதைக் கேட்டுக் கொண்டிருந்த அப்பாவி ஜனங்-களும். "அடடா நமக்காக அமைச்சர் ஐயா அரசாங்கத்துடன் மோதத் துணிந்துவிட்டாரே" என்று நம்பிக் கைதட்டி மகிழ்ச்சி தெரிவித்திருக்கிறார்கள்.

ஜனங்களின் அப்பாவித் தனத்தில் அரசியல் நடத்துவதில் மலையக அரசியல்-வாதிகள் மகா கெட்டிக்காரர்கள். தன்னையும், தன் குடும்பத்தையும் மாத்திரம் வளர்த்து அறுபது வருடகால அரசியல் செய்து மக்களுக்கு வெறும் உயர்ச்சி நிறைந்த வார்த்தைகளை அள்ளிவிசி - மறைந்து போன தொண்டமானாக இருந்தால் என்ன இன்று அரசியல் நடத்துபவர்களாக இருந்தாலென்ன எல்லோரும் மக்களின் அறியாமையினால் தான் கொடிகட்டிப் பறக்கிறார்கள்.

உண்மையில் மலையகத்தில் இம்மூன்று தமிழ்க்கட்சிகள் எதுவும் பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருக்கவில்லை. மலையகப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களாகவும், பொதுஜன முன்னணி உறுப்பினர்களுமாகவே தெரிவாகியுள்ளார்கள்.

இந்த லட்சணத்தில் ஆறுமுகம் தொண்-டமான் அரசுடனான உறவை மறுபரிசீலனை செய்ய வெளிக்கிட்டால் "ஐயா உள்ளதையும் இழந்து வெறுங்கையாகத்தான்" வீடு வரவேண்டியிருக்கும். நூலை அம்மாவின் கையில் கொடுத்துவிட்டு இங்கே நடனமாடிக் கொண்டிருப்பவர்களுக்கெல்லாம் அரசியல் முறுக்கு என்ன வேண்டிக் கிடக்கிறது?

செல்லச்சாமி அண்ணாச்சி கூட, வீராப்புடன் ஒரு வேண்டுகோள் விடுத்திக்-கிறார். சகல தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பி-னர்களும் அவசரகாலச் சட்ட விவாதம் அடுத்த முறை பாராளுமன்றத்துக்கு வரும்-போது பகிஷ்கரிக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார். அவசரகாலச் சட்டத்தை எல்லாத் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்-களும் எதிர்த்து வாக்களிக்க வேண்டும் என்று கேட்டிருந்தால் துணிச்சல்காரர் என்று பாராட்டியிருக்கலாம்.

எஜமான் போட்ட வெள்ளிச் சங்கிலி-யைக் கழற்ற முடியாமல் கழுத்தில் சுமக்கும் நாய் ஏனைய நாய்களைப் பார்த்து நீங்கள் எல்லோரும் கழுத்தில் வெள்ளிச் சங்கிலி போடுங்கள் அழகாக இருக்கும் என்று கூறியது மாதிரித்தான். இங்கிருந்து செல்லச்சாமி அண்ணாச்சியின் கூற்று.

ரணில் சொல்வதை மட்டும் செய்யும் ஒப்பந்ததுக்குள் இருக்கும் செல்லச்சாமியிடம் தமிழ் மக்கள் வேறு எதைத்தான் எதிர்பாக்க முடியும்? ○

# பிரித்து ஓதுதல்

ஜனவரி 4ம் திகதி இலங்கை வானொலியின் செய்திகளை யாராவது கேட்டிருந்தால் மேலேயுள்ள தலைப்பின் அர்த்தத்தைப் புரிந்து கொண்டிருப்பீர்கள்.

இலங்கை வானொலி தனது முப்பத்தி ஏழாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அதன் 'ரஜரட்ட' சேவையில் ஒரு நாள் முழுவதும் பிரித் ஓதும் நிகழ்ச்சியை ஒழுங்கு செய்துள்ளதாக அந்தச் செய்தியில் ஒரு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை வானொலி என்றால் அது இலங்கையர்கள் அனைவருக்குமான வானொலி மட்டுமா அல்லது சிங்களவர்களுக்கு மட்டுமான அதுவும் பௌத்த சிங்களவருக்கு மட்டுமான வானொலியா என்ற கேள்வியை இந்தச் செய்தி எழுப்பவே செய்தது.

நாட்டில் பல்லின, பல் மத கலாசார மக்கள் வாழ்கின்றார்கள் என்று ஒப்புக்குப் பாடினாலும், இப்படி ஏதாவது நிகழ்ச்சி என்று ஒன்று வந்துவிட்டால் அது 'பௌத்த சிங்கள' விவகாரமாகவே மாறி விடுகின்றது.

பிரித் ஓதுதல், 'பௌத்த மத நம்பிக்கைக்கேற்ப செயற்படல் எல்லாம் ஒன்றும் தவறானவை அல்ல. ஆனால் ஏனைய மக்களும் இந்த நாட்டில் உள்ளனர்: அவர்களுக்கு வேறு நம்பிக்கைகள் இருக்கின்றன என்பது பற்றிய அக்கறை யாருக்கும் இல்லை என்பதே இங்கே சுட்டிக் காட்டப்படுகின்றது.

பிரித் ஓதுதல் என்றாலே பிரித்து ஓதுதல் என்ற எண்ணம் எழுவதற்கு காரணம் வேறொன்றும் இல்லை!

இலங்கை வானொலியின் இதே செய்தியில் இன்னொரு செய்தியும் வெளியானது. அண்மையில் கிழக்கு மாகாணத்தையும் அதை அண்டிய பகுதிகளையும் பெருமளவு பாதிப்புக்கு உள்ளாக்கிய சூறாவளியினால் மக்கள் பட்ட அனர்த்தம் சொல்லும் தரமன்று. வீடிழந்தோர், சொத்திழந்தோர், தமது உறவுகளின் உயிரிழந்தோர் என்று இயற்கையின் அழிவுச் சீற்றத்துக்கு ஆளாகி அவலப்பட்டோர் பற்றியும் அவர்களது துயரம் பற்றியும் அதிகம் சொல்ல வேண்டியதில்லை.

ஒரு நாட்டின் அரசாங்கத்தால் அதுவும் எம்முடையது போன்ற ஒரு பொருளாதார வளம் குன்றிய- இருக்கிற கொஞ்ச நஞ்ச பொருளாதாரத்தையும் யுத்தத்தில் கரியாக்குகிற- நாட்டில் இயற்கை அழிவுகளை தடுத்து எதிர்கொள்ளும் வாய்ப்பு இல்லை என்பதை யாரும் மறுக்க முடியாது: அதற்காக அரசாங்கத்தில் குற்றம் சொல்லவும் யாரும் முற்படவில்லை.

ஆனால், பாதிக்கப்பட்ட மக்கள் தம்மை மீளமைத்துக் கொள்ள உதவ வேண்டாமா? அது ஒரு அரசாங்கத்தின் கடமை அல்லவா?

அந்தச் செய்தி இது தான்:

சரிதான். பாதிக்கப்பட்ட பொலநறுவை மாவட்ட மக்களுக்கு உதவுவது நியாயம் தான்: அவசியமும் கூட. ஆனால் இன்னும் அதிகமாகப் பாதிப்படைந்த தமிழ் முஸ்லிம் மக்கள் அதிகமாக வாழ்கின்ற பகுதிகளின் நிவாரணம் பற்றி ஏன் ஜனாதிபதிக்கு அக்கறை எழவில்லை? குறிப்பாக மிகவும் அதிகளவில் பாதிக்கப்பட்ட திருமலை மாவட்டத்திற்கான நிவாரணம் பற்றி அவர் குறிப்பிடாதது ஏன்?

ஆக, இலங்கையின் ஜனாதிபதி என்பவர் இலங்கையில் வாழும் சிங்களவர்களுக்கு மட்டும் தான் ஜனாதிபதியா? தமிழ் முஸ்லிம் மக்களுக்கு அவர் ஜனாதிபதி இல்லையா?

இல்லைத் தான். அவர் அது பற்றி மூச்சு விடாததற்கு வேறென்ன காரணம் இருக்க முடியும்?

ஆக, பிரித்து- ஓதுதல் என்பதில் ஜனாதிபதியே இறங்கி இருக்கையில் நாம் எப்படி அவருக்கு ஊதுகுழல் சேவகம் செய்யும் இலங்கை வானொலியைக் குறைக் கூற முடியும்?

# மயான அமைதியில் சமாதானம்!

மிருசுவிலில் இராணுவத்தினரால் அடித்தும் வெட்டியும் கொல்லப்பட்ட பின் புதைகுழிகட்குள் போட்டு மூடப்பட்ட எட்டுப் பேரின் கொலைக்குக் காரணமான மூன்று இராணுவச் சிப்பாய்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கொல்லப்பட்டவர்களின் கொலைக்கு இராணுவமே பொறுப்பு என்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. இது தொடர்பான இன்னொரு அடையாள அணிவகுப்பு நாளை நடைபெறவுள்ளதாக இதை எழுதிக் கொண்டிருக்கும் போது கிடைத்துள்ள செய்திகள் தெரிவிக்கின்றன.

கொலை செய்து புதைத்தவர்களை கைது செய்வதும் விசாரிப்பதும் தண்டனை வழங்குவதும் ஒழுங்காக நடப்பது குறித்து சந்தோசம் தான். ஆனால் இந்த நிகழ்ச்சிகள் தொடர்ந்தும் தொடராமல் இருப்பதற்கு என்ன உத்தரவாதம்?

இராணுவத்தை ஆக்கிரமிப்பு நடவடிக்கைக்காக அனுப்பி விட்டு இவ்வாறான சம்பவங்கள் நடக்கக் கூடாது என்று சொல்வதில் என்ன அர்த்தம் இருக்க முடியும்?

விசாரணை செய்யப்பட்டு குற்றவாளிகளாக இனங்காணப்படுபவர்களுக்கு என்ன நடக்கிறது? அவர்கள் குற்றவாளிகள் தான் என்று உண்மையாகவே கருதப்படுகிறார்களா? அல்லது சிங்கள இனத்தின் மானம் காத்த வீரர்கள் என்று போற்றப்படுகிறார்களா?

அரசாங்கத்தின் இன்றைய 'இனவாத யுத்த அரசியல்' நியாயப்படி அவர்களைப் பாராட்ட வேண்டும். ஆக்கிரமிப்பின் கொடுமையை யாழ் மண்ணில் எழுதுவதன் மூலம் அடிமைத்தனத்திற்கும் சரணாகதிக்கும் அந்த மக்களை தயார்ப்படுத்த முனைந்து கொண்டிருப்பவர்கள்.

அரச கோட்பாட்டுக்கு உண்மையில் சேவகம் செய்பவர்கள்.

இந்த உண்மையை சிங்கள ஊடகங்கள் செய்தியிட்டிருக்கும் முறையைப் பார்த்தாலே விளங்கிக் கொள்ளலாம்.

அரசாங்கம் இன்றை வரை அது தொடர்பாக ஒரு 'அதிர்ச்சியோ','வியப்போ' வெளியிடவில்லை.

ஆம். அதற்கு அது வியப்பல்ல! அது விரும்பியதும் இதைத் தான் என்று கொள்ளலாமா?

-இவை சரியாக விளங்கிக் கொள்ளப்படாவிட்டால்

செம்மணி, மிருசுவிலுடன் முடியாது புதைகுழிகள். அவை பரவும். எல்லா இடங்களிற்கும் எங்கெல்லாம் அதிகாரம் ஆதிக்கம் செல்லும் எல்லா முடுக்குகட்கும் தொடரும்....

தொடரட்டுமே... யாருக்கு அக்கறை? உண்மையில்,

அதுதானே தேவை அரசுக்கும்.

அதன் சமாதானமே 'மயான அமைதி'ச் சமாதானம் தானே! ○

நன்றி - நூலகத்திட்டம்



## மிருசுவில்:
# மனிதப் புதைகுழிகட்டு முடிவே இல்லையா?

– குருகுலன்

கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது என்பது பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். பூதம் என்று ஒன்று இருக்கிறதோ இல்லையோ, வடபகுதியில் பூதங்களின் நடமாட்டம் தாராளமாக உள்ளது. அவ்வப்போது புதைகுழிகளிலிருந்தும், மலகூடக் குழிக்குள்ளிருந்தும் மீட்கப்படும் எலும்புக்கூடுகளே வட பகுதிகளில் பூதங்களின் நடமாட்டம் உள்ளது என்பதை ஊர்ஜிதம் செய்கிறது.

இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் எங்காவது ஒரு கொலைச் சம்பவம் நடைபெற்றால் அது ஒரு பரபரப்பான செய்தி. ஆனால், இன்று வடக்கு கிழக்கில் ஒருவாரகாலப் பகுதியில் ஒரு கொலையாவது இடம்பெறவில்லையென்றால் அது ஒரு செய்தி என்று சொல்லுமளவுக்கு நிலை மாறி விட்டது.

யாழ்ப்பாணம் படையினரின் கட்டுப்பாட்டில் வந்த பின்னர் 657 இளைஞர்கள் காணாமல் போனார்கள். இவர்களில் 400 பேர்கள் வரையில் செம்மணிப் பகுதியில் கொன்று புதைக்கப்பட்டதாக சோமரத்ன ராஜபக்ஷ என்ற சிங்களச் சிப்பாய் மரண



தண்டனையிலிருந்து தப்பும் நோக்குடன் கூறியதைத் தொடர்ந்து செம்மணிப்பகுதி தோண்டப்பட்டு 15 எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டன. இந்திய இராணுவம் கொன்று புதைத்ததாகக் கருதப்படும் எலும்புக்கூடுகள் யாழ் துரையப்பா விளையாட்டரங்குப் பகுதியில் ஆறு எலும்புக்கூடுகள் மட்டும் மீட்டகப்பட்ட நிலையில் மிகுதி தோண்டப்படாமல் உள்ளது.

சாவகச்சேரியில் புலிகளின் கட்டுப்பாட்டுக் காலத்தில் 15 வரையான எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டன. இந்த எலும்புக் கூடுகளும் இந்திய இராணுவத்தால் கொல்லப்பட்ட பொதுமக்களினுடையதென்றே கருதப்படுகிறது. கிளிநொச்சி புலிகளிடமிருந்து வீழ்ந்த பின்னர் கிளிநொச்சி இராணுவ முகாமுக்கு அருகிலுள்ள மலகூடக்குழி ஒன்றிலிருந்து 60 எலும்புக் கூடுகள் புலிகளால் மீட்கப்பட்டுள்ளன. இவையும் இப்பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது படையினரிடம் சிக்கிய பொதுமக்களினுடையதாக இருக்கலாமோ என நம்பப்படுகிறது. இவற்றைவிட ஆங்காங்கே அரியாலை, புன்னாலைக்கட்டுவான், வடமராட்சி போன்ற இடங்களில் எலும்புக்கூடு, மண்டையோடு என்பன மீட்கப்பட்டுள்ளன.

இந்த வரிசையில் கடந்த 25.12.2000 அன்று மிருசுவில் பகுதியில் புதைகுழி ஒன்றிலிருந்து 8 சடலங்கள் மீட்கப்பட்டுள்ன. இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாக கடந்த மே மாதம் புலிகளுக்கும், இராணுவத்திருக்குமிடையே இடம்பெற்ற மோதலையடுத்து இடம்பெயர்ந்து வந்து நாவலர் மடம் பகுதியில் வசித்துவந்த இவர்கள் கடந்த 19ம் திகதி தமது வீடுகளைப் பார்க்கச் சென்றிருந்தார்கள். எஸ், விலராஜ் (4...), அவரது மகன் பீரதீபன் (15), இன்னொருமகன் பிரசாந்த் (5) தேவகி குலசிங்கம் (2..) கதிரன் ஞானச்சந்திரன் (35), இவரது மகன் .... தமது வீடுகளைப் பார்வையிடச் சென்றார்கள்.

இவர்கள் தமது வீடுகளைப் பார்வையிட்டு விட்டு தேங்காய் பறித்து உரித்துக் கொண்டு கொய்யாப்பழம் பிடுங்கிக் கொண்டிருந்தவேளை அங்கு வந்த படையினர் இவர்களைக் கைது செய்து கண்களைக் கட்டி மோசமாகத் தாக்கியுள்ளானர். பின்னர் ஒவ்வொருவராகத் தூக்கி முட்கம்பி வேலியால் வீசியுள்ளனர். இவ்வாறு தூக்கி வீசியபோது மகேஸ்வரன் (ராஜாவின் கண்கட்டு அவிழ்ந்து விட்டது., பார்த்தால் வாளுடன் சிப்பாய் நிற்பது தெரிந்தது. அத்துடன் முனகல் சத்தங்களும் கேட்டன. நிலைமையை உணர்ந்துகொள்ள ராஜாராம் ஓட்டமெடுத்தார். சிப்பாய்களும் துரத்தினர். ஆனால், சுடவில்லை. ஒருவாறு ராஜாராம் தப்பிவிட்டார் ஏனைய எட்டுபேரும் கொல்லப்பட்டு விட்டனர். இராணுவத்தினர் அடிகாயங்களுக்கு மருந்து எடுபதற்காக இவர் மந்திகை வைத்தியசாலைக்குச் சென்றதைத் தொடர்ந்தே சம்பவம் வெளிச்சத்துக்கு வந்தது. இதைத் தொடர்ந்து விசாரணை செய்த பொலிசார் இவரிடம் தான் இராணுவத்தினரை அடையாளம் காட்டத் தயார் எனக்கூறியுள்ளார். இதனையடுத்து இப்பகுதி கிராம சேவகரையும் இவரையும் அழைத்துச் சென்ற பொலிசார் இவரை வந்த பாதையிலேயே போகுமாறு பணித்துள்ளனர். இவர்கள் போய்ப்பார்த்தபோது கொலையுண்ட நபர்கள் அப்புறப்படுத்தப் பட்டிருந்தனர். ஆனால், தேங்காய் உரித்த அலவாங்கு மட்டும் இருந்தது. அலவாங்கை அடையாளம் காட்டினார் ராஜாராம்.

அருகிலிருந்த மலசல கூடங்களில் ஒன்று துப்பரவு செய்யப்பட்டு புதிய மலசல கூடம்போல் காணப்பட்டது. மற்றையது பாவிக்கப்பட்டிருந்தது. சற்றுத் தூரத்தில் பச்சைப்பனையோலை காணப்பட்டது. பனையோலைக்குக் கீழ் காய்ந்த இரத்தம் காணப்பட்டது. அருகிலிருந்த நன்னீர்க் கிணற்று நீர் நீலநிறமாகக் காணப்பட்டது.

அன்றைய தினம் ரோந்து நடவடிக்கையிலீடுபட்ட படையினரை அழைத்து வருமாறு விசாரணைகளை மேற்கொண்டு வந்த படையினர் உத்தரவிட்டனர். அவர்களில் இருவரை ராஜாராம் அடையாளம் காட்டினார். இவர்கள் தான் என்று எப்படி உறுதியாகச் சொல்கிறாய் என்று கேட்டதற்கு அவர்களது கண்களை வைத்தே (பூனைக்கண்) அவர்களை அடையாளம் கண்டு கொண்டதாக ராஜாராம் தெரிவித்துள்ளார். பின்னர் படையினரை விசாரித்ததில் தாம் அன்று தான் வன்னியிலிருந்து இடமாற்றம் பெற்று வந்ததாகவும், படையினர் கூறியுள்ளனர். இவர்களைக் கண்டதும் புலிகள் என நினைத்துத் தாக்கியபோது தாக்கியதில் ஒருவர் இறந்துவிடவே ஏனையோரையும் கொலை... தப்பியோடிபோதும் அவரைச்சுட்டால் சூட்டுச்சத்தம் மேலதிகாரிகளுக்கு கேட்டுவிடுமோ என்ற பயத்தினாலேயே சுடாமலிருந்துள்ளனர்.

படையினர் அடையாளம் காட்டியதைத் தொடர்ந்து மிருசுவில் பண்ணைப் பகுதியில் புலிகளால் முன்பு அமைக்கப்பட்டிருந்த கலைமகள் பாலர் பராமரிப்பு நிலைய கிளை என்ற இடத்தில் புதைகுழி ஒன்றிலிருந்து எட்டுச் சடலங்களும் மீட்கப்பட்டுள்ளன. கழுத்து வெட்டப்பட்ட நிலையில் கைகள் கட்டப்பட்ட நிலையிலேயே இச்சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. இவர்களில் ஐந்து வயதுச் சிறுவனான பிரசாந்தின் கால் முறிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதி ஆசைப்பிள்ளை ஏற்றம் முதல் நாகர்கோவில் வரையான பகுதியை இணைக்கும் முன்னரங்கப்படை நிலைக்கான பின் தளம் இச்சம்பவம் பற்றி யாழ் மாவட்ட ஈ.பி.டி.பி. பா.உ ஜெகனிடம் முறையிட்ட போது அவர் ஏன் புலிகள் இவர்களைக் கடத்தியிருக்கக் கூடாது எனப் புதைகுழி தோண்டப்பட்டு சடலங்கள் எடுக்கப்பட முன்னர் காணாமல் போனதாகக் கருதப்பட்ட போது கூறியிருந்தார். ஆயினும் பின்னர் இப்புதைகுழிகள் தோண்டப்படுவதில் ஈ.பி.டி.பி.யினர் அக்கறையுடன் செயற்பட்டுள்ளனர். இந்த மனிதப் புதைகுழிக்கு முடிவே இல்லையா?

# யாழ் பல்கலைக்கழகத்தில் எழுச்சிப் போராட்டம்!

– சரிதன்

கடந்த 29.12.2000 அன்று வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ் பல்கலைக்கழக முன்றிலிலுள்ள திறந்த வெளியில் யாழ். பல்கலைக்கழக சமூகத்தின் ஏற்பாட்டில் "தமிழ் மக்களின் அபிலாசை" என்ற எழுச்சி நிகழ்வொன்று இடம்பெற்றது. யாழ், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் ஆனோல்ட் அவர்கள் தலைமை தாங்கினார். இந்நிகழ்வில் யாழ் பல்கலைக்கழக சமூகத்தினர் அனைவரும் தமது அபிலாசை "சுயநிர்ணய உரிமை" என்பதை தாங்கள் நிகழ்த்திய உரைகள் மூலம் வெளிப்படுத்தினர். இந்நிகழ்வில் யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பொ. பாலசுந்தரம் பிள்ளை மற்றும், பேராசியர் விரிவுரையாளர்கள் ஒவ்வொரு பீடங்களையும், சேர்ந்த மாணவர் பிரதிநிதிகள், என்போர் தங்களின் அபிலாசைகளை ஒரே குரலில் வெளிப்படுத்தினர். அத்துடன் அங்கு கூடி நின்ற ஆயிரக்கணக்கான மாணவர்கள் ஒரே குரலில் தமது அபிலாசை சுய நிர்ணய உரிமை என்றும், அரசே யுத்தத்தை நிறுத்தி புலிகளுடன் பேசு, என்றும், கோசமிட்டனர். அதனைத் தொடர்ந்து யாழ். பல்கலைக்கழக சமூகத்தினராகிய நாம் இன்று எமது அபிலாசைகளை வெளிப்படுத்தியுள்ளோம். மிக விரைவில் இதே இடத்தில் ஒட்டுமொத்த தமிழ் மக்களின் அபிலாசைகளை இது வெளிப்படுத்தும் எனவும், அவர்கள் தெரிவித்தனர். இதை அவர்கள் எவ்வாறு செயற்படுத்துகின்றனர்?

முதலில் அவர்கள் தமக்குள் சிறு சிறு குழுக்களாக பிரிந்து தமிழ் மக்களின் அபிலாசைகள் என்றால் என்ன? சுயநிர்ணய உரிமை என்றால் என்ன? தேசிய இனம் என்றால் என்ன? போன்ற கேள்விகளுக்குரிய விளக்கங்களில் தெளிவடைகின்றனர். தெளிவடைந்த பின்னர் குழுக்கள் குழுக்களாக பிரிந்து யாழ் சமூகத்திடம், இக்கருத்துக்களை எடுத்துச்செல்லவுள்ளனர். அந்த அடிப்படையில் ஒவ்வொரு நாளும் இந்த எழுச்சி நிகழ்வு யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அத்துடன், முதற்கட்டமாக அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு சென்று அங்கு இக்கருத்துக்ளை விளக்கியதைத் தொடர்ந்து ஆரச சார்பற்ற நிறுவனங்களும், தற்போது இவர்களுடன் இணைந்துள்ளன. அவ்வாறு யாழ்ப்பாணத்திலுள்ள சகலரும், இவர்களுடன் இணைய வேண்டும்.

நாம் அபிலாசை, சுயநிர்ணய உரிமை, தேசிய இனம் என்பன பற்றிப் பார்ப்போமானால் ஒவ்வொரு மனிதருக்கும் அடிமனதில் உறங்கிப்போய் கிடக்கின்ற ஒரு ஆசைதான் அபிலாசையாகும். அதாவது தான் சுதந்திரமாக வாழ விரும்பும், ஒருவரின் ஆசைதான் அபிலாசை இந்த அபிலாசைதான் சுயநிர்ணய உரிமை. ஒரு தேசிய இனமானது தனது தலைவிதியினை தானே நிர்ணயிக்கக்கூடிய அதிகாரங்களை கொண்டிருப்பதே சுயநிர்ணய உரிமையாகும்.

அத்துடன் இந்தக்கால கட்டத்தில் யாழ் சமூகம் தமது இந்த அபிலாசையை ஏன் வெளிப்படுத்த முனைகின்றனர் என நோக்கினால், அண்மையில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா அவர்கள் கூறிய ஒரு கருத்து ஞாபகத்துக்கு வரும்.

யாழ்ப்பாணத்தில் வசிக்கும் பெரும்பாலானவர்கள் அதாவது எண்பது வீதத்தினர் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருப்பதையே விரும்புகின்றனர் என தெரிவித்திருந்தார். எனவே இக் கருத்தினை பொய்ப்பிக்கும் நோக்குடனும், ஐரோப்பிய யூனியன் தனது உதவித் தொகை வழங்குவதை தள்ளிப்போட்டிருப்பதனாலும், இக்கூட்டத்தில் தமது அபிலாசைகளை வெளியுலகிற்கு வெளிப்படுத்தி சந்திரிகா அரசினை யுத்தத்தை நிறுத்தி புலிகளுடன், பேச நிர்ப்பந்திப்பதற்குமாகவே இவ்வெழுச்சிப் போராட்டத்தினை ஏற்பாடு செய்துள்ளனர்.

இவ் எழுச்சிப் போராட்டமானது தொடர்ச்சியாக யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதன் இறுதி நாளான தை 14 அல்லது தை 15 ம் திகதியில் "பொங்கு தமிழ்" என்ற பெயரில் யாழ். பல்கலைக்கழகத்தின் மாணவர்கள், ஆசிரியர்கள், அரச ஊழியர்கள், மற்றும், அரச சார்பற்ற நிறுவங்கள் வணிகர்கள், விவசாயிகள், கட்டட தொழிலாளர்கள், பெண்கள் எனப் பலதரப்பட்ட மக்களையும் யாழ். பல்கலைக்கழகத்தின் முன்றலில் உள்ள திறந்த வெளியிலேயே ஒன்று கூடச்செய்து அங்கு அவர்கள் எல்லோரையும் ஒரே குரலில் தமது அபிலாசை சுயநிர்ணய உரிமையே என கூறச்செய்வதுடன், யுத்தத்தை நிறுத்தி புலிகளுடன் பேசுமாறும் வேண்டவுள்ளனர். இவ்வெழுச்சி கூட்டத்தில் வெளிப்படுத்தப்படும் விடயங்கள் உடனடியாக இணையம், தொலைமடல், மின் அஞ்சல் போன்ற தொலைத் தொடர்பு ஊடகங்கள் மூலமாக இலங்கை ஜனாதிபதி, பிரதம மந்திரி, மற்றும், ஐரோப்பிய யூனியன், இந்திய, அமெரிக்கா, பிரிட்டன், நோர்வே போன்ற வெளிநாட்டு தூதரகங்களுக்கும், தென்னிலங்கையிலுள்ள ஏனைய அமைப்புகளுக்கும் தெரியப்படுத்தப்படவுள்ளது. இதற்கு யாழ். தமிழ் சமூகத்தின் பூரணமான ஆதரவு பெறுவதற்கு யாழ். பல்கலைக்கழக சமூகம் தொடர்ச்சியான முயற்சிகளில் இறங்கியுள்ளது பாராட்டப்படவேண்டிய ஒன்றே. ஏனெனில், இதுவரையும் ஏதும் போராட்டங்கள் என்றால், யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மட்டுமே ஈடுபட்டு வந்துள்ளனர். ஆனால், இன்று யாழ். பல்கலைக்கழக மாணவர்களுடன் ஆசிரியர் சங்கம், ஊழியர் சங்கம் என யாழ். பல்கலைக்கழக சமூகமே ஒட்டுமொத்தமாக திரண்டு யாழ் தமிழ் மக்கள் அனைவரையும் தம்முடன் ஒன்றிணைக்கத் தொடங்கியுள்ளது. இவர்களின் இந்த முயற்சியானது வெற்றி பெறுவது யாழ்ப்பாணத்தில் வசிக்கும் ஒவ்வொருவரதும் கையிலும், தான் தங்கியுள்ளது.

மலர்ந்த இந்தப் புத்தாண்டில் யாழ் மண்ணில் நடைபெறவுள்ள முதலவாது சமாதானத்தை முன்னெடுக்கும் "பொங்கு தமிழ்" என்ற எழுச்சி வெளியுலகத்தவர்களுக்கு தெரியப் படுத்தப்படுவதுடன், சமாதானத்திற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதற்கும் பூரணமான அழுத்தத்தை வழங்க வேண்டும். இது வெற்றியடைய யாழ்ப்பாணத்தில் வசிக்கக்கூடிய ஒட்டுமொத்தமான தமிழனும் ஒத்துழைப்பான் என நம்புவோம்.

நன்றி - நூலகத்திட்டம்



## யாழ்: களஞ்சியப் பொறுப்பாளர் மீது சந்தேகம்!

– எழுவான்

கடந்த மே மாதம் புலிகளுக்கும் படையினருக்கும் இடையே இடம்பெற்ற மோதலையடுத்து யாழ் செயலக உணவுக் களஞ்சியம் உடைத்து அங்கிருந்த பொருட்கள் சூறையாடப்பட்டன. இத்திருட்டுச் சம்பவம் தொடர்பாக 37 நபர்கள் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப் பட்டனர்.

இத்திருட்டுச் சம்பவம் தொடர்பாக யாழ் செயலக களஞ்சியப் பொறுப்பானளர் இ. கதிர்காமநாதன் நீதிமன்றில் சாட்சியமளிக்கையில் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான ரூபா களவுபோனதாகக் கூறினார். பின்னர் நாற்பது இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டதாக மதிப்பீடு செய்யபட்டதாகக் கூறினார்.

இவரது சாட்சியத்தில் முன்னுக்குப் பின் முரண்பாடு காணப்படுவதை அவதானித்த நீதிபதி இ.த. விக்கினராஜா இவரைத் தடுத்து வைக்குமாறு உத்தரவிட்டார். இதற்கு முன்பாக யாழ் செயலக திட்டமிடல் பணிப்பாளர் எஸ். மகாலிங்கம் நீதிமன்றுக்கு அழைக்கப்பட்டு அவரது வாக்கு மூலமும் பெறப்பட்டது.

1979ஆம் ஆண்டு 15ஆம் இலக்க குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் பிரிவு 269(1)இன் கீழ் 30.12.2000 தொடக்கம் களஞ்சியப்ப பொறுப்பாளர் இ.கதிர்காமநாதன் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இவ்வழக்கின் தொடர் நடவடிக்கை சம்பந்தமாக சட்டமா அதிபரின் அறிவுத்தல் வரும் வரை தன்னால் இவ்வழக்குத் தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்க முடியாது என நீதவான் இ.த.விக்கினராஜா தெரிவித்தார். களஞ்சியப் பொறுப்பாளர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதால் யாழ் குடாநாட்டிலுள்ள ஒன்றரை இலட்சம் மக்களுக்கு நிவாரணம் வழங்க முடியாது என யாழ் செயலக திட்டமிடல் பணிப்பாளர் எஸ். மகாலிங்கம் தெரிவித்தார்.

யாழ் குடாநாட்டிலுள்ள கஷ்டப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்க வேண்டிய பொறுப்பு யாழ் மாவட்ட அரசாங்க அதிபருடையது என்றும், இதனை எக்காரணம் கொண்டும் தட்டிக்கழிக்க முடியாது என்பதும் இந்த நிதிமன்றத்தின் நிலைப்பாடாகும் என்று தெரிவித்த நீதிவான் நிவாரணம் வழங்கும் பொருட்டு கதிர்காமநாதனை அரச களஞ்சியத்திற்கு அழைத்துச்செல்ல உத்தரவிட்டார்.

களஞ்சியப் பொறுப்பாளரைப் பிணையில் விடுமாறு கோரி யாழ் நதிமன்றத்தில செய்யப்பட்ட விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. இதனையடுத்து வவுனியாவில் இயங்கும் வடமாகாண மேல் நீதிமன்றில் பிணை விண்ணப்பம் செய்யப்பட்டது. இவரை 25 ஆயிரம் ரூபா சீரப்பிணையிலும், 25 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும் விடுதலை செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இவ்வாறு அவரை விடுவித்த யாழ் நீதிமன்றம் தினமும், காலை 9 மணிக்கு யாழ் பொலிஸ் நிலையம் சென்று கையொப்பம் இடவேண்டும் என உத்தரவிடப்பட்டது. பொலிஸ் இந்த விடயத்தில் அக்கறையின்றி இருப்பாதாக விசனம் தெரிவித்த் நீதிபதி நீதிமன்றத்தின் மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கை வீண்போகாதவாறு நீதிமன்றத்தின் கட்டளையை பொலிசார் உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என உத்தரவிட்டார்.

பொலிசார் இது விடயத்தில் நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில் யாழ்ப்பாணத்தில் நீதிமன்றங்கள் தொடர்ந்து இயங்க வேண்டுமா என்ற சந்தேகம் எழுகிறது எனவும் நீதவான் கூறினார்.

பொலிசார் நீதிமன்றக் கட்டளைப்படி விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். விசாரணைகளின் முடிவில் உயரதிகாரிகள் சிலர் மாட்டப்படலாம்.

⊙

## யாழ் மக்கள்: சுழற்சி முறையில் இடப்பெயர்வு!

– எழுவான்

யாழ்ப்பாணத்தின் ஒவ்வொரு பகுதி மக்களும் குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை சுழற்சிமுறையில் இடம் பெயர்ந்து வருகின்றனர். யாழ்ப்பாணத்தில் ஒரு தடவையேனும் இடம் பெயராதவர்களே இல்லை. 1995ம் ஒக்டோபர் 31ம் திகதி இடம்பெற்ற யாழ்ப்பாண இடப்பெயர்வையடுத்து வலிகாமம் பகுதி மக்களனைவரும் தென்மராட்சிக்கு இடம் பெயர்ந்தனர்.

இதனால் தென்மராட்சியில் அகதி முகாம்கள் அதிகரித்தன. அகதி முகாம்களுக்கு தார் பரலில் மலசல கூடம் அமைத்துக் கொடுக்கும் பணியில் யாழ் மாநகர ஆணையாளர் பாலசிங்கமும் பொறியியலாளர் ராமதாசும் ஈடுபட்டானர். இத்திட்டத்திற்கு சர்வதேச தொண்டர் ஸ்தாபனங்களும் ஒத்தாசை வழங்கின. இதனால் சாவகச்சேரி நகரம் துப்பரவாகக் காட்சியளித்தது.

கடந்த மே மாதம் தென்மராட்சியில் இடம்பெற்ற மோதல்களையடுத்து தென்மராட்சி மக்கள் இடம்பெயர்ந்து ஆனைக்கோட்டை, மானிப்பாய் பகுதிகளில் முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர். இந்த முகாம்களில் உள்ள மலசலகூடங்கள் நிரம்பி வழிவதாக பத்திரிகைகளில் செய்தி வெளிவந்துள்ளது.

000

கடந்த வருடத்தில் யாழ் குடாக்கடல் நீரேரியில் மீனவர்கள் மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்ட மொத்த நாட்களின் எண்ணிக்கை 125 மட்டுமே. இந்த நிலையில் வடபகுதி புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் யாழ்ப்பாணத்தில் படகுத் தொழிற்சாலை ஒன்றையும் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். வாழ்க அமைச்சர் பணி.

000

யாழ்ப்பாணம் பலாலி வீதியில் அடிக்கடி இராணுவ வாகனங்கள் போய் வருவது வழக்கம். இவ்வாறு இராணுவ வாகனங்கள் போய்வரும்போது சந்திகளில் நிற்கும் இராணுவத்தின் வீதியால் போவோர் வருவோரை வாகன அணிபோய் முடியும் வரை மறித்து வைத்திருப்பது வழக்கம். கடந்த புது வருடத்தினத் தின்றும் பச்சைக் கண்ணாடிகளால் மூடப்பட்ட வாகனம் ஒன்று வேகமாக வந்தது. கந்தர் மடம் சந்தியில் நின்ற படையினரும் வீதியின் இருமருங்கும் வந்தவர்களை நிறுத்தி வைத்திருந்தனர். வாகனம் படையினரைத் தாண்டிச் சென்றதும் சிப்பாய்கள் ஆளை ஆள் பார்த்துச் சொன்னார்கள் அட ஈ.பி.டி.பி..

000

மிருசுவில் பகுதியில் எட்டுபொதுமக்கள் படையினரால் கொல்லப்பட்டது தெரிந்த விடயம். இவர்கள் அகதி முகாம்களிலிலேயே வசித்து வந்தனர். இவர்களின் மரணச் சடங்கின் போது கடும் மழை காரணமாக நிலத்தில் வெள்ளம் காணப்பட்டது. உரப்பைக்கூரை தண்ணீர் தேங்கி நிலத்தில் முட்டுவது போலக்காணப்பட்டது. இந்த அவலத்தின் மத்தியிலும் அங்கு நின்ற ஈ.பி.டி.பி தோழர்கள் எடுக்க விடாமல் மறித்துக் கொண்டிருந்தனர். வீடியோக்காரன் வரவேண்டுமாம்.

⊙

## இரண்டு பார்வைகள்

அலுவலகத்திற்கு வந்த நண்பர் ஒருவருடன் பேசிக் கொண்டிருந்தேன். கிட்டத்தட்ட மூன்றாண்டுகளுக்கு மேலாக கொழும்பில் வசித்து வரும் ஒருவர். அரசியலில் ஆழ்ந்த ஈடுபாடும் செயற்பாட்டு அக்கறையும் கொண்ட பழைய இடதுசாரி அவர். தான் யாழ்ப்பாணம் திரும்பிப் போக இருப்பதாகச் சொன்னார்.

'ஏன் திடீரென்று' என்று கேட்டேன் நான்'.

'இல்லை... இஞ்சை நான் வந்தது எனது மகளின் திருமண விடயமாக. அது முடிந்து விட்டது. இனியும் இங்கு இருக்க வேண்டிய அவசியம் இல்லை...'

'அது சரிதான். ஆனால் அங்கே இப்பெல்லாம் சண்டை நடக்குதே?'

'சண்டை நடந்தாலும் அங்கை பரவாயில்லை. சண்டை நடக்கிற நேரம் தவிர நாங்கள் எங்கடை கால்லை நிற்கலாம் - நிமிர்ந்து நிக்கலாம். இந்தியனாமி இருக்கேக்கையும் சரி, பிறகும் சரி எங்களாலை துணிஞ்சு கதைக்க முடிஞ்சுது....'

அவர் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருந்தார்.

"இஞ்சையெண்டால் இவங்கள் ஒவ்வொருநாளும் மனிசரை அவஸ்தைப்படுத்திறாங்கள். ஒவ்வொரு செக் பொயின்றிலையும் தலையைக் குனிஞ்சு ஒரு குற்றவாளியைப் போல பதில் சொல்ல வேண்டிக்கிடக்குது...."

"ஆனால், அங்கையும் இப்ப செக்கிங் இருக்குதுதானே?"

"இருக்குதுதான். ஆனால், அங்கை அது எங்கடை இடம். செக் பண்ணிறவங்கள் அந்நிய ஆக்கிரமிப்பாளர் என்ற உணர்வு எங்களிடம் இருக்கும். எங்களுக்கு துணிந்து கதைக்க முடியும். நாங்கள் குற்றவாளிகள் போல தலைகுனிஞ்சு இருக்கத் தேவையில்லை. எங்கள் மீதான நெருக்கடிகளை செய்கிற அவர்களைத்தான் பயந்தாலும் நாங்கள் குற்றவளிகளைப் பார்ப்பது போலப் பார்ப்போம். இஞ்சை அப்பிடியே இல்லையே. இஞ்சை நாங்கள் அவங்கடை இடத்திலை இருக்கிறம். ஞாயம் கதைக்க முடியாது...."

'முன்பு ஒருதடவை இங்கு வந்த நண்பர் ஒருவரும் இதைச் சொன்னார். இஞ்சை வந்திருக்கிற ஒவ்வொரு நாளும் தான் தன்னை ஒரு இரண்டாம் தர பிரஜையாக உணர்வதாக. தான் தமிழன் என்பதற்காகவே விசாரிக்கப்படுவதை, மிரட்டப்படுவதை, சந்தேகிக்கப்படுவதை சகிக்க முடியவில்லை என்று அவர் சொன்னார்'.

- நான் பதிலுக்கு சொன்னேன்.

ஓமோம். அது உண்மைதான். ஆனால், அங்கே அந்தப் பிரச்சினை இல்லை. தமிழன் என்பதற்காக எங்களை குறிப்பாக அவன் இம்சைப் படுத்துவதில்லை. அல்லது நாம் அப்படி உணர்வதில்லை. ஒரு ஆக்கிரமிப்பாளர் என்ற அடிப்படையில் தான் அவன் செயற்படுகிறான். இது நிச்சயமாக வேறுபாடுதான். தவிரவும் அது எங்கடை நிலம். அங்கையிருந்து என்ன செய்தாலும் அதிலை ஒரு சந்தோசமும் திருப்தியும் இருக்கு...."

நான் அவரை மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

இனவெறி யுத்தம் நடந்தாலும் கூட, யுத்தப் பிரதேசத்தில் வாழ்பவர்கள் அதனால் பாதிக்கப்பட்டுக் கொண்டிருந்தாலும் கூட, அவர்கள் அங்கே தங்களை இரண்டாம் தரப் பிரஜையாக உணரவில்லை! அவர்கள் ஆக்கிரமிப்பை எதிர்க்கிறார்கள். அதற்காக போராடுகிறார்கள்.

எவ்வளவு பெரிய ஒரு உண்மை இது என்று தோன்றியது.

இதை நான் எனது இன்னொரு நண்பரிடம் சொன்னேன். அவர் சொன்னார்: 'என்னைப் பொறுத்தவரை இஞ்சை அவன் நடந்து கொள்கிற விதம் எனக்கு சிரிப்பூட்டுகிறது. இது அவங்கடை இடம். நாங்கள் வந்து நிற்கிறம். அவனை எப்பிடி ஏமாற்றி பொய் சொல்லி நாங்கள் இங்கு பிழைத்துக் கொள்ள வழியைப் பார்ப்போமா இரண்டாம் தர மூன்றாம் தரப் பிரஜை என்று சொல்லிக் கொண்டிருப்போமா?

'அப்ப அங்கை போனால்'

'அங்கை போனால் எனக்கு கோபம் வருகுது. என்ரை இடத்திலை நிண்டு இவனென்ன நாட்டாமை பண்ணிறது எண்டு. குறைந்தபட்சம் ஒரு கல்லாவது எடுத்தெறிஞ்சு ஒருதன்ரை மண்டையையாவது உடைத்தால் என்ன என்று தோன்றுகிறது.....

என்ன வேறுபாடான சிந்தனைகள்: பார்வைகள்!

இதற்குமேல் நான்பேசவில்லை. பேச ஒன்றும் இருக்கவில்லை. கருத்துக்கள் இரண்டும் வெளிப்படுத்துகிற உண்மை ஒன்றுதான். இவர்கள் தங்களது பகுதியைத்தான் தங்களது நாடு என்று உணர்கிறார்கள்.

தமிழ் மக்கள் அனைவரதும் மனோநிலையும் இந்த இரண்டில் ஒன்றுதானோ என்னவோ? அல்லது மூன்றாவதாக ஒன்று இருக்குமோ? வாசகர்கள் தான் சொல்ல வேண்டும்!

## வரலாறு படியுங்கள் தளபதி!

தோல்வியும் வெற்றியும் யுத்தத்தில் சாதாரணமானது தான். ஆனால், யார் வெற்றி பெறுவது யார் தோல்வி பெறுவது என்பது எப்போதுமே ஒரு முக்கியமான விடயமாகவே இருந்து வருகிறது. யுத்தத்தின் வெற்றிகளை தீர்மானிப்பவை படைபலம், ஆயுதபலம், மற்றும் தொழிற் தேர்ச்சி என்பன மட்டும் தான் என்று நம்பிய பலர் இச்சிறப்புகள் நிறைய இருந்தும் தோல்வியைத் தழுவியிருக்கிறார்கள்.

எந்த ஒரு யுத்தத்தையும் எம்மால் வெல்ல முடியும். யுத்த இயந்திரத்தின் பின் சரியான ஆள் இருப்பாரானால் அது சாத்தியம் என்கிறார் கடற்படை தளபதி தயா சந்தகிரி.

பாவம். அவர்! இவ்வளவு காலமும் சரியான ஆள் யாரும் இருக்கவில்லை என்ற நம்பிக்கையுடன் பேசுகிறார்.

ஆனால், துரதிர்ஷ்டவசமாக இவர் கூறுவது போன்ற காரணம் மட்டுமே யுத்தததில் வெற்றியை தந்துவிடுவதில்லை.

அதற்கு நியாயம் என்ற ஒரு அம்சமும் இருக்கிறது என்பதை வரலாறு கூறியிருக்கிறது.

சந்த சிரி வரலாற்றை புத்தகங்களில் படிக்கவில்லைப் போலும். பரவாயில்லை. அவரது அனுபவமாவது அதை அவருக்கு கற்றுக் கொடுக்கட்டும்!

நன்றி - நூலகத்திட்டம்



# சமாதானத்தின் எதிர்காலம் இன்னமும் புலிகளின் கையில்தான்!

- நாசமறுப்பான்

“பயங்கரவாதத்தை ஒடுக்கி யுத்தத்தை வெற்றி கொள்வது தான் எங்களுடைய இலக்கு. இதற்கு தேவையான நவீன ஆயுதங்கள் கிடைத்த வண்ணம் உள்ளன. இந்த ஆண்டு ஒரு வெற்றிகரமான ஆண்டாக அமையும்."

- இது இராணுவ தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்லவின் கூற்று.

"சமதான தீர்வு காண்பதற்கான முயற்சியில் இடையூறாக இருப்பவர்களுடன் யுத்தமிடுவதே எமது பணி. எந்தவொரு கெரிலா யுத்தத்தையும் முடிவுக்குக் கொண்டு



வர ஒரு சமாதான தீர்வு அவசியமாகும் என்று பிற நாடுகளின் அனுபவங்கள் உறுதி செய்கின்றன. ஆனால் இதைச் செய்வதற்கு இராணுவ நடவடிக்கை ஒரு முன்தேவையாக உள்ளது"

- இது கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சந்தகிரியின் கூற்று.

இந்த இரண்டும் ஒன்றுக்கொன்று முரண்படுகின்ற கூற்றுக்கள் போல் முதற்பார்வையில் தென்பட்டாலும், அவர்களது உடனடி நடவடிக்கையாக இருப்பது யுத்தம்: யுத்தம் மட்டுமே என்பது வெளிப்படை.

யுத்தத்தை தொடர்ந்து நடாத்தும் அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை என்றும் நாட்டின்-குறிப்பாக வடபகுதியின்- சமாதானத்திற்கு அச்சுறுத்தலாக இருக்கும் பயங்கரவாதத்திற்கு யுத்தம் மூலமே பதிலடி கொடுக்க முடியும் என்றும் மீண்டும் அழுத்தம் திருத்தமாக அறிவித்திருக்கிறார் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க. அவர் 'இந்த யுத்தம் ஒரு போதும் நிறுத்தப்பட மாட்டாது' என்றும் சூளுரைத்திருக்கிறார்.

ஆக, யுத்தம் தான் இந்தப் புத்தாண்டின் தொடக்கத்திலிருந்தே அரசாங்கத்தின் ஒரே குறியாக இருக்கப் போகின்றது என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது. புலிகள் தன்னிச்சையாக அறிவித்த யுத்த நிறுத்தத்தை உதாசீனம் செய்த அரசாங்கம், திடீரென தனது யுத்த முஸ்தீபுகளை அதிகரித்துக் கொண்டு யுத்தத்தில் இறங்கியது முடியுமானளவுக்கு அதிகமான நிலப்பரப்புகளை கூடிய சீக்கிரத்தில் கைப்பற்றி விட முடியும் என்ற நம்பிக்கையுடன் அது வேகமாக செயற்படுகின்றது. கடந்த நடாத்தப்பட்ட கினிஹிர (5,6,7,8) நடவடிக்கைகள் மூலம் தாங்கள் யாழ் குடா நாட்டில் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த பெரும்பகுதியை மீட்டுள்ளதுடன் புலிகளுக்குப் பலத்த சேதத்தை வழங்கியும் உள்ளதாக அரசு தரப்பு அறிவித்துள்ளது.

புலிகளின் எதிர்ப்பில்லாமலே கிட்டத்தட்ட 84 கிலோ மீற்றர் தூரத்தையும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த கைதடிப் பாலத்தையும் தாங்கள் கைப்பற்றியுள்ளதாக அறிவித்துள்ளது அரசு.

யுத்த நிறுத்தத்தை புலிகள் அறிவிப்பதற்கு முன்பே தொடங்கப்பட்டிருந்தாலும், கினிஹிர நடவடிக்கையில் அரசாங்கம் திடீர் வேகத்தைக் காட்டியதற்கு காரணம் இருக்கின்றது என்றே சொல்ல வேண்டும். புலிகள் தாமாகவே முன் வந்து சமாதானப் பேச்சுக்கு தயார் என்று அறிவித்ததும், பேச்சுவார்த்தைக்கு வசதியாக ஒரு யுத்தமற்ற சூழலை எதிர்பார்ப்பதாக கூறியதும், அரசாங்கம் யுத்தத்தை நடாத்துவதில் எந்த விட்டுக் கொடுப்புக்கும் இடமில்லை என்று அறிவித்த பின்னரும் தாமாகவே முன்வந்து யுத்த நிறுத்தத்தை அறிவித்து எல்லாம் அரசாங்கத்துக்கு எந்த ஒறுப்பறர்களும் தெரிவிக்காத ஒரு புதுச் செய்தியைத் தெரிவித்தது. அது தான் 'புலிகள் இப்போது பலவீனமாக இருக்கிறார்கள்' என்பது. ஆம் எதிரி பலவீனமாக இருக்கும் போது தாக்குவது இலகுவானது: குறைந்த பட்ச இழப்புடன் பெரும் வெற்றியைப் பெற்றுத் தரக் கூடியது என்பது தான் அரசாங்கத்தினதும் படைகளினதும் முடிவாக இருந்தது. ஆனால் உண்மையில் புலிகள் பலவீனமாக இருக்கிறார்கள் தானா? அவர்களது போரிடும் சக்தி குறைந்திருக்கிறதா? அரசு சொல்வது போல ஆயிரக்கணக்கில் புலி உறுப்பினர்கள் காயம்பட்டோ மரணமடைந்தோ போய் விட்டார்கள் தானா? வெறுமனே சமாதானத்திற்கான கோரிக்கையை புலிகள் முன் வைத்தவுடன் அவர்கள் பலவீனப்பட்டுவிட்டதாக முடிவுக்கு வந்துவிடலாமா?

இவையெலாம், கடந்த கால யுத்த வரலாற்றைப் பார்ப்பவர்கள் நியாயமான கேள்விகள் என்று தான் நினைப்பார்கள். ஆனால் இக்கேள்விகள் நியாயமானவை அல்ல என்று ஒதுக்கி விடுகிறது அரசாங்கமும் அரச படைகளும்!

உண்மையில் புலிகளிடம் இராணுவ, ஆயுத ரீதியான பலவீனம் நிலவுகிறது என்றால், சமாதானக் கோரிக்கையை வைத்து தம்மை பலவீனமாக இருக்கிறார்கள் என்று எப்போதுமே நினைக்கக் கூடிய் அரசாங்கத்திடம் சமாதானக் கோரிக்கையை வைத்திருப்பார்கள் என்பதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. புலிகளின் இராணுவ பலவீனம் அவர்களுக்கு பெருமளவு இழப்பை தந்துவிடப் போவதில்லை. இராணுவத்திடமிருந்து கைப்பற்றிய ஒரு சில தளங்களை மீள இழக்க வேண்டி நேரலாம். ஆனால் அது அவர்களுக்கு பெரிய நெருக்கடியைத் தரப் போவதில்லை. அவர்கள் தம்மை மீளவும் ஒரு கெரிலா நடைமுறையை நோக்கி திருப்பிக் கொள்ள முடியும். அதற்காக சமாதான முயற்சியில் ஈடுபட விருப்பம் தெரிவிக்க வேண்டிய அவசியம் எதுவும் அவர்களுக்கு இல்லை: அப்படிச் சொல்வது புத்திசாலித்தனமானது கூட இல்லை. மாறாக எதிரியை மேலும், மனோவியல் ரீதியாக அச்சங் கொள்ள வைக்கும் பிரசார நடைமுறைகளில் இறங்கியிருக்கலாம்.

ஆனால் உண்மையில் புலிகளுக்கு இன்று எழுந்துள்ள பிரச்சினை அவர்களது அரசியல் ஸ்திரப்பாடு குறித்ததாகும். இராணுவ ஸ்திரப்பாட்டை மீளமைத்துக் கொள்வது போல இலகுவில் அரசியல் ஸ்திரப்பாட்டை மீளமைத்துக் கொள்வது சாத்தியம் இல்லை. அரசியல் ரீதியான நடவடிக்கைகள் உள்நாட்டு மற்றும் சர்வதேசிய அரசியல் சூழ்நிலைகள், சர்வதேச சமூகத்தின் மனோபாவம், மக்களின் வாழ்வு நிலையும் எதிர் பார்ப்பும் போன்ற காரணங்களை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்படுபவை. அப்படி தீர்மானிக்கப்படாமல் தவறிழைக்கும் ஒவ்வொரு அரசியல் ரீதியான தவறும் பின்னர் பலத்த பின்விளைவுகளை ஏற்படுத்தி விடக் கூடியவை. கடந்த காலங்களில் புலிகள் இப்படியான பல விளைவுகளை எதிர்கொண்டிருக்கிறார்கள். 90ல் முஸ்லிம் மக்களை வெளியேற்றியது, பின்னர் யாழ் மக்களை இடம்பெயரச் செய்தது என்பன இதற்கு நல்ல உதாரணங்களாகும்.

இன்று உள்நாட்டிலும் சர்வதேச சமூகத்தின் மத்தியிலும் பல்லாயிரக்கணக்கான மக்களும் புத்திசீவிகளும் 'அரசியல் தீர்வு', 'சமாதானம்' என்பவற்றைப் பற்றியே பேசிக் கொண்டிருக்கிறார்கள். புலிகள் சமாதானத்துக்கு வரவிரும்பாத யுத்த வெறியர்கள் என்ற அபிப்பிராயம் சர்வதேச ரீதியாக பெருமளவில் பரப்பப்பட்டிருந்தது. இலங்கை அரசாங்கத்தின் வெளிநாட்டமைச்சர் கதிர்காமரின் அயராத உழைப்பினால் இந்த பிரச்சாரம் பெரும் வெற்றி பெற்றிருந்தது. தமிழ் மக்களது அரசியல் விடுதலை எவ்வளவு தான் நியாயமானதாக இருந்தாலும், அவை சர்வதேச சமூகத்தின் மத்தியில் எடுபட முடியாமல் போனதற்கு வெறும் இந்தப் பிரச்சாரம் மட்டும் காரணம் இல்லை. புலிகளின் அரசியல் ரீதியான கடந்தகால தவறுகளை மிகவும் கெட்டித்தனமான முறையில் பயன்படுத்திக் கொண்டது இலங்கை.

புலிகளைப் பயங்கரவாதிகள் தான் என்று நிறுவுவதில் அரசாங்கத்திற்கு அவ்வளவு சிரமம் இருக்கவில்லை.

தேர்தலில் வெற்றி பெற்றவர்களை கொன்றார்கள்: தேர்தல் நடைமுறையை குழப்பினார்கள். முஸ்லிம்களை வெளியேற்றினார்கள்: பள்ளி வாசல்களில் புகுந்து தாக்கினார்கள். பௌத்த விகாரையில் குண்டு வைத்தார்கள். பொதுமக்களை கொன்றார்கள் என இத்தியாதி தகவல்களை அரசாங்கம் மிகவும் இலகுவாக தனக்கு வாய்ப்பாக பயன்படுத்திக் கொண்டது. இவைகள் உண்மையிலும் புலிகள் செய்த அரசியல் ரீதியான தவறுகள் தான். ஆனால் அரசாங்கம் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டுள்ள அரச பயங்கரவாதம் இவையெல்லாவற்றை விடவும் பெரியது. அது அரசியல் ரீதியாக, பண்பாட்டு ரீதியாக, பொருளாதார ரீதியாக மற்றும் பூகோள ரீதியாக என்று எல்லா அம்சங்களிலும் தமிழ் மக்களைக் கருவறுப்பதுடன் நின்று விடாது படுகொலைகளிலும், புதைகுழிகளை நிரப்புவதிலும் ஈடுபட்டு வருகிறது. ஆயினும் இவற்றையும் செய்து கொண்டே சமாதானத்திற்காக தாம் முயல்வதாகவும் புலிப் பயங்கரவாதிகளால் தான் மேலே முன்னேற முடியாமல் இருக்கிறது என்றும் அதனால் வெற்றிகரமாக பிரசாரிக்க முடிகின்றது.



சர்வதேச அரசுகளிடமும் 'தமிழ் மக்கள்' மீது ஒன்றும் பெரிய அக்கறை கிடையாது. ஆயினும் முழுக்க முழுக்க அநீதியான, நியாயப்படுத்தப்பட முடியாத ஒரு செயற்பாட்டுக்கு நிச்சயம் அவற்றால் பரிபூரணமான ஆதரவைத் தர முடியாது. இப்போது புலிகள் சமாதானத்துக்கு வர மறுக்கிறார்கள் என்றும் அதனால் தான், தாம் யுத்தம் புரிய வேண்டியிருக்கிறது என்றும் குற்றம் சாட்டும் அரசிற்கு சர்வதேச சமூகம் காது கொடுக்கவே செய்கின்றது.

இந்த நிலையை உடைக்காத வரை புலிகளின் நடவடிக்கைகள் ஒவ்வொன்றும் அரசுக்கு வாய்ப்பாகவே அமையும். கடந்த வருடம் பலாலி இராணுவ முகாமை புலிகள் கைப்பற்றி விடக் கூடியதான ஒரு சூழல் வந்தபோது இலங்கைக்கு இந்தியாவே 100 கோடி ரூபா உதவி அளித்தது. புலிகளிடம் பலாலி வீழ்வதிலிருந்து இலங்கையைப் பாதுகாக்கும் முயற்சிக்கு சர்வதேச சமூகத்தின் ஆதரவும் இருக்கவே செய்தது!

ஆக இதிலிருந்து விடுபட புலிகளுக்கு உள்ள சரியான ஒரே வழி சமாதான முயற்சியில் இறங்குவதுதான். இது வெறும் சரியான வழி மட்டுமல்ல, பலரதும் விருப்பத்திற்குரிய முயற்சியும் கூட. இதிலே புலிகளுக்கு நீண்ட கால குறுகிய கால இலாபங்களும் நிறையவே இருக்கின்றன.

சமாதான முயற்சியில் இறங்க இலங்கை அரசு சம்மதித்தால், தமிழ் மக்களின் அபிலாசைகளில் குறைந்த பட்சம் எவற்றுக்கு அரசு இணங்கத் தயார் என்பது வெளியே தெரிய வரும். அரசு நியாயமாக நடக்கிறதா அல்லவா என்பதை முழு உலகும் அறியும் சந்தர்ப்பம் வரும். இன்று புலிகளின் சமாதானக் கோரிக்கை, யுத்த நிறுத்தம் என்பன உள்நாட்டிலும் சர்வதேச அரங்கிலும் பெரும் அலைகளைக் கிளப்பி விட்டுள்ளது. பேச்சுவார்த்தையை நடாத்தவும், புலிகளின் யுத்த நிறுத்த கோரிக்கையை சாதகமாக பரிசீலிக்கவும், கோரி அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கும் நிகழ்வுகள் வேகமாகப் பரவி வருகின்றன.

அரசாங்கம் அதன் யுத்த மூலம் சமாதானம் என்ற கோட்பாட்டுத் தளத்தில் நின்ற படி இந்தப் பிரச்சினையை கையாள முடியாது என்ற நெருக்கடிக்குத் தள்ளப்பட்டிருக்கிறது.

படை அதிகாரிகளும் பிரதமரும் மற்றும் அரச சார்பு அணிகளும் 'புலிகளை நம்ப முடியாது' என்ற பழைய கோசத்தை கிளப்பிக் கொண்டிருக்கும் வரை அரசியல் ரீதியாக புலிகளின் கை ஓங்கவே செய்யும். இந்த நிலைமை காரணமாக புலிகளோ அல்லது சமாதான விரும்பிகளோ குழப்பமடையத் தேவையில்லை. சமாதானத்திற்கான நடவடிக்கைகளில் அரசு இறங்கி வந்தாலும் சரி, வர மறுத்து யுத்த முனைப்புடன் செயற்பட்டாலும் சரி, அது தமிழ் மக்களது அரசியல் உரிமைப் போருக்கு சாதகமானது தான்.

எம்முன் உள்ள பணி எல்லாம், முடிந்தளவு பரவலாகவும் தொடர்ச்சியாகவும் அரசாங்கத்தின் சமாதான முகத்திரையைக் கிழிக்கும் விதத்தில் சமாதானத்துக்குத் தயாராகுமாறு அதன் மீது நிர்ப்பந்தத்தை ஏற்படுத்துவது தான்.

யுத்தம் நாளுக்கு நாள் கொலைகளையும், புதைகுழிகளையும், யுத்த வெறியையும் வளர்த்துச் செல்லுமே தவிர சமாதானத்தை ஒரு போதும் கொண்டுவரப் போவதில்லை.

சரியாக சொல்வதானால், அது சமாதானத்தையும் கூட புதைகுழியை நோக்கித் தள்ளவே செய்யும்.

சமாதானத்தின் பெயரால் சமாதானத்தை அழிக்கும் அரசின் செயல் அம்பலப்படுவதற்கு நீண்ட காலம் எடுக்கப் போவதில்லை. ஆனால் அதன் துரிதம் எல்லாம் புலிகளின் அரசியல் நடவடிக்கைகளில் தங்கியிருக்கிறது என்பதை மறந்துவிடக் கூடாது!

நன்றி - நூலகத்திட்டம்



# மலையக மக்கள் மீது சவாரி விடும் ஊடகங்கள்!

– அர்ஜுன்

பிந்துனுவெவ படுகொலையின் பின்னர், மலையகத்தில் எழுந்த எதிர்ப்பியக்கத்தைத் தொடர்ந்து மலையகத்தின் பல பகுதிகளிலும் கைது செய்யப்பட்ட இளைஞர்களில் 54 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர். அவசரகாலச் சட்டப்பிரமாணங்களின் கீழ் தடுத்து வைக்கப்பட்ட 50 பேர் ஏற்கெனவே நுவரெலியா மாவட்ட நீதிமன்றத்தில் 16 பேரும், அட்டன் மாவட்ட நீதிமன்றத்தில் 34 பேரும் அவர்களது தடுப்புகாவல் உத்தரவு தகுதி வாய்ந்த அதிகாரிகளால் பிறப்பிக்கப்படவில்லை என நீதிமன்றில் சட்டத்தரணிகள் சுட்டிக் காட்டியதைத் தொடர்ந்து தடுத்து வைப்பதற்கான சட்ட வலுவின்மையை உணர்ந்த நீதிமன்றம் அவர்களை விடுதலை செய்தது.

பதுளை சிறையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த 48 பேரில் 29 பேரை பிணையில் விடுவிக்குமாறு 15.12.2000 திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் சட்ட மா அதிபர் திணைக்களம் அறிவித்ததைத் தொடர்ந்து 18.12.2000 அன்று நுவரெலியா மாவட்ட நீதிமன்றம் 20 பேரை பிணையில் விடுவித்தது. மேலும் 9 பேர் முன்னரே விடுவிக்கப்பட்டிருந்தனர்.

ஆக மலையக இளைஞர்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்ததாகவும் தம் வேண்டுகோளை ஏற்றே விடுவிக்கப்பட்டதாகவும் மலையக மக்கள் முன்னணியும், இ.தொ.காவும் மாறி மாறி பத்திரிகைகளுக்கு அறிக்கை விட்டுக் கொண்டிருந்தன. மேலும் கட்சிப் பணியாளர்களாகவே தொழிற்படும் பெரும்பாலான மலையக செய்தியாளர்களும், செய்தி நிறுவனங்களும் மக்களைத் தவறாக வழிநடத்துவதோடு மலையக சமூகத்தை மூடமாக்கி வைக்க முயல்கின்றன.

18.12.2000 அன்று இது தொடர்பான செய்திகளை வெளியிட்ட சூரியன் வானொலி சேவை மலையக மக்கள் முன்னணியின் வேண்டுகோளுக்கிணங்க சாதாரணச் சட்டங்களின் கீழ் இவர்கள் விடுவிக்கப்பட்டதாக அறிவித்து மக்களை மடையர்களாக்க முயன்றுள்ளது.

சட்டமா அதிபர் திணைக்களம் பிணையில் விடுவதற்கு அனுமதித்துள்ளதே தவிர சாதாரணச் சட்டத்தின் கீழ் பிணையில் விட முன்வரவில்லை.

மலையக மக்களின் சகல அவலங்களையும் தம் கையாலாகாத அரசியல் பிழைப்புக்கு பயன்படுத்தி வரும் அரசியல் தலைவர்கள் சிலர் வெறும் பத்திரிகை அறிக்கை மூலம் நடத்தும் கேவலமான வாய்ச்சவாடலுக்கு வக்காலத்து வாங்குவதன் மூலம் ஊடகங்கள் மக்கள் மீது சவாரி விட முயல்கின்றன.

அரசாங்க அமைச்சர்களையும், அதிகாரிகளையும் கெஞ்சிக் கூத்தாடி முதுகு சொறிந்ததோடல்லாமல் தேவைப்படும் இளைஞர்களை காட்டிக் கொடுக்க குத்தகைக் கேறிய கட்சிகளே இன்று விடுதலைக்கும் குத்தகைக் கோரும் போக்கு அறுவருப்புடன் மக்களால் நோக்கப்படுகின்றது.

இந்த அரசியல் கட்சிகளால்,

0 மலையக இளைஞர்கள் தொடர்ச்சியாக கைது செய்யப்படுவதை தடுப்பதற்காக ஏதாவது செய்ய முடிந்துள்ளதா?

0 ஒரு வெகுசன பேரெழுச்சிக்கு சில நபர்களை பொறுப்பாக்க முயலும் சட்டங்களை கேள்விக்குள்ளாக்க முடிகிறதா?

0 கைதுகள், காணாமல் போதல், சித்திரவதைகளுக்கு அடிப்படையான அவசரகாலச் சட்டத்தையும், பயங்கரவாதத் தடைச்சட்டத்தையும் எதிர்த்து வாக்களிக்க முடிகிறதா?

0 சிறைச்சாலைகளில் நடைபெறும் கொலைகளையும், தாக்குதல்களையும் தடுத்து நிறுத்த முடிகிறதா?

0 சிறைச்சாலை நிர்வாகங்களை மனித உரிமை குழுக்களின் நேரடி கட்டுப்பாட்டில் கொண்டு வர முடிகிறதா?

0 பிந்துனுவெவ மலையக பேரெழுச்சி மீது அரசு நடத்திய பயங்கரவாதம் குறித்து குரல் தர முடிகிறதா?

0 பொலிஸ் துப்பாக்கிச் சூட்டில் பலியான மலையக இளைஞர் தொடர்பான நீதி விசாரணைகளை நடத்த முடிகிறதா?

0 மலையக தமிழருக்கு விசேட அடையாள அட்டை வழங்குவதாக வெளியான செய்தியை எதிர்த்து அறிக்கை போர் தொடுத்தவர்கள் கலஹா பொலிசார் குடும்ப புகைப்படங்களுடன் பதிவு செய்ய கோரும் போது முக்காடிட்டு கொண்டிருப்பது ஏன்?

0 பெக்ஸ் செய்திகளும், அறிக்கைகளும், மக்கள் விரோத செய்தியூடகங்கள் ஊடாக வெளியிடப்படும் கண்டனங்களும் இவற்றுக்கு நிவாரணமாக முடியுமா?

மலையக அரசியல் கட்சிகள் மக்களை அரைநூற்றாண்டுகளாக ஏதாவது வழியில் 'அடியுமின்றி முடியுமின்றி' ஏமாற்றிக் கொண்டிருப்பது போதாதென்று புதிதாக முளைக்கும் புற்றீசல்களால் மக்கள் கூறு போட்டு விற்கப்படுவதை தடுக்க மக்களே பேரணிகளாய் எழ வேண்டியிருக்கும். ⊙

# யாழ் பல்கலைக்கழகத்தில் மீண்டும் எழுச்சி!

– சரிதன்

70, 80களில் யாழ் பல்கலைக்கழகத்தில் ஒரு எழுச்சி காணப்பட்டது. பின்னர் 90களில் வீழ்ச்சியடைந்து காணப்பட்டது. இப்போது மறுபடியும் யாழ் பல்கலைக்கழகத்தில் ஒரு எழுச்சி காணப்படுகிறது. இது வரவேற்கத்தக்க ஒரு விடயம் என்றார் யாழ் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற பொங்கொலிநகர் (சங்கிலி) விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய மனித முன்னேற்ற நிலையத்தைச் சேர்ந்த ஜெயகுமார் அடிகளார் இதே கருத்தை ஆன்ம விசாரம் நிகழ்ப் பகிர்விலும் ஒருவர் முன் வைத்தார்.

இதில் உண்மை இருக்கத்தான் செய்கிறது. 1996இன் பின்னர் யாழ்ப்பாணத்தில் இளைஞர்கள் காணாமல் போனபோது யாழ் பல்கலைக்கழக மாணவர்களும் மூன்று பேர்கள் காணாமல் போனார்கள். அப்போது யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் காணாமல் போன தமது சகாக்களுக்காக எதுவும் செய்ய முடியவில்லை. இதுபற்றி ஆன்ம விசாரம் நிகழ்வுப்பகிர்வில் கருத்துத் தெரிவித்த மாணவரொருவர் தாம் காணாமல் போன தமது சகாக்களுக்காக போராட்டம் நடத்த வெளிக்கிட்டதாகவும் ஆனால், பல்கலைக்கழக நிர்வாகம் அதனைத்தடுத்து விட்டதாகவும் சொன்னார்.

பல்கலைக் கழக மட்டத்தில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதில் (அண்மைக் காலங்களில்) முன்னோடியாகச் செயற்பட்டவர் தேவானந். இவர் அக்கினிப் பெருமூச்சுகள் என்ற நாடகத்தை முதன் முதலில் துணிந்து மேடையேற்றினார்.

இந்நாடகம் காணாமல் போனோர்களின் அவலங்களைச் சித்திரிக்கிறது. மகனைப் பறிகொடுத்த தாயும், கணவனை இழந்த விதவையும் சவப் பெட்டிகளில் தங்களது உறவுகளைத் தேடுகிறார்கள். மறுபுறம் அதிகாரத்திலுள்ளவர்களுக்குச் சலாம் போட்டு அவர்களை வலம் வந்து சேவகம் செய்யும் கோட் போட்ட கூட்டம் இவர் நாடக அழைப்பிதழைக்கூட சவப்பெட்டி திறப்பது மாதிரி அச்சிட்டிருந்தார்.

அடுத்ததாக இடம்பெற்றது பேசாப் பொழுதுகள். சமகால அரசியல் நிகழ்வுகளைச் சித்தரிப்பதாக அமைந்திருந்தது. இதற்கடுத்தபடியாக ஆன்ம விசாரம் எனும் நிகழ்வுப்பகிர்வு விரிவுரையாளர் சிதம்பரநாதனால் ஒழுங்கமைக்கப்பட்டது. இறுதியாக பொங்காலி நகர் எனும் சங்கிலி மன்னனின் வரலாற்றைச் சித்திரிக்கும் வரலாற்று நாடகம் விரிவுரையாளர் ரதிதரனால் மேடையேற்றப்பட்டது.

காலத்தின் தேவைக்கருதி பொங்காலி நகரில் சிலேடை வசனங்களும் தாராளமாக இடம்பெற்றுள்ளன. உ-ம் இந்த மண் எவருக்கும் அடிபணியாது. எமக்கென ஒரு தேசம் இருக்கிறது. அவங்கள் அங்கையிருந்து வந்து இஞ்சை அட்டகாசம் பண்ண நாங்கள் பார்த்துக்கொண்டிருப்பதா.

நாடகத்தின் இயக்குநர் ஆங்காங்கே சில சிறு தவறுகளைக் கவனிக்காமல் விட்டிருந்தாலும் உ-ம் இரு சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். என்ன பிடிக்கிறாய் அந்தோனி என்று ஒரு சிறுவன் கேட்கிறான். அந்தோனி என்ற பெயர் போர்த்துக்கீசரின் வருகைக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் இருந்ததா என்பது கேள்விக்குறி.

இப்படிப்பட்ட நாடகங்கள் மூலம் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த மாணவர்கள் முயன்று வருகின்றமை பாராட்டுக்குரியது. ⊙

# மொத்த விலையில் எம்.பி பதவி!

– நேசன்

மலையகத் தமிழர்கள் இலங்கை தேர்தல் திட்டங்களின் படி 30 பிரதிநிதிகளை பாராளுமன்றத்தில் கொண்டிருக்க வேண்டும். திட்டமிட்ட முறையில் பேரினவாத அரசுகள் மக்களை தம் வாழ்விடங்களில் இருந்து விரட்டியடித்தும், திட்டமிட்ட குடியேற்ற திட்டங்கள் மூலம் முற்றுகைக்குள்ளாக்கியும் நாடற்றவர்களாக்கியும் சிதைத்ததன் விளைவாக தட்டுத்தடுமாறி 10 பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை பெறக் கூடியதாகவிருந்தது. ஆனால், இறுதியாக நடந்த பாராளுமன்றத் தேர்தல்களில் கண்டி, பதுளை, இரத்தினபுரி, கொழும்பு மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட மலையகப் பிரதிநிதிகள் இல்லாமற் போயினர்.

நுவரெலியா மாவட்ட பிரதிநிதித்துவம் 8 இல் இருந்து 7 ஆக குறைக்கப்பட்ட போதும் மக்கள் விழிப்போடு செயற்பட்டு 5 தமிழ் பிரதிநிதிகளை தெரிவு செய்தனர்.

ஐ.தே.கட்சியின் வாடிக்கை கட்சியான மலையக மக்கள் முன்னணி தன்னை இணைத்துக் கொண்டதால் அக்கட்சிக்கு வழங்கப்பட்ட தேசியப்பட்டியல் உறுப்பினர் பதவிக்கு க.கனகராஜாவின் பெயரே சிபார்சு செயயபபட்டிருநதது.

சந்திரசேகரனும், கனகராஜாவும் கண்டிருந்த இணக்கப்பாட்டின் படி தேர்தல் முடிந்த கையோடு முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட இராஜினாமாக் கடிதங்களில் கனகராஜ் கையெழுத்து இட்டிருக்கிறார்.

ஆனால், கட்சித் தலைமையின் தவறான அணுகுமுறைகள் காரணமாக கனகராஜ் பாராளுமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்துள்ளார். எனினும் அவரது பதவியை ராஜினாமாச் செய்யுமாறு கட்சித் தலைமையும், கட்சியில் இடைநடுவே புகுந்துகொண்ட ஒரு கூட்டமும் நெருக்குதல் கொடுத்து வருவதாக தெரிகிறது. மேலும் கனகராஜுக்கு எதிரான தனிப்பட்ட தாக்குதலைத் தொடங்கியுள்ளக் கட்சி அவதுாறுகளை பரப்பவும் முயன்று வருவதாகக் கூறப்படுகின்றது.

ஐந்து வருட சம்பளம், வாகன வசதிகள், உயர்பதவிகள் கொடுக்க கட்சி முன்வந்தும் கனகராஜ் கட்சித் தலைமையின் முதுகில் குத்தி விட்டார். துரோகம் இளைத்து விட்டார். எனவே கட்சியை விட்டு வெளியேற்ற வேண்டும் என்ற தொனியில் கட்சித் தொண்டர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டு வருகின்றதாம்.

இவற்றின் பின்னணியில் கோடிக்கணக்கான ரூபாய் பேரம் இடம்பெறுவதாகவும், கொழும்பில் உள்ள பொலிதீன் வியாபாரி ஒருவர் மொத்த விலையில் இப்பதவியை வாங்க முன்வருவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆக நுவரெலியா மாவட்டத் தமிழருக்கு கிடைக்க வேண்டிய 6வது பிரதிநிதித்துவம் கொழும்பு முதலாளிக்கு விற்கப்படப் போவதையிட்டு மக்களிடையே சலசலப்புகள் தோன்றியுள்ளன.

0 கனகராஜாவும், சந்திரசேகரனும் கொண்டிருந்த உடன்பாடு முன்வருதற்குரிய காரணங்கள் யாவை?

0 ஊவா தமிழரின் பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்பட அரவிந்த குமாருக்கு இப்பதவி வழங்கப்பட் வேண்டுமென வாதிடப்பட்டுள்ளது. ஆனால் இப்போது அரவிந்த குமார் விலகிச் சென்று ஆறுமுகம் தொண்டமானின் இணைப்பு செயலாளர் பதவியை பெற்றுக் கொண்டுள்ளார்.

0 மலையக மக்கள் முன்னணியின் அதியுயர்பீட உறுப்பினர் பலர் கட்சித் தலைவரிடம் கைகட்டி வாய்ப் பொத்தி நிற்பவர்கள். மேலும் தலைவரின் குடும்ப உறவினர்களே அங்கு செல்வாக்குள்ளவர்கள் எனக் கூறப்படுகிறது.

0 கட்சி மேற்கொண்ட மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கு கட்சி கவுன்சில் காரணமாக இருந்திருக்கிறதாம்.

0 கவுன்சில் அங்கீகாரமின்றியே கனகராஜ் பெயரைப் பட்டியலில் தலைவர் சேர்த்திருக்கிறார். அப்போது மௌனித்திருந்த கவுன்சில் உறுப்பினர்கள் ஏன் தலைமையை கேள்விக்குள்ளாக்கவில்லை?

0 மக்களது வாக்குகளை காட்டி, பேரினவாத கட்சிகளிடம் பணயமாக பெறப்பட்ட பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை பெரு முதலாளிக்கு கைமாற்ற முயல்வதன் திரைமறைவு சதி தான் என்ன?

0 கட்சியில் இருந்து ஆற்றல் மிக்க தளபதிகளை அன்னியப்படுத்தி விரட்டியடிப்பது தொடர்போக்காவே இருந்து வருகின்றது. பலர் கட்சியை விட்டு வெளியேறி வருகின்றனர். பீ.ஏ காதர், வி.டி.குடும்பம், கேசவலிங்கம், அரவிந்தகுமார் என அடுத்தடுத்து நடக்கும் களையெடுப்பின் இறுதி இலக்கு கட்சியை குடும்ப அரசியல் சொத்தாக்குவது தானா என்றெல்லாம் மக்கள் கேட்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

இ.தொ.காவுக்கெதிரான மாற்று கட்சியென இனம் காணப்பட்டு போக்கிடப்பட்ட மலையக மக்கள் முன்னணி இவ்வாறான நடவடிக்கைகளால் இன்னொரு மக்கள் விரோத கட்சியாக இனம் காணப்பட்டு தூக்கப்படும் நிலையை நோக்கிச் சென்றுகொண்டிருப்பதுதான் துயரம்! ⊙

நன்றி - நூலகத்திட்டம்



# மக்களுடன் போரிடும் ஊடகங்களும் யுத்தத்தில் சாகின்ற மக்களும்.....!

– வி.ஜே.கே

மட்டக்களப்பில் அண்மையில் 'தமிழர் பாதுகாப்பு அமைப்பினால்' துண்டுப் பிரசுரம் ஒன்று வெளியிடப்பட்டிருக்கின்றது. ஊடகங்கள் தமிழ் மக்கள் மத்தியில் 'ஊடகப் போர்' ஒன்றை நடத்தி வருவதாகவும் இதனால் சிந்திக்கும் வர்க்கத்தில் பெரும்பாலான பகுதியினர் பாதிக்கப்படடுள்ளதாகவும் ஊடகத்துறையை கடுமையாகச் சாடப்பட்டிருக்கின்றது. இதேவேளை பொது அமைப்புக்கள் மதகுருமார்கள், பாராளுமன்ற பிரதிநிதிகள் போன்றவர்களையும் அப்பிரசுரத்தில் காரசாரமாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

கடந்த காலங்களில் ஊடகங்கள் சொல்ல மறுத்த அல்லது மறைத்த சம்பவங்களில் ஒருசிலவற்றை அத்துண்டுப் பிரசுரம் சுட்டிக்காட்டியிருந்தது. உண்மையும் அதுவாகத்தான் இருக்கின்றது. இன்றைய போரியல் சூழலில் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் தட்டுத் தடுமாறி தடம் புரண்டு கொண்டிருப்பவர்களாகத்தான் இருக்கின்றார்கள். இவ்வாறான ஒரு இக்கட்டான நிலைமையில் இம்மக்களை நெறிப்படுத்துவதில் ஊடகங்களின் பங்கு கணிசமான அளவு தாக்கத்தை செலுத்த வேண்டும்.

ஆனால், இன்று இலங்கையிலும் தமிழர் புலம் பெயர்ந்து வாழ்கின்ற நாடுகளிலிருந்தும் பல பத்திரிகைகளும் இலத்திரனியல் ஊடகங்களும் செயற்படுகின்றன. இலங்கையில் உள்ள ஊடகங்களுக்குத்தான் உண்மையைச் சொல்ல முடியாமல் இந்த அரசு வாயைக் கட்டிவிட்டதொரு நிலைமை என்றாலும், உண்மைகளை வெளிப்படையாக சொல்ல வேண்டிய வெளிநாட்டு ஊடகங்கள்கூட கண்கட்டு வித்தை காட்டுகின்றது.

மட்டக்களப்பில் வெசாக் தினத்தன்று இராணுவத்தால் நடத்தப்பட்ட வெறியாட்டம், களுவாஞ்சிக்குடியில் விசேட அதிரடிப்படையினரால் இளைஞன் ஒருவன் சுடப்பட்ட சம்பவம் என்பவை இவற்றிற்கு நல்ல எடுத்துக்காட்டுக்களாகும். தன்னைத் தப்பியவன் மந்திரவாதி என்பது போல் இவர்களெல்லாம் தாங்கள் தாங்கள் தப்பிக் கொள்வதற்காக 'சம்பவத்தின் போது' என்ற மந்திரத்தை இந்த ஊடகங்கள் வைததுக் கொண்டு செயல்ப்பட்டு வருகின்றன.


இதற்கு இன்னுமொரு காரணமும் இருக்கின்றது. இவ்வாறு சொல்கின்ற பத்திரிகைகளும், இலத்திரனியல் ஊடகங்களும் ஏதோ ஒரு வகையில் தவிர்க்க முடியாமல் ஒரு அரசியலை சார்ந்து நின்று செயற்படுவது. அல்லது அரசியல் அவர்களை விலைக்கு வேண்டிவிடுவது. இந்த நிலைமையில் அவர்கள் சொல்ல வந்ததை சொல்ல முடியாமற்போய் யாரோ சொல்வதை சொல்லி விட்டுப் போய்விடுவார்கள். இதற்கு நல்ல உதாரணம் ஒருசில பத்திரிகையாளர்கள் இன்னமும் தங்களுடைய செய்திகளை இராணுவத்தினருடன் சேர்ந்து கலந்துரையாடிய பின்பே பிரசுரிப்பது. இந்நிலையில் இராணுவத்தின் எண்ணக் கருத்தியலே அச்செய்தியில் தாக்கம் செலுத்தப் போகின்றது.

அண்மையில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள செய்தியாளர் ஒருவருக்கு லக்ஹண்ட வானொலி சிறந்த செய்தியாளருக்கான விருது வழங்கிக் கௌரவித்திருக்கிறது. இவ் வானொலி ஸ்ரீலங்கா இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவினரால் நடத்தப்படுவதென்பது அனைவரும் அறிந்தது. எனவே இச்செய்தியாளர் கொடுக்கின்ற செய்திகள் ஒருபோதும் இராணுவத்திற்கு எதிராகவோ அல்லது தமிழ் மக்களின் பிரச்சினையை சொல்லப் போகின்ற செய்தியாகவோ இருக்கப்போவதில்லை. இந்நிலைமையில் இவர் மட்டக்களப்பிலுள்ள இராணுவத்தின் தகவலாளர் எனக்கருதுவதில் எந்தவித சந்தேகத்திற்கும் இடமில்லை. அதுமட்டுமல்லாமல் இச்செய்தியாளர் ஐ.தே.கவின் அரசியல் பின்னணியையும் கொண்டுள்ளார் என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

இத்துண்டுப் பிரசுரக்காரர் இன்னுமொன்றைச் சொல்ல மறந்துவிட்டனர். சக்தியின் சக்திமிக்க வேலையைப்பற்றியே. இவர்களும் இன்றுள்ள இளம் சமூகத்தினரை பகுத்தறிவற்ற மனிதர்களை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கின்றனர். ஆதிகால மனிதர்கூட தனது சூழலுடன் மிகவும் அவதானமாகவும் அதைச் சந்திக்கவும் தயாராக இருந்தனர். இன்றுள்ள மனிதர் தனது சூழலைப் பற்றியே சிந்திக்காமல் தன்னைச்சுற்றி என்ன நடக்கின்றது என்பது கூட தெரியாமலே இருந்து கொண்டிருக்கின்றான். இந்நிலைக்கு உரம் சேர்ப்பனவாகவே ஊடகங்கள் செயற்படுகின்றன. இதில் முதன்மை நிலையில் இன்று சக்தி செயற்பட்டு வருகின்றது.

கடந்த இரு நாட்களுக்கு முன்னர் எனது நண்பர் ஒருவரைச் சந்தித்தேன். அவர் என்னிடம் குறிப்பிட்டார் உன்னுடைய கட்டுரைகளை தொடர்ந்து வாசித்து வருகின்றேன் இதனால் உனக்கு எந்த விருதும் கிடைக்கப்போறதில்லை தானே என்றார். இதிலிருந்து ஒன்று மட்டும் எனக்கு விளங்கியது இவரும் இந்த ஊடகங்களின் சக்தியால் பாதிக்கப்பட்டவர் என்பது தெளிவாகியது. இவரும் ஒரு சாதாரண வர்க்கத்தை சேர்ந்தவர்தானே.

போரில் ஈடுபட்டுள்ள பல நாடுகள் இவ்வாறு ஊடகங்களை தங்களுடைய புலனாய்வு முறியடிப்பு போருக்கு பயன்படுத்தியதையும் அதே ஊடகங்களை வைத்து மக்களை சிந்திக்க முடியாதவர்களாக்கப் பண்ணும் திசைதிருப்பு உத்திகளை கையாண்டதும் வரலாற்று ரீதியில் நாமறிந்த விடயம். இது இன்றும் தென்னிலங்கையிலுள்ள பல ஆங்கில தமிழ் பத்திரிகைகளிலும் இலத்திரனியல் ஊடகங்களிலும் இராணுவப் புலனாய்வுத் துறையுடன் சம்பந்தப்பட்டவர்கள் பணிபுரிவதை நாம் காணலாம்.



உண்மையில் இன்று இந்த ஊடகங்கள் அனைத்தும் மனித சமூகத்தோடு பெரும் போரில் ஈடுபட்டுள்ளன. இதில் ஊடகங்கள் வெல்லப் போகின்றதா அல்லது மனித சமூகம் தோற்கப் போகின்றதா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

* * *

தமிழ் பேசும் சமூகங்களைச் சார்ந்த அப்பாவி மக்களாகிய நாங்கள் இன்று பல்வேறு வடிவங்களிலும் அமைந்துள்ள செயல் மற்றும் கருத்தியல் ரீதியான அடிப்படை மனித உரிமை மீறல்களுக்கு முகம் கொடுக்க வேண்டியவர்களாக உள்ளோம். பெரும்பாலான சமயங்களில் மறைமுகமாகவும் சில உக்கிரமான கட்டங்களில் நேரடியாகவும் பாரிய சேதத்தினை விளைவிக்கும் படைத்தரப்பின் பொறுப்பற்ற தன்மை பற்றி எம்மிடையே சிந்திக்கும் வர்க்கமும் மனித உரிமை நலன் பேணும் அமைப்புக்களும் எந்தளவு தூரம் சமூகங்களுக்கிடையே இந்த அத்துமீறல்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி அவற்றிற்கெதிரான பலன்களைக் கண்டுள்ளனர் எனும் வினாவிற்கு ஓர் திருப்திகரமான பதிலை அழிக்கமுடியாத நிலையேதான் நீடித்துக் காணப்படுகின்றது.

நாம் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வரும் மண்ணில் எங்களின் வாழ்வியலை நாமே திட்டமிட்டு மன நிம்மதியுடன் நிறைவாக வாழும் நிலையை சிதைத்த நமது பேரினவாத கபட அரசியல் இலாபத்திற்காக ஓர் இராணுவ இயந்திரத்தை ஆயுதத்ததுடன் அவசரகாலச் சட்டம் எனும் அதிகாரத்துடனும் தமிழர் தாயக மண்ணில் அலைய விட்டுள்ள அரசானது பல்வேறு கட்டங்களிலும் வெளிப்படையான இன வேட்டைகளை நடத்தியது உலக வரலாற்றின் பக்கங்களில் இன்னும் காய்ந்து போகாத இரத்தக்கறையாகவேயுள்ளது.

அந்நிய காலனித்துவ ஆட்சியினரால் தமது கைகளில் ஒன்று சேர்க்கப்பட்ட அனைத்து ஜனநாயக அரசியல் அதிகாரங்களையும் இன்றுவரைக்கும் தொடர்ந்து வைத்துக் கொண்டிருக்கும் சிங்கள அரசியல் வாதிகள் அவையனைத்தையும் தமிழ்பேசும் மக்களுக்கெதிராக துஷ்பிரயோகம் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த சர்வாதிகார அரசியல் நடைமுறையில் நன்கு பரிணாம வளர்ச்சி அடைந்தவர்கள் இன்று மிகவும் புத்திசாதுரியமான முறைகளில் இன ஒடுக்குமுறையை நன்கு திட்டமிட்டு மேற்கொள்கின்றனர்.

இதன் ஓரங்கமாகத்தான் அரசினால் நடாத்தப்படும் பத்திரிகைகள், இலத்திரனியல் ஊடகங்கள் என்பன செயற்படுகின்றன. உண்மைகளை மறைத்து அல்லது தங்களிற்கு ஏற்றவாறு சம்பவங்களை திரிவுபடுத்தி செய்திகளை வெளியிடுகின்றது. உண்மையில் அரசின் இந்த சூட்சிகரமான உளவியல் ரீதியான செய்திபரிமாற்ற நுட்பமானது குறிப்பிட்டளவு வெற்றியும் அடைந்துள்ளது என்றுதான் கூறவேண்டும். ஏனெனில் இவ்வாறான அப்பட்டமான திசைதிருப்பு உத்திகளினால் பாதிக்கப்பட்டவர்களாகவேதான் எமது சிந்திக்கும் வர்க்கத்தில் பொரும்பாலான பகுதி இன்று தென்படுகின்றனர். ஓர் பொய்யினை மீண்டும் மீண்டும் சொல்வதனால் அதனை உண்மையாக்கி விட முடியும் என்பதில் அவர்கள் வெற்றியும் கண்டுள்ளனர். எனவே எம்மவர்கள் சுயமாக சிந்தித்து உண்மையைக் கண்டறியும் தன்மையுள்ளவர்களாக மாற வேண்டும்.

அண்மைக்காலங்களில் எமது பிரதேசத்தில் அப்பாவி மக்களுக்கு ஏற்பட்ட உயிரிழப்புக்ளும் பொருட் சேதங்களுக்கும் மேற்கூறிய ஊடகத்துறைக்கு போருடன் நெருங்கிய தொடர்பு இருப்பதனை சில சம்பவங்களை ஆராய்வதன் மூலம் விளங்கிக் கொள்ளலாம்.

இலங்கை இராணுவத்தினாலும் அதன் ஆதரவுக் குழுக்களினாலும் மேற்கொள்ளப்பட்ட தமிழினச் சுத்திகரிப்பும் மற்றும் படுகொலைகள் என்பவற்றினை பட்டியலிட்டால் இனவாத போரின் அரச பயங்கரவாதத்தின் விஸ்வரூபம் நன்கு புலப்படுகின்றது. ஆனால் இவ்வாறு முன்கூட்டியே நான்கு திட்டமிடப்பட்டு நடத்தப்பட்ட படுகொலைகள், பாலியல் வல்லுறவுகள், சூறையாடல்கள், தீவைப்புக்கள் போன்ற தமிழரின் அரசியல் பொருளாதார சமூக கட்டமைப்புக்களை சீர்குலைத்த நடவடிக்கைகள் யாவற்றையும் ஊடக அமைப்புக்கள் கனகச்சிதமாக மூடிமறைத்தும் திரிவுபடுத்திக் கூறியும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் செய்திகளை வெளியிட்டுள்ளன.

அண்மையில் மட்டக்களப்பு நகரமத்தியிலுள்ள விகாரையில் இடம் பெற்ற படுகொலைச் சம்பவம் இதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாக உள்ளது. கிறிஸ்தவ மதகுரு, அனாதை விடுதிச் சிறார்கள் மேலும் பல பொதுமக்கள் மீதும் படையினர் நன்கு திட்டமிட்டவாறு ஓர் படுகொலையை நிறைவேற்றி முடித்தனர். இதில் காயப்பட்டோர், கொல்லப்பட்டோர் என்பவர்களின் உடல்களிலிருந்து இராணுவத்தினரால் மிக சமீபத்தில் வைத்து சுடப்பட்ட குண்டுகளென கண்டுபிடிக்கப்பட்டும் கூட அவர்கள் யாவரும் குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டதாக முழு உலகிற்கும் எமது ஊடகங்கள் செய்திபரப்பி முடித்தன. உண்மையைச் சொல்ல வேண்டிய பொது அமைப்புக்களும் மதகுருமாரும் மௌனமாக இருந்து விட்டனர்.

மேலும் அரசானது போரில் சம்பந்தமில்லாத நிராயுதபாணிகளான அப்பாவி மக்களை மனிதக் கேடயங்களாக உபயோகிக்கும் தந்திரங்களையும் படையினர் மத்தியில் பரவவிட்டுள்ளது. அண்மையில் இராணுவ வாகன தொடரணிகளுக்குப் பின்னால் சென்ற பயணிகள் வாகனம் தாக்கப்பட்டமையானது பலத்த சந்தேகத்தை உண்டுபண்ணுவதாக உள்ளது. 1999 இன் பிற்பகுதியில் தமது பாதுகாப்பின் பொருட்டு இராணுவ வாகனத்தொடரணிகளுடன் தமிழ் இளைஞர்களை படையினர் பலவந்தமாக அழைத்துச் சென்றதையும் அப்பீதி காரணமாக அக்காலப்பகுதியில் மட்டுநகர் மக்கள் நடமாட்டமின்றி வீதிகள் வெறிச்சோடிக் கிடந்தமையும் மீண்டும் எம் கண்களின் முன்னால் தோன்றுகின்றது.

தற்போது பயணிகள் வாகனத்தில் ஆயுதப்படையினர் குறிப்பாக விஷேட அதிரடிப்படையினர் தமது சுடும் நிலையில் உள்ள நவீன துப்பாக்கிகளுடன் சர்வ சாதாரணமாக பயணிப்பதானது எமது மக்களின் பாதுகாப்பிற்கு விடுக்கப்படும் நேரடி அச்சுறுத்தலாக அமைவதுடன் அவர்களின் உளநிலை மிகவும் பாதிப்பதாகவும் சமூகவியலாளர்கள் கூறுகின்றனர். போரில் ஈடுபடும் தரப்பினருக்கான சர்வதேச சட்டங்கள் போர்ச் சூழலில் நிராயுதபாணிகளான மக்களின் பாதுகாப்பு உரிமைகள் போன்றவற்றை உறுதிப்படுத்துவதற்கென்ற ஜெனிவா சட்டங்களின் பாதுகாவலாளியான சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம்; இது போன்ற வேறு உள்நாட்டு வெளிநாட்டு மனித உரிமையை பாதுகாக்கும் தரப்பினர்களின் கண்களிற்கு ஏன் இவ்வாறான அத்துமீறல்கள் இன்னும் தென்படவில்லை என்பது தான் விளங்கிக் கொள்ள முடியாத விடயமாக உள்ளது.

எமது பாராளுமன்ற உறுப்பினர்களை எடுத்துக் கொண்டால் விசேட அதிரடிப்படையினர் போன்றோர் பொதுமக்களை தங்களது பாதுகாப்புக்கவசமாக பயன்படுத்தி மக்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்துவதை தடுப்பதற்கான எந்தவோர் ஆக்கபூர்வமான நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. இந்த பட்டப்பகல் மனித உரிமை மீறல்களையிட்டு மக்கள் பிரதிநிதிகளே மௌனமானது மக்களுக்கு பலத்த அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

ஒட்டுமொத்தமாகச் சொல்லப்போனால் சகல விதமான மக்கள் அவஸ்தைகளுக்கும் உள்நாட்டு போரேதான் மூலகாரணமாக தோன்றுகின்றது. எத்தனை அப்பாவிகள் உயிரைவிட நேர்ந்தாலும் சண்டையை மாத்திரம் கைவிடமாட்டோம் எனும் அரசின் நிலைப்பாட்டில் மாற்றம் வர வேண்டியது மனிதாபிமான அடிப்படையில் அவசியமானதாக அமைகின்றது. இழுத்தடிப்புக்களின் பயனாக மேலும் தொடர்ந்து விதவைகளையும் அனாதைகளையுமே நாம் உருவாக்க முடியும்.

எனவே மனித உரிமை சம்பந்தப்பட்ட சகல அமைப்புக்களும் சமூக நலன் பற்றி சிந்திப்போரும் மேற்கூறிய விடயங்கள் தொடர்பாக அரசிற்கு பாரிய அழுத்தம் கொடுக்க வேண்டும். இவ்வாறான முயற்சிகள் மூலமே தான் நிலையான சமாதானத்ததை அடைய முடியம்.

நன்றி - நூலகத்திட்டம்



உயர் - தொழில்நுட்பவியல் ஏகாதிபத்தியவாதம் - 1

# பரம்பரை உருமாற்றப்பட்ட உணவு (Genetically Modified Food)

– றியாஸ்

பரம்பரை உருமாற்றப்பட்ட உணவுகள் என்பது உணவு உற்பத்தியை கூட்டும் அல்லது அதற்கான வல்லமையைக் கொண்ட ஓர்கனோ பொஸ்பேற்றைக் குறைவாக வேண்டி நிற்கும், நல்ல விளைச்சல் போன்ற நன்மைகளைத் தரும் உணவுகளாகும் என்று பெரிய உயிர்-தொழில் நுட்பவியல் கம்பனிகளும், பெரிய விவசாயத் தாபனங்களும், ஏகாதிபத்தியவாதிகளின் பல்தேசியக் கம்பனிகளும் வரைலிலக்கணப்படுத்தி, அதனை மேற்கில் பயிற்றுவிக்கப்பட்ட மூன்றாம் மண்டல நாடுகளின் பேராசிரியர்களின் மூலம் மூன்றாம் மண்டல நாட்டு மாணவர்களுக்கு மனப்பாடமாக்கச் செய்விக்கின்றனர்.

இந்த வரைவிலக்கணத்தில் சிறிய உண்மை இருக்கலாம். ஆனால் இந்த இயற்கையைக் குழப்பும் தொழில்நுட்பத்தின் பயங்கரத்தை அதனை உருவாக்கியவர்களுக்கே அனுமானிக்க முடியாதளவுக்கு இப்போது நிலைமை வளர்ந்துவிட்டது. ஐக்கிய இராச்சிய அரசாங்கத்திற்கு இந்தப் பிரச்சினைகள் அனைத்தும் தெரிந்திருந்தும், வாய் மூடி பேசாமல் இருக்கின்றது. ஏனெனில் ஐக்கிய அமரிக்காவினதும், மொன்சன்ரோ போன்ற பாரிய அமரிக்க கம்பனிகளினதும் நெருக்குதலினாலும். ஐக்கிய இராச்சியத்தை மட்டுமன்றி மேலும் பல நாடுகள் இந்த பரம்பரை உருமாற்றப்பட்ட உணவைப் பயன்படுத்துமாறு அமெரிக்கா வற்புறுத்திக் கொண்டிருக்கிறது. இந்த உணவுப் பொருட்களை உண்போர் வேற்றுகிரகத்து மக்கள் என்று நினைத்துக் கொண்டு, நுகர்வோர் கருத்துக்களும், விருப்பங்களும் மதிக்கப்படாமல் அலட்சியப்படுத்தப்படுகின்றன. அமெரிக்கா வற்புறுத்த என்ன காரணம் இருக்கிறது? வேறு என்ன காரணம். குறுகிய காலத்தில் பல்லாயிரக்கணக்கான பில்லியன்கள் இலாபத்தை சுரண்டிப் பெறுவதற்குத்தான்.

ஒரு அந்நிய பரம்பரையலகானது வெட்டி எடுக்கப்பட்டு அதனோடு முற்றிலும் சம்பந்தமில்லாத இன்னொரு உயிரியின் கலத்துடன் DNA மீளச் சேர்க்கை தொழில் நுட்பம் மூலம் ஒட்டப்படுகிறது. இங்கே மீனினது DNA உருளைக் கிழங்குக்கும், மனிதனது பன்றிக்கும், தேளினது, தக்காளிக்கும், போன்ற பொருத்தமில்லாத மாற்றீடுகள் செய்யப்படுகின்றன. இதன் பின்னர் விஞ்ஞானிகள் அகோரமான உணவு அரக்கன்களைப் படைக்கிறார்கள். இந்த உணவுப் பொருட்கள்தான் பரம்பரை உருமாற்றப்பட்ட உணவுகள். சுருக்கமாக GM உணவுப் பொருட்கள் என்று அழைக்கப்படுகின்றன.

இந்த உணவுப் பொருட்கள் ஏற்கனவே நூற்றுக்கணக்கான மக்களின் சாவுக்கும், ஆயிரக் கணக்கான மக்கள் அங்கவீனமாவதற்கும் காரணமாக இருந்திருக்கின்றன. இது நாள் வரையும மனிதனுடன் உணவ மூலம் சம்பந்தப்படாத புதிய நஞ்சு வகைகளும், ஒவ்வாமைக் காரணிகளும் தாவரங்களிலிருந்து மனிதனுக்கு இந்த GM உணவுப் பொருட்கள் மூலம் தொற்றியுள்ளன. பரம்பரை உருமாற்றப்பட்ட சோளத்திற்குள் செலுத்தப்பட்ட பயங்கர பக்டீரியாவானது, சோளத்திலிருக்கும் உருமாற்றப்பட்ட பக்டீரிய DNAயானது மனிதக் குடலில் சோளம் சமிபாடடைந்த பின்னும் தங்கி நின்று மனிதனின் நிர்ப்பீடனத் தொகுதியை செயலிழக்கச் செய்கின்றன. இதற்கு உதாரணமாக அம்பிசிலின் செயலிழந்ததைச் சொல்லலாம்.

யாராலுமே எப்போதுமே என்னவாயிருக்கும்? எப்படியிருக்கும்? என்று அறுதியிட்டுக் கூற முடியாத பல்லாயிரக்கணக்கான உருமாற்றப்பட்டு, அவை ஒன்றும் செய்யாது தீமை பயக்காது என்று நம்பவைக்கப்பட்டு, உயிரிகளை புதிய சூழலுக்கு விடுவிக்கிறோம், சாப்பிடுகிறோம். வியட்நாமிய யத்தத்தில், வியட்நாமிய போர்வீரர்கள, கெரில்லாக்கள் இருந்த காடுகளின் இலைகளை உதிரச் செய்ய பயன்படுத்திய, அந்நாளில கெரில்லாக்களுக்கும், படைவீரர்களுக்கும் மிகுந்த உடல்நல, சுகாதாரப் பிரச்சினைகளை ஏற்படுத்திய இரசாயனப் பொருளைப் பாவித்து அமரிக்க மொன்சன்ரோ கம்பனி ஓரஞ்சுப் பழங்களை உருவாக்கியுள்ளது. பசுமாட்டுக்கு இரு கிழமைக்கொரு தடவை ஓமோன் ஊசி அடிப்பதன் மூலம் பாலுற்பத்தியை இதே கம்பனி 25% ஆல் பெருக்கியிருக்கின்றது. ஆனால் அந்தப் பால் நுகர்வோருக்கம், விற்பனையாளர்களுக்கும் ஓமோன் ஊசி மூலம் உருவாக்கப்பட்ட பால் என்று அறிவுறுத்தப்படுவதில்லை.

மொன்சன்ரோ உருவாக்கியிருக்கும் நிறைய உணவுப் பொருட்கள் வாசிங்டன் பபல்கலைக்கழக மருத்துவக் கல்லூரியினால் மூளைப் புற்றுநோயை உருவாக்க வல்லன என்று ஆய்வுகள் மூலம் நிருபிக்கப்பட்டுள்ளன. பீடைக்கும், நோய்க்கும் எதிர்த்து நிற்கும் (சுப்பர்) பயிர்களை உருவாக்குகிறோம் என்று பீற்றிக் கொண்டு, அந்தப் பயிர்களை என்றுமே கட்டுப்படுத்த முடியாத (சுப்பர்) களைகளாக மாற்றிய பெருமையும், பரம்பரைப் பொறியியல்* (Genetical Engineering) மூலம் புதிய மீனினங்களை உருவாக்குகிறோம் என்று கூறிக் கொண்டு, விரைவாக வளரும் மீனினங்களை உருவாக்கி, அவற்றை நீர்நிலைகளில் விட்டு, காலம் காலமாக இலட்சக் கணக்கான வருடங்களாக நீர்நிலைகளில் வாழ்ந்த உள்நாட்டு மீனினங்களை அடித்து துரத்தி அவற்றை அழிவுக்குள்ளாக்கிய பெருமையும் இந்த அழிச்சாட்டிய கம்பனிகளுக்குத்தான் சாரும்.

ஏற்கனவே 60%மான GM சோயா அபிவிருத்தியடைந்த நாடுகளின் சுப்பர் மார்க்கட்டுக்களின் அலுமாரிகளை நிரப்பியிருக்கின்றன. இன்னும் 3000 உணவுப் பொருட்கள் விற்பனைக்குத் தயாராக அணிவகுத்து நிற்கின்றன. இதன் அடுத்த பாய்ச்சல் மூன்றாம் மண்டல நாடுகளை நோக்கித்தான் என்று சொல்ல வேண்டியதில்லை. நமது நாடுவரை இன்று GM உணவுப் பொருட்கள் வந்துவிட்டன. மூன்றாம் மண்டல நாடுகள் அதற்குப் பெயரளவில் எதிர்ப்புத் தெரிவித்தாலும், பல்தேசியக் கம்பனிகளின் நிர்ப்பந்தம் இருக்கின்ற நிலையிலும், GM உணவுப் பொருட்களை கண்டுபிடிக்கும் தொழில்நுட்பம் இல்லாத போதும் , அதனது படையெடுப்பை எவ்வாறு தடுத்து நிறுத்துவது என்பது கேள்விக்குரிய விடயமே. மேலும் எளியவர்களை நோக்கிய வலியவர்களின் புத்திசாதுரியமான படையெடுப்பே இந்த உயிர்-தொழில்நுட்பவியல் ஏகாதிபத்தியமாகும்.

மூன்றாம் மண்டல நாடுகளுக்கிடையே சண்டை ஏற்படுத்துவதிலும் இந்த உயிர்-தொழில்நுட்பவியல் ஏகாதிபத்தியவாதம் குறியாயிருக்கின்றது. மூன்றாம் மண்டல நாடுகள் கஸ்டப்பட்டு ஒரு சிறந்த தானிய இனத்தையோ அல்லது பயிரையோ கண்டு பிடித்தால் (அது பேடன்ட் செய்யப்பட்டது என்றாலும்) இந்த பல்தேசியக் கம்பனிகள் வைரசுகளையம், பக்டீரியாக்களையும் புகுத்தி அதனைவிட கூடிய விளைவதைத் தரும் அதே மாதிரி போலி GM தானியங்களை அல்லது பயிர்களை கண்டுபிடித்து அதன் அயல்நாடுகளுக்கு கொடுத்து அல்லது அதன் பயன்களை அனுபவித்து, முக்கிய வருமானம் தரும் வழிகளில் ஒன்றாக இருந்த அந்தப் பயிர்களை நம்பியிருக்கும் அந்நாடுகளை பொருளாதா ரீதியில் ஆட்டம் காணவைக்கிறார்கள். இதற்கு உதாரணமாக, பிலிப்பைன்ஸ், மலேசியா போன்ற நாடுகளின் சில அரிசி, எண்ணெய்ப் பயிர்களைக் குறிப்பிடலாம்.

இதிலிருந்து பரம்பரையியல் மாசுபடல் (Genetic pollution) என்ற சொல்லாடலின் கருத்தாடலுக்கு நாங்கள் வரவேண்டியிருக்கின்றது. பரம்பரை உருமாற்றப்பட்ட, பழைய நிலைக்கு மீண்டும் வரமுடியாத, தானாகப் பெருகிக் கொண்டேயிருக்கும் உயிரிகளால் சூழலில் ஏற்படுத்தப்படும் விரும்பத்தகாத மாற்றங்கள் பரம்பரை மாசுபடல் எனலாம். இந்த மாசுபடல் பயங்கரமானது. உதாரணமாக ஒரு இரசாயனப் பொருள் (DDT) உயிரினங்களின் உடம்புக்குள் சென்றால் காலக்கிரமத்தில் அது அளவில் குறைவடைந்து இல்லாமலாகிவிடும். ஆனால் அந்த GM உயிர்கள் முடிவற்றுப் பெருகிக் கொண்டே இருக்கும்.

எவ்வளவுதான் சட்டதிட்டங்கள் கட்டுப்பாடுக்ள் இருந்தாலும் கிழக்கு ஐரோப்பிய, மூன்றாம் மண்டல நாடுகள், உலக வங்கி, சர்வதேச நாணயசபை, வல்லரசுகள் போன்றவற்றின் கடன்களையும், நிவாரணங்களையும் எதிர்பார்த்து நிற்பதாலும், உலக வங்கி, சர்வதேச நாணய சபை, வல்லரசுகள போன்றவைகளின் அனைத்து உயிரிகளின் நலனை நோக்கிய பொருளாதார நோக்கினைத் தவிர்த்து, இலாபத்தை மையப்படுத்திய பொருளாதார நோக்கு இருப்பதாலும் இந்த உயிர்-தொழில்நுட்பவியல் ஏகாதிபத்தியவாதத்திலிருந்து மீளுவது கடினமாக ஒன்றாகவே இருக்கும்.

மலையகப் பொலிஸ் நிலையங்களில்

# பெண்களும் மனித உரிமைகளும்

– நேசன்

மலையகத்தின் பல்வேறு பொலிஸ் நிலையங்களிலும் தினசரி முறைபாட்டுக்கு வரும் பெண்கள், குற்றம் சாட்டப்பட்ட பெண்கள், சாட்சியம் அளிக்க வரும் பெண்கள், எவ்வாறு நடத்தப்படுகின்றார்கள் என்பது பற்றிய எவ்விதமான பிரக்ஞையும் மலையக அரசியல் தொழிற்சங்க, அரசியல், தொண்டர் ஸ்தாபனங்களிடையே நிலவுவதாகத் தெரியவில்லை.

வட்டகொடை அக்கரமலைத் தோட்டத்தில் பாலியல் வல்லுறவு புரியப்பட்ட பெண்கள், பசறையில் தாக்குதலுக்குள்ளான பெண்கள், எல்லையில் வல்லுறவுக்குள்ளான பாடசாலை மாணவி, கினிகத்தென பகுதியில் இருந்து கடத்தப்பட்டதாகக் கூறப்படும் இரண்டு பெண்கள், இரத்தினபுரி வன்முறையின் போது வல்லுறவு செய்யப்பட்ட பெண்கள்,



இரத்தினபுரி முன்னால் பாராளுமன்ற உறுப்பினரின் வாகனத்தில் கடத்தப்பட்டு வல்லுறவு புரியப்பட்ட பெண், கண்டி, மாத்தளை, களுத்துறைத் தோட்டப் பகுதியில் அடிக்கடி காணப்படும் பெண்களின் சடலங்கள், நுவரெலியா கோல்ப் மைதானத்தில் எரியூட்டப்பட்டு கிடந்த பெண், கொழும்பு மருதானையில் பட்டப்பகலில் பஸ்ஸில் இருந்து சீருடையில் கடத்தப்பட்ட மலையகப் பெண், பாடசாலைகளில் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்ட பெண்கள் என்று தொடரும் நூற்றுக்கணக்கான பெண்கள் விடயத்திலும் சரி, கொழும்பில் எரியூட்டப்பட்ட புசல்லாவ செல்வி, வத்தளையில் வல்லுறவு புரியப்பட்டு கொல்லப்பட்ட மலையக யுவதி, வத்தளைக் கடற்கரையில் கண்டெடுக்கப்பட்ட மலையக யுவதியின் சடலம், வீடுகளில் நடக்கும் மலையக பெண்களுக்கெதிரான வன்முறைகள், ஆடைத் தொழிற்சாலைகள், போக்குவரத்து சாதனங்கள், வீதிகளில் மலையகப் பெண்களுக்கெதிரான வன்முறைகள் என்பவற்றைப் பற்றியும், மலையக மக்கள் இயக்கங்கள் மூச்சு விடுவதில்லை.

ஆணாதிக்க திமிர்த்தனமும், ஆண்மையப்படுத்தப்பட்ட அதிகார கட்டமைப்பும், அனைத்து நிறுவன சித்தாந்தப் பொறியமைவுகளும், ஆசாரங்களும், ஒழுக்க விழுமியங்களும், கட்டுப்பாடுகளும் பெண்கள் மீது நடத்தப்படும் எந்தவொரு காடைத்தனத்தையும் சமூகம் மௌனமாக அங்கீகரிக்க வழிவகுத்துக் கொண்டிருக்கின்றன.

ஆளும் வர்க்கத்தையும், அதன் அதிகாரத்துவக் கட்டமைப்பையும் பாதுகாத்து நிற்கின்ற இரும்பு அரக்கனான பொலிஸ் பெண்களுக்கெதிரான வன்முறை மற்றும் ஒடுக்கு முறைகளின் உயர்ந்தபட்ச பரிமாணமாக இருக்கிறது.

பல்வேறு சந்தர்ப்ப சூழ்நிலைகளால் பொலிஸ் நிலையங்களுக்குச் செல்லும் மலையகப் பெண்களை பல ஆண்களுக்கு முன்னிலையில் வைத்து ஆபாசமான அருவருக்கத்தக்க வார்த்தைகளால் வசைபாடுவது, அயலவர் உறவினர் இரத்த உறவினரோடு புணருமாறு பகிரங்கமாக அறிவுறுத்துவது, மார்புகள், தலைமயிர் பிட்டங்களை பிடித்திழுத்து அலங்கோலப்படுத்துவது, ஒரு நடத்தை கெட்டவளாக சித்திரிக்க முயல்வது, பாலுறுப்புகளை மையப்படுத்தி வசைபாடுதலும், தாக்குதலும், வல்லுறவுக்கு நிர்ப்பந்திப்பது போன்ற மிகக்கேவலமான ஒடுக்கு முறைகள் மலையகப் பெண்களுக்கெதிராக நடத்தப்படுகின்றன.

இவ்வன்முறைகள் பல சந்தர்ப்பங்களில் பொலிஸ் தரகர்களாக பணிபுரியும், தொழிற்சங்கள் பிர்திநிதிகள், தோட்ட கமிட்டி தலைவர்கள், உள்ளூர் அரசியல்வாதிகள் முன்னிலையிலேயே நடைபெறுகின்றன.

இவ்விடயங்களில் அரசியல்வாதிகளோ, தொழிற்சங்கங்களோ, பெண்ணுரிமை பேசும் அமைப்புகளோ தலையிடுவதும் இல்லை. செய்தியாளர்கள் அம்பலப்படுத்துவதுமில்லை. பாதிக்கப்பட்ட பெண்களும் முறையிடுவதில்லை என்பது மட்டுமல்ல, முறையிட வேண்டிய இடங்களில் எல்லாம் ஆண்கள் ஒநாய்கள் போல வீட்டிருந்து கொண்டு நியாயப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

12.12.2000 அன்று மாலை 3.30 மணிக்கு டீசேர்ட்டும், ஜீன்சும் அணிந்து கொண்டு நடன ஆசிரியை வீதியில் சென்று கொண்டிருந்தார். இவரை பொகவந்தலாவைப் பெரிய எலிப்படை தோட்டத்தில் வைத்து வழிமறித்த நோர்வூட் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த குணசேகரன் (R29078) அடையாள அட்டையைப் பறித்துக் கொண்டு இவரது நண்பரோடு பொலிஸ் நிலையம் வருமாறு பணித்துள்ளார். இரவு 6.30 மணிக்கு பொலிஸ் நிலையத்தில் அடையாள அட்டையைப் பெறச் சென்ற இந்த யுவதியை மிகவும் அருவருக்கத்தக்க

- 19

நன்றி - நூலகத்திட்டம்




# இரண்டு கப்பல்களிலுமிருந்தும் ஷெல் வந்து வீழ்ந்தது!

யாழ்ப்பாணம் வந்தடைந்து மினி வான் பஸ் நிலையத்தில் வீதியில் கால் வைக்கும் போது ஒரு புதிய மனிதனாய் ஒரு புதிய இடத்தில் கால் வைப்பது போல் ஒரு உணர்வு இருந்தது. கண்களைக் கசக்கி விட்டு மீண்டும் பஸ் நிலையத்தை பார்வையிட்டேன். சனம் ஏதுமில்லாமல் ஐந்த அல்லது ஆறு மினி வான் வரையில் நின்றன. சில தேநீர் கடைகள் திறந்த நிலையில் இருந்தன. காலை 7.30 மணியளவில் சனம் குறைவாகத் தான் இருப்பார்கள். ஆனால் ஏன் பஸ்கள் ஒன்றையுமே காணவில்லை என்பது எனக்குப் பிரச்சினையாக இருந்தது. முதல் நாள் இரவு மண்டைதீவுப் பகுதியில் ஒரு பஸ் சாரதியை இராணுவம் தாக்கியதன் விளைவாக இன்று பஸ்கள் ஓடவில்லை எனவும் மினி வான்களின் ஓட்டமும் சிலவேளை நிற்கலாம் எனவும் கூறினார்கள். எனவே, எனது ஊர் வழியாகச் செல்லும் எந்த மினி வான் வந்தாலும் ஏறுவது என்று முடிவெடுத்தேன். என்னிடமிருந்த 5 ரூபாவில் 3.50 சதம் யாழ்ப்பாணம் வருவதற்குக் கொடுத்து விட்டேன். எனது ஊருக்குப் போவதென்றால் இன்னும் 3 ரூபா தேவை. ஆனால் என்னிடம் 1.50 சதம் மட்டுமே இருந்தது. எனவே, நிலைமையைப் பார்த்து கடன் சொல்லி ஏறுவோம். இல்லையேல் 1.50 சதத்திற்கு மட்டுக்கும் போகக் கூடிய இடத்திற்குப் போய் விட்டு மிகுதி நடந்து போவோம் என்று முடிவெடுத்தேன். எனது நிலைமையை நினைத்துப் பார்த்தேன். முன்பு யாழ்ப்பாணம் வருவதென்றால் களிசான் போட்டு ரிப்ரொப்பாக வெளிக்கிட்டு வருவேன். இப்போ சேர்ட்டும் சாரமும் கால்களில் செருப்புக் கூட இல்லை. ஒரு பரதேசியைப் போல இருந்த எனது நிலையை எண்ணிப் பார்த்தேன். ஒருவகையில் சந்தோசமாகக் கூட இருந்தது. முன்பு பெற்றோரின் தயவில் வாழும்போது பணத்திற்கோ உடுப்புக்கோ குறைவில்லை. இன்று அடிமட்ட மக்களின் வாழ்க்கையை வாழப் பழகிய எனக்கு தத்துவத்தில் கூறியதைப் போல் இழப்பதற்கு எதுவுமில்லாத நிலையில் உள்ள வர்க்கத்தைச் சேர்ந்தவனாக மாறி இருந்தேன். நான் போட்டிருந்த உடுப்பு எனதல்ல என்ற நியில் இருந்தேன். ஒரு மினி வான் புறப்படவே அதில் ஏறிக் கொண்டேன். அந்த நடத்துநருக்கு நான் இயக்கத்தைச் சேர்ந்தவன் என்றும் என்னிடம் பணமில்லை எனவும் இருந்த பணத்தைக் கொடுத்து நான் போக வேண்டிய இடத்தையும் கூறினேன். அவரே பயத்தினாலோ அல்லது நல் உணர்வினாலோ என்னிடம் பணத்தை வாங்காமல் எனது கிராமத்திற்கு அழைத்துச் சென்றார். நான் குறிப்பிட்ட இடத்தில் இறங்காமல் அதற்கு முன் பஸ் தரிப்பில் இறங்கி எனது வீடு நோக்கிச் சென்றேன். வீட்டிற்குப் போவதற்கு முன் எனது நண்பரின் வீட்டிற்குப் போய் அவர் மூலம் எனது வீட்டின் நிலைமைகளை அறிந்தேன். நான் வந்துள்ளதை அறிந்தவுடன் அந்தப் பிரதேசத்தில் உள்ளவர்கள் எல்லாரும் என் வீட்டிற்கு வந்து விட்டனர். நான் வீட்டிற்குப் போவதை மிகவும் இரகசியமாக வைத்திருக்க விரும்பினேன். ஆனால் நிலைமை அதற்கு எதிர்மாறாக இருந்தது. அவர்களைப் பிழை சொல்ல முடியாது. ஏனெனில் அவர்களுக்கு நான் வந்துள்ளது மகிழ்ச்சியான விசயம். எனது நிலைமைகள் அவர்களுக்குத் தெரியாது. அவர்களுக்குத் தெரியப் படுத்த நான் விரும்பவும் இல்லை. ஏனெனில் எனது அம்மாவின் உடல் நலமும் எல்லாரின் நலன்களையும் கருதி அதைச் சொல்ல விரும்பவில்லை. நிலைமைகளைச் சமாளித்து நான் இயக்க வேலை சம்பந்தமாக வந்ததாகவும் அதிக நேரம் நிற்க முடியாது எனவும் கூறிவிட்டு சைக்கிளை எடுத்துக் கொண்டு எனது உறவினர் வீட்டிற்குச் சென்று படுத்து விட்டேன். எனது கிராமத்தில் உள்ள மனிதர்களைப் பார்க்கும்போது முன்பு உறவினர்களாகவும் நண்பர்களாகவும் தெரிந்த மனிதர்கள் இப்போது புதியவர்களாக அறிமுகமில்லாத மனிதர்களாக என் கண்களில் தெரிந்தார்கள். என்னுடன் முன்பு ரெல்லோவில் வேலை செய்தவர்களில் ஒருவர் இராணுவத்தினால் கைது செய்யப்பட்டு மூன்று மாதங்களுக்கு மேலாக சித்திரவதை அனுபவித்து கொண்டிருப்பதாகவும் அவரின் சகோதரர் என்னைக் காண வந்துள்ளதாகவும் எனக்குத் தகவல் வந்தது. அவர்களின் எதிர்பார்ப்பு நான் ரெலோவில் இருப்பதனாலும் ரெலோவின் மூலம் அவரின் விடுதலைக்கு முயற்சி செய்வதாகும். ஆனால் என் நிலைமையை அவர்களுக்குச் சொல்ல முடியாது. எனவே, அவர்களைச் சந்திப்பதைத் தவிர்த்து விட்டேன். இந்த நிலைமையில் என்னைப் பார்க்க வந்த நண்பர்களும் உறவினர்களும் என் கால்களையும் கைகளையும் தடவிப் பார்த்தார்கள். அவர்களுக்கு நான் ஆயுதப் பயிற்சி எடுத்தவனா என்பதும் எவ்வகையான பயிற்சி என்பதைப் பற்றியும் தான் கேள்வி. இந்த நிலையில் இவர்களின் எதிர்பார்ப்பும் வாழ்க்கை முறையும் என்னால் ஏற்றுக் கொள்ள முடியாதிருந்தது. முன்பு இதே வாழ்க்கை முறையில் வாழ்ந்த எனக்கு அதுவே இப்போது பிரச்சினையாக இருந்தது. அவர்கள் ஊரில் திரியும் போது நாகரீகமாகத் திரிபவர்கள், வெளிநாட்டிற்குச் செல்வதற்குத் தயாரான நிலையில் எல்லாரும் அங்கேயே வெளிநாட்டு வாழ்க்கை வாழ்பவர்கள். உதாரணமாக வீட்டில் விவசாயப் பயிர்களுக்குப் பதிலாக குரோட்டன்களையும் பூக்கன்றுகளையும் வளர்த்து தண்ணீர் விடுவார்கள். எனது வீட்டில் தங்களுடன் ஒரு நாளாவது நிற்குமாறு அம்மாவும் சகோதரிகளும் கேட்டுக் கொண்டனர். எனவே, அவர்களின் விருப்பத்திற்கேற்ப ஒருநாள் இரவு தங்கி விட்டு வீட்டை விட்டு வெளியேறி விடுகிறதென முடிவெடுத்தேன்.

## பணப்பிரச்சினைக்குத் தீர்வு

நாம் ஏற்கெனவே வந்த நோக்கங்களில் ஒன்றான பணப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு நாட்டில் ஏற்கெனவே இருந்த மற்றத் தோழர்களுடன் கதைத்தோம். நாம் எவருமே முன்பு ரெலோவில் இருந்தோம் என்பதைத் தவிர வேறு எந்த வகையான உறவுகளும் நிர்ப்பந்தங்களும் கட்டுப்படுத்தலும் இல்லாத நிலையில் இந்தியாவில் இருந்த தோழிகளின் நிலையினைக் கருதித்தான் அந்தப் பிரச்சனைகள் தீரும் வரை தொடர்ந்து வேலை செய்வதென முடிவெடுத்தோம். அதாவது யார் விரும்பினாலும் அவர்கள் சொந்த வாழ்க்கைக்குச் செல்லலாம் என்ற நிலையில் இருந்தோம். நானும் என்னுடன் வந்த தோழரும் தோழிகளின் பிரச்சினை முடியும் மட்டும் சேர்ந்து வேலை செய்வதென்ற முடிவில் இருந்தோம். அன்றைய எமது சந்திப்பில் பணத்தை ஏற்பாடு பண்ணிக் கொண்டு திரும்பவும் இந்தியா செல்வதற்கு முடிவு செய்யப்பட்டது. எனது நிலைமைகளை வீட்டிற்குத் தெரியப் படுத்தி நான் நாட்டில் இருப்பது நல்லதல்ல என்றும் திரும்பவும் இந்தியா போக முடிவு செய்து விட்டேன் என்றும் கூறினேன். அவர்களைப் பொறுத்தவரையில் என்னைப் பிரிவது கவலையாக இருந்தாலும் இது நல்ல முடிவாகப் பட்டது. ரெலோவில் இருந்து பல காரணங்களுக்காக நாட்டில் ஏற்கெனவே இருந்த சுதனின் பல அபிமானிகளும் வெளியேறிய உறுப்பினர்களுமாகப் பத்துப் பேரளவில் இந்தியா போவதற்குச் சுதனால் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. அவர்களுடன் அவர்கள் ஒழுங்கு செய்த படகில் நாம் இருவரும் இந்தியா போக புறப்பட்டோம்.

ஒரு தமிழீழப் போராளியின் கதை -11



> எனது நிலைமையை நினைத்துப் பார்த்தேன். முன்பு யாழ்ப்பாணம் வருவதென்றால் களிசான் போட்டு ரிப்ரொப்பாக வெளிக்கிட்டு வருவேன். இப்போ சேர்ட்டும் சாரமும் கால்களில் செருப்புக் கூட இல்லை. ஒரு பரதேசியைப் போல இருந்த எனது நிலையை எண்ணிப் பார்த்தேன். ஒருவகையில் சந்தோசமாகக் கூட இருந்தது. முன்பு பெற்றோரின் தயவில் வாழும்போது பணத்திற்கோ உடுப்புக்கோ குறைவில்லை. இன்று அடிமட்ட மக்களின் வாழ்க்கையை வாழப் பழகிய எனக்கு தத்துவத்தில் கூறியதைப் போல் இழப்பதற்கு எதுவுமில்லாத நிலையில் உள்ள வர்க்கத்தைச் சேர்ந்தவனாக மாறி இருந்தேன். நான் போட்டிருந்த உடுப்பு எனதல்ல என்ற நியில் இருந்தேன். ஒரு மினி வான் புறப்படவே அதில் ஏறிக் கொண்டேன்.

## திரும்பவும் இந்தியா செல்லல்

இந்த முறை எனது இந்தியப் பயணம் முந்தியதைப் போலல்லாமல். மிகவும் மாறுபட்டிருந்தது. முன்பு மனதில் இருந்த சந்தோஷம், எதிர்பார்ப்பு, எதிர்காலத்தினைப் பற்றிய நம்பிக்கை, நாட்டு விடுதலை எல்லாமே இப்போதைய பயணத்தில் இருக்கவில்லை. இந்தியா திரும்பிப் போகின்றோம் என்பதைத் தவிர மனதில் எந்த ஒரு மகிழ்ச்சியும் இல்லை. வெறும் உணர்வற்ற நடைப்பிணம் போல இருந்தேன். இதைவிட படகின் பயணத்தில் ஏற்பட்ட கஸ்டங்களை, அனுபவங்களை ஒரு வாரத்தில் திரும்பவும் பெறப்போகின்றேன் என நினைத்து அது வேறு கவலையாக இருந்தது. இம்முறை வாடகைக்கு ஓடும் படகில் பணத்தினைக் கொடுத்துப் புறப்பட்டோம். படகில் ஏறியவுடன் படகின் முன் பக்கத்தில் உட்கார்ந்து கடற்படையின் நடமாட்டம் இருக்கிறதா எனப் பார்க்குமாறு கூறினார்கள். படகில் யாருமே முன்னுக்கு இருக்க விரும்புவதில்லை. ஏனெனில் படகின் வேகத்திற்கு அதிகமாக தூக்கிக் குத்தப்படுவது முன்பக்கமாகும். ரெல்லோவில் இருந்து பிரிந்த இன்னொரு தோழருடன் சேர்ந்து முன் பக்கத்திலே இருந்தேன். அந்தத் தோழர் படகுப் பயணத்தில் நிறைய அனுபவங்கள் உள்ளவரானதாலும் இரண்டு மாதத்திற்குப் பின் அவர் என்னைக் காணுவதனால் பல விடயங்கள் பேசிக் கொண்டு போகலாம் எனக் கூறினார். இந்த முறை படகு அலைகளுடன் சேர்ந்து போனதால் ஒருவிதமான குலுக்கலும் இல்லாமல், ஒரு துளி கடல் நீர் கூட எம்மில் படாமல், எவருமே சத்தியும் எடுக்காமல் பயணம் செய்தோம். நாம் மாதகல் பகுதியில் இருந்து புறப்படும் போது சுமார் மாலை 6.30 மணி இருக்கும். கரையில் இருந்து பார்க்கும் போது கடற்படையின் கப்பல்கள் இரண்டு ஒன்று வலது பக்கத்திலும் மற்றது இடது பக்கத்திலும் இருந்ததைக் கவனித்தோம். எனினும் பயணத்தினை ஒத்தி வைக்காமல் இரு கப்பலுக்கும் நடுவாக நாம் போய் விடலாம் என்ற முடிவை ஓட்டிகள் எடுத்தனர். சுமார் 7.15 மணி அளவில் ஒரு வெடிச் சத்தம் கேட்டது. சில நிமிடங்களின் பின் மூன்று நான்கு வெடிச் சத்தங்கள் கேட்டன. கடற்படையின் இரு கப்பல்களிலிருந்தும் எமது படகை நோக்கி ஒரு வகையான ஷெல் தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டது. நாம் வந்த படகில் மூன்று மோட்டார்கள் பொருத்தினாலும் இரண்டு மோட்டார்களின் உதவியால் தான் இதுவரை பயணம் செய்த நாம் மூன்றாவது மோட்டாரை ஆரம்பிக்க முயற்சித்தனர். அந்த நேரம் பார்த்து மூன்றாவது மோட்டர் வேலை செய்யவுமில்லை. அதுவரை எமது படகுக்கு தொலைவில் விழுந்த ஷெல்கள் இப்போது எமது படகுக்கு முன்னால் விழத் தொடங்கின. அதாவது அவர்களின் ஷெல் தாக்குதல்களின் எல்லைக்குள் நாம் நிற்கின்றோம் என்று தெரிந்தது. எல்லோரும் பதட்டப்பட்டோம். மீண்டும் எனக்கு சீ என்று போய் விட்டது. நேவி கடலில் இரண்டு கப்பல்களில் நிற்கின்றார்கள் என்று தெரிந்தும் நாம் ஏன் புறப்பட்டோம். நீந்தவும் தெரியாது. இதுபோன்ற பல யோசனைகள் எனக்குள் இருந்தன. ஒரு வழியாக மூன்றாவது மோட்டாரை இயக்கினார்கள். அதற்குப் பின் எமது படகின் வேகம் அதிகரித்து நேவியின் தாக்குதலில் இருந்து தப்பினோம். இரவு பதினொரு மணியளவில் வேதாரண்யம் வந்தடைந்து அடுத்த நாள் காலை சென்னைக்குப் புறப்பட்டோம். எம்மோடு வந்தவர்கள் முன்னாள் ரெல்லோ உறுப்பினர்களாகவும் அவர்களின் உறவினர்களாகவும் இருந்ததினால் எமக்கும் அவர்களுக்கும் நெருக்கமான அரசியல் உறவுகள் இல்லாத படியாலும் நாம் அவர்களை எம் வீட்டிற்குக் கூட்டிச் செல்ல விரும்பவில்லை. ஆனால் அவர்களுக்கு வேறு இட வசதிகள் இல்லாததனால் அவர்கள் இடம் எடுக்கும் வரை அவர்களை தற்காலிகமாக எங்களுடன் தங்க வைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

தொடரும்

நன்றி - நூலகத்திட்டம்



# மலையகத்தில் இனவெறியின் அட்டூழியம்!

ஒக்டோபர் 25ம் திகதி இடம்பெற்ற பண்டாரவளை படுகொலை முடிந்து, ஒரு ஆர்த்தெழுதலும் அடக்கப்பட்டு விட்டப்பின்னர் அது மறக்கப்பட்டு வரும் நிலையில் திருமலையிலும், மிருசுவிலும் தன் வீறார்ந்த சண்டித்தனத்தை சமாதானத்துக்கான இராணுவம் வெளிக்காட்டி வருகின்றது. ஆக பிந்துனுவெவ மலையகப் படுகொலைகளும், மூடிமறைக்கப்பட்டாயிற்றா என்று எண்ணத் தோன்றுகின்றது.

படுகொலைக்கெதிரான மலையக எழுச்சி அரச படைகளதும், குண்டர்களதும் கோரத்தாண்வத்துடன் முடிவடைந்து விட்டது தலவாக்கெலையிலும், கினிகத்தெனையிலும், இராணுவ பொலிஸ், குண்டர் கூட்டுக் கும்பல்களால் ஏரியூட்டப்பட்டு சூறையாடப்பட்ட கடை களுக்கு ஆறுமுகம் தொண்டமானும், எஸ்.பி. திசாநாயக்காவும், தத்தமது அமைச்சு மூலம் நிதி ஒதுக்கீடு செய்து மிகவும் பாரபட்சமான முறையில் ஒவ்வொருவருக்கும் ஏற்பட்ட சேதத்தில் 10சதவீததிற்கும் குறைந்த தொகையை நட்டஈடாக வழங்கியிருக்கின்றனர். ஆனால் அரசு எவ்வித இழப்பீடும் வழங்கவில்லை.

மலையகத் தமிழர் மீதான வெறியாட்டத்தின் போது துப்பாக்கிச்சூட்டினால் 6 பேர் வெளிப்படையாக கொல்லப்பட்டிருக்கிறார்கள். பலர் மறைமுகமாகவும், சாகடிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆக இவ்வன்முறை வெறியாட்டத்தில் 17பேர் வரை பல்வேறு சம்பவங்களால் கொல்லப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால், 10 பேர் இறந்ததற்கான சான்றிதழ்களே உறுதிப்படுத்த முடிகிறது. அதிலும் துப்பாக்கிச்சூட்டில் இறந்த மூன்றுபேர் யார் என்ற விபரம் இதுவரை எவராலும் வெளியிடப்படவில்லை. பல மரணங்களை மரணவிசாரணையின்றியும் உறவினர்கட்கு அறிவிக்காமலும் மர்மமுறையில் பொலிஸாரும், இராணுவமும் வன்முறைக் கும்பல்களும் புதைத்திருப்பதாகவும் செய்திகள் வருகின்றன. துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களால் நாவலப்பிட்டி, கண்டி வைத்திய சாலைகளில் 50 பேர் சிகிச்சைப் பெற்றதாக அறியமுடிகிறது. பல டசின் கணக்கானோர் வாள் வெட்டுக்குள்ளாகியுள்ளனர். ஐந்துபேர்வரை வன்புணர்வுக்குட்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதில் பல சம்வங்கள் வெளிச்சத்திற்கு கொண்டு வரப்படவில்லை. பலர் சிகிச்சை பெறவில்லை.

இறந்தவர்களுக்கு உரிமை கோரமுன்வரவில்லை. இதனைத் தேடித்தொகுப்பதில் எந்த மலையக அமைப்புகளும் முழுமையாக ஈடுபட்டு வெற்றி பெற்றதாகவும் தெரியவில்லை.

இந்நிலைமையில் இறந்தவர்களின் குடும்பங்கள் பல. அவர்கள் நம்பிவாழ்ந்தவர்கள் மரணித்தால் நிர்க்கதியாகியிருக்கின்றனர். காயப்பட்டு ஊனப்பட்டவர்கள் மீண்டும் தொழில்புரிய முடியாது. சொத்துக்களை இழந்தவர்கள் மீள அதைப் புதுப்பிக்க முடியும். ஆனால், அதற்கு பொருளாதார உதவிகள் தேவை. காணாமல் போன அல்லது காணமலாக்கப்பட்டதாகக் கருதப்படுவோர் சிலர் என்ன ஆனார்கள்" என்றும் தெரியவில்லை.

இந்நிலையில் காணாமல் போனவர்களுக்கு இறந்தவர்களுக்கு காயப்பட்டவர்கள் உடமை இழந்த தோட்டத் தொழிலாளர்களுக்கு அரசு எவ்வித நட்டஈட்டையும் இதுவரை வழங்க முன்வரவில்லை, மேலும் இதுகுறித்த நீதிவிசாரணைகளும் இடம்பெறவில்லை. பெரும்பான்மை இனத்தவர்களில் தலவாக்கலையில் 32 வீடுகளும், 10 கடைகளும் சேதமாக்கப்பட்டுள்ளன. எல்டன் கேறால் பசாரில் 6 கடைகளும், குடியேற்ற திட்டத்தில் 6 வீடுகளும், சேதமாக்கப்பட்டன. இவர்களுக்கெல்லாம் நட்டஈடு வழங்கப்பட்டுள்ளது. நோனாவத்தை குடியேற்றத்திற்கு நட்டஈடு வழங்கப்பட்டுள்ளது. ஆனால், பாதிக்கப்பட்ட நோனாவத்தைத் தோட்டத் தொழிலாளர்கள், செடிங்டன் தோட்டத் தொழிலாளர்கள் கினிகத்தெனை கண்ணிபெட்டி தோட்டத் தொழிலாளுக்கு இன்று எவ்வித அரச நிவாரணமும் வழங்கப்படவில்லை.

நாகசேனை ஓடிங்டன், தனியார் தோட்டத்தில் இராணுவம் குடியேற்ற கிராமவாசிகளும், நேரடியாக புகுந்து வீட்டிலுள்ளவர்களை தாக்கிவிட்டு வீட்டிலிருந்த பொருட்களை எல்லாம் அடித்து நொருக்கி தீ மூட்டி எரித்துள்ளனர்.

மலையகம் மீது கட்டவிழ்க்கப்பட்ட இராணுவ பொலிஸ், வெறியாட்டம், குறித்த பகிரங்க விசாரணை நடத்தப்பட்டாலே உண்மைகள் ஓரளவுக்காவது வெளிவரமுடியும் என்ற நிலையில் அரசு இவற்றை முழுமையாக மூடிமறைக்கும் கைங்கரியத்தில் ஈடுபட்டுள்ளது. சகல தடயங்களும் அழிக்கப்பட்டு வருகின்றன.

இறந்தவர்கள் மரண விசாரணையின்றி பொலிசாரால் புதைக்கப்பட்டுள்ளனராயின் அவர்களைத் தோண்டி மீண்டும் மரணவிசாரணை நடத்தப்பட்டு உறவினரிடம் கையளிக்கப்பட்ட வேண்டும்.

✔ இவ் அநியாயக் கொலைகளை செய்தவர்கள் யாரென இனம் காணப்பட வேண்டும். நீதியின் முன் நிறுத்த வேண்டும்.

✔ வன்முறைகள் காடைத் தனங்களில் ஈடுபட்ட இராணுவ, பொலிஸ் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

✔ வல்லுறவில் ஈடுபட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

இறந்த மலையகத்தவர் விடயத்தில் அமைச்சர் ஆறுமுகமோ அவரது தாபனமோ மூச்சுவிடவில்லை. ஆனால், இறந்த பலர் இ.தொ.காவைச் சேர்ந்தவர்கள் தான்.

புனர்வாழ்வு நிதியம் அமைக்க பறப்பட்ட சந்திரசேகரன் ஜனாதிபதியிடமும், எஸ்.பி. திசாநாயக்கவிடமும் மண்டியிட்டு மடியேந்திக் கொண்டிருக்கிறார்.

முழுகெலும்பில்லா அரசியல். தொழிற்சங்கங்களின் பிடியில் மலையகம் இன்னும் எத்தனை நாள் காத்திருக்க

அரசுடன் சேர்ந்திருப்போரும் அரசுக்கு வெளியில் பலமான அழுத்தம் தரக்கூடிய சக்திகளும் ஒன்றுபட்டு இவ்விடயத்தில் மக்கள் நலனுக்காக குரல்தர வேண்டும்.

அவ்வாறிலிலாது போனால் எதிர்காலத்தில் இதுவே ஒரு நிகழ்வுப் போக்காக மலையகத்தில் வியாபிக்கப்படும் நிலை உருவாகலாம்.

பிந்துனுவெவ படுகொலைக்குப் பின்னர் மலையகம் இழந்த உயிர்கள் பெறுமதிமிக்க மனித உயிர்கள் தான் என்பதை உணர்வார்களா என்பது சந்தேகமே!

### மலையக பேரெழுச்சியை ஒடுக்கும் ஆயுதமாக பாலியல் வன்புணர்வுகள்

* வட்டகொடை மடகும்புர தோட்டம் அக்கரமலை பிரிவு பங்களா காவலாளி செல்லையா முத்தையா (69)இன் மூன்று புதல்விகள் பெரும்பான்மையின காடையரால் கடத்தப்பட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

* கினிகத்தேனையைச் சூழவுள்ள பகுதிகளில் அட்டன், நாவலப்பிட்டி, பஸ்டிப்போவுக்கு சொந்தமான பஸ் வண்டிகளில் கொண்டுவரப்பட்ட தமிழர்கள் கினிகத்தென பகுதியில் தாக்கப்பட்டனர். இதில் அட்டன் டிப்போவைச் சேர்ந்த அமர, நிசாந்த எனும் சாரதிகள் பெரும்பங்கு வகித்துள்ளனர். இச்சம்பவங்களில் கடத்தப்பட்தாக கூறப்படும் இளம் பெண்கள் பற்றிய தகவல்கள் எதுவுமில்லை.

* பதுளை நகரில் இளைஞர் கைதாகி விடுவிக்கப்பட்டுள்ளனர்.

* ஹஸ்துமுல்லை நீட்வூட் தோட்ட இளைஞர் 18பேர் கைதாகி பிணையில் விடப்பட்டுள்ளனர்.

* அப்புத்தளையில் மூன்று இளைஞர்கள் கைதாகி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

* பசறை பகுதியில் 20 இளைஞர்கள் நமுனுகுல காட்டில் புலிகளிடம் ஆயுதப்பயிற்சி பெற்றதாக கூறி கைது செய்யப்பட்டுள்ளனர்.

மலையகமெங்கும் 29.10.2000 முதல் 03.10.2000 வரை நடத்தப்பட்ட பொலிஸ் துப்பாக்கிச்சூட்டில் பலர் இறந்தனர். பலர் காயமுற்றனர். இத்துப்பாக்கிச் சூட்டினை நடத்தியோரில் பெரும்பாலானவர்கள் மலையகத் தமிழ் பொலிசார் என்ற அதிர்ச்சி விடயம் அம்பலமாகியுள்ளது. உதாரணமாக சில.

| | துப்பாக்கிச்சூடு நடந்த இடம் | துப்பாக்கிச்சூடு நடத்தியவர் பெயர்/ பொலிஸ் நிலையம் | திகதி |
|---|---|---|---|
| 1. | பொரலந்த சந்தி ஹாவா எலிய, நுவரெலியா | "செந்தில்" நுவரெலியா | 29.11.2000 |
| 2. | தலவாக்கலை நகரம் | அருளானந்தன், தலவாக்கலை | 29.11.2000 |
| 3. | பொகவந்தலாவ, டியன்சின் | சுரேஸ், பொகவந்தலாவ. | 30.11.2000 |
| 4. | தென்மதுரை தோட்டம் நோர்வூட் | குணசேகரன் (ஆர்.69078) நோர்வூட் | 30.11.2000 |
| 5. | பாத்போர்ட், டிக்கோயா | | 30.11.2000 |
| 6. | கெலிவத்தை -பத்தனை | பாலித்த, பத்தனை | 30.11.2000 |

* பொலிஸ் துப்பாக்கிச்சூட்டில் 6 பேரும் குண்டர் தாக்குதலில் 11 பேரும் இறந்திருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. ஆனால், துப்பாக்கிச்சூட்டில் மரணமான 3பற்றிய தகவலே பெறக்கூடியதாயுள்ள து. ஏனையவர்கள் யார் எவ்விடத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை அறிந்தோர் தெரிவிக்க முன்வரவேண்டும்.

| இல | பெயர் | வயது | முகவரி | சம்பவம் நடைபெற்ற திகதி | சம்பவம் நடைபெற்ற இடம் | இறுதிக் கிரிகை நடந்த இடம் | சூடு பட்ட சூழ்நிலை |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | செல்லையா மாதவன் | 30 | பீட்ரு தோட்டம் நுவரெலியா | 29.11 | பொரலந்தை | கண்டி மகியாவ | கொடி கட்டும் போது ராமர் என்பவரை சஞ்சீவ லால் என்பவர் தாக்க அதைத்தடுக்க முயன்றபோது நுவரெலியா பொலிஸ் நிலையத் சேர்ந்த செந்தில் என்பவரால் சுடப்பட்டார். |
| 2 | வேல பாலசுப்ரமணியம் (திருமணமானவர் 3 குழந்தைகளின் தந்தை மனைவி ஜெயகௌவரி மகேஸ்வரி -14 சசிகுமார் -12 பெரியக்கா -09) | 34 | பெரிய கட்டுக்கலை தலவாக்கல | 31.11 | கட்டுக்கலை தோட்ட வீட்டுக்கு அருகில் | கண்டி மகியாவ | அதிகாலை 6.30க்கு இராணுவம் பிரவேசித்து சகல இளைஞர்களையும் தாக்கியபோது தப்பி ஓடிய போது சுடப்பட்டார். பின் ட்ரூப் எரிந்த பெரும்பான்மை இன கடையருகில் போடப்பட்டு படம் பிடிக்கப்பட்டுள்ளது. |
| 3 | காரளன் (திருமணமானவர்) | 30 | ட்ரூப் தோட்டம் தலவாக்கல | 29.11 | தலவாக்கல நாள் | கண்டி மகியாவ | தோட்ட டீ மேக்கருக்கு மரக்கறி வாங்க சென்றபோது சுடப்ட்டதாக கூறப்படுகிறது. |
| 4 | எஸ். செல்லையா | 92 | மடகும்புர அக்கரமலை வட்டகொட | 30.11 | அக்கரமலை தோட்டத்தில் | அக்கரை தோட்டத்தில் | மாலை 8.00 மணிக்கு நந்தகுமார் என்ற பிரதேச சபை உறுப்பினர் வீட்டை 20 பேருடன் பார்வையிச் சென்றதும் இச்சம்பவம் நடந்துள்ளது. |
| 5 | பெயர் வெல்தோட்ட தொழிலாளி | 50 | பெயர்வெல் தோட்டம் தலவாக்கல | 30.11 | தாக்கபட்படு ஆற்றில் வீழந்து மரணம் | பெயர் வெல் | |
| 6 | கித்துல்கலை ஆற்றில் வீழந்து மரணம் | - | ? | 30.11 | காடையர்கவேள் தாக்கப்பட்டதில் தப்பியோடி போது மரணம் | | |

நன்றி - நூலகத்திட்டம்



முடியும்? என்பது கேள்விக்குறியாகிவுள்ளது.

இந்நிலையில் மலையக மக்கள் பிரச்சினையில் பொது அமைப்பு ஒன்றை ஆரம்பிப்பது பற்றிப் பேசப்பட்டு வருகிறது. கண்டியில் கூடிய 18 மலையக அமைப்புகள் ஒன்றிணைந்து மலையக வன்முறையை கண்டித்து போராட்டம் நடத்தவும், விசாரணைக்குழு அமைக்கவும், அரசை நிர்பந்திப்பதென தீர்மானித்துள்ளன. இக் கூட்டத்தில் இ.தொ.கா. கலந்து கொள்ளவில்லை என்பதோடு பல தொண்டர்தாபனங்கள் முன்வந்து அங்கத்துவம் வகிக்கின்றன.

காலத்தக்கு காலம் பொது அமைப்புப் பற்றி பேசப்படும்போது மலையகத்தில் தனிப்பட்ட குடிசார்ந்த அரசியல் தான் மேலோங்கியிருக்கின்றன. பொது அமைப்புகள் சிதைந்து சின்னாபின்னாமானது மட்டுமல்ல, பொது அமைப்பாக இயங்கும்போதே வெட்டு கொத்தோடு வீழ்ந்திருக்கின்றன. இதனையே "கூடி கெடவும், கூடி கெடுக்கவுமான" பொது அமைப்பென இளம் தலைமுறை கருதுகிறது. இவ்வாறான அமைப்பொன்றுக்கு முன்னால் அதற்கான வெகுஜன நிகழ்ச்சித் திட்டம் முன்வைக்கப்பட்டு அதனை ஏற்று தனியாகவும், கூட்டாகவும், அத்திட்டத்தை முன்னெடுக்க ஒரு பொது அமைப்பு உருவாகுமாயின் அது சிலவேளை நின்று பிடிக்கக்கூடும்.

அதிகாரி மிருகத்தனமாக தாக்கியுள்ளார்.

மஸ்கெலியா பொலிசார் தம்மிடம் அகப்பட்டோரை நையப்புடைந்துள்ளதோடு சமூகசேவை நிறுவன ஊழியர் ஒருவரை மிகக்கொடிய மிருகவதைக்கு உற்படுத்தியுள்ளனர்.

அவசரகால சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட பலர் பிணையில் விடுவிக்கப் பட்டுள்ளனர். இவர்களை தாமே விடுவித்ததாக அரசியல் கட்சிகளும், தலைவர்களும், பொய் முழக்கமிட்டு வருவதோடு தொடர்பூடங்கள் சில இவர்கள் சாதாரண சட்டத்தின் கீழ் விடப்பட்டதாக பொய்ப்பிரசாசரமும் செய்கின்றன.

திட்டமிட்ட முறையில் மலையகத்தின் கேந்திரப் பகுதிகளில் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. தலவாக்கலை, லெமினர் தோட்டத்தில் 100 பேருடன் அமைக்கப்பட்ட இராணுவ் முகாம், நானுஓயா, நுவரெலியா, டயகம, அக்கரைப்பத்தனை, தலவாக்கலை லிந்துலை, தமிழ் பிரதேசங்ளைத் துாண்டிடுதல், மற்றும் எல்டன்ஹேம், தோலைத்தை, தலவாக்கலை குடியேற்றங்களை விரிவுபடுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

# திட்டமிட்டு ஒடுக்கப்படும் தமிழர்கள்

அட்டன், காமினிபுரவுக்கு அருகில் உள்ள அட்டன் தோட்ட கைத்தொழில் பயிற்சி நிலையத்திலும், காகல்தி தோட்டத்திலும் இராணுவ முகாம்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

இது நோட்டன், மஸ்கெலியா, கினிகத்தெனை குடியேற்றங்களை பலப்படுத்தும் நோக்குடையது.

அட்டன் தலவாக்கலை வீதியில் சென்கிளர் தோட்டத்தில் 100 ஏக்கரில் இராணுவ முகாம் அமைக்கவும் குடியேற்றமொன்றை அமைக்கவும், முயற்சிகள் திரைமறைவில் நடக்கின்றன என நம்பப்படுகிறது. இம்முகாம் பத்தனை, நாவலப்பிட்டி வீதி, குடியேற்றங்களையும், மேல் கொத்தமலை நீர்த்தேக்கத் திட்டத்தையும் நிறைவேற்றும் நோக்குடையது.

இக்குடியேற்ற - இராணுவ முகாம் அமைக்க முற்றுகை திட்டங்கள் மூலம் மலையக மக்களை நீண்டகால நுகத்தடியில் வைக்கவும் - இளைஞர்களையும், காணிகளையும், வேட்டையாடவும், அரசும் முயலும் பட்சத்தில் அது மலையக தமிழரில் கரையாக சகவாழ்வையும், எதிர்ப்புணர்வையும் மழுங்கடிக்கும் அதேவேளை மாறுபட்ட எதிர்ப்பை அரசு எதிர்கொள்ள நேரலாம்.

### மலையக எழுச்சியின் பின்னரான நெருக்குவாரங்கள்

மலையக எழுச்சியை நசுக்கிய அரச கூலிப்படைகள் தமிழ் இளைஞரை குறிவைத்து வேட்டையாடியது. துரிதமாக தமிழரை சுட்ட துப்பாக்கிகளும், தமிழ் இளைஞரையே தேடித்தேடிப் பிடித்து வதைத்த பொலிசாரும் அற்புதமாக நீதியை நிலைநாட்டினார்கள்.

ஹங்கு முல்லை பிரதேச செயலாளரின் முறைபாட்டை ஏற்று நீட்லும் தோட்டத்தைச் சேர்ந்த 18 பேரை கைது செய்தார்கள். லிந்துள்ள விகாரதிபதியிடம் வாக்குமூலம் பெற்று சந்திரசேகரனையும் 50க்கு மேற்பட்ட இளைஞரையும் கைது செய்தார்கள். சிங்கள மக்களின் பாதுகாப்புக்கென பிரவேசித்து இராணுவம் தமிழ் மக்களை சூறையாடியது. ஆனால், தமிழர்களின் முறைப்பாடுகளின்படி எவரும் கைது செய்யப்பட்டதாகவோ, அவசரகாலச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டதாகவோ தகவலில்லை.

மேலும் கைது செய்யப்பட்டவர்கள் பொலிசாராலும், உளவுப் பிரிவினராலும், கண்டி, பதுளை சிறைச்சாலை அதிகாரிகளையும் கடும் சித்திரவதைகளுக்கு ஆளாக்கியுள்ளனர். பதுளை சிறைக்கு கொண்டு செல்லப்பட்டவர்களை 20 க்கும் மேற்பட்ட சிறைக்காவலர்கள் சூழ்ந்து ஒவ்வொருவராக எடுத்து கடுமையாக தாக்கியுள்ளனர். பின்னர் கைதிகளாலும் தாக்குதலுக்குள்ளாகியுள்ளனர். இவர்களுக்கு சிகிச்சைகளும் அளிக்கப்படவில்லை. பௌத்த துறவியை கொன்றதாகவும் சிங்கள மாணவியரை வல்லுறவு புரிந்ததாகவும், குற்றம்சாட்டி இத்தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளன. இவர்கள் பொலிஸ் நிலையங்களிலும் நையப்புடைக்கப்பட்டுள்ளனர்.

நுவரெலியா புலனாய்வு பிரிவில் வைக்கப்பட்டு பலர் சித்திரவதைக்குள்ளாகியுள்ளனர். இவர்களில் இராஜேந்திரன் மலர்வாசகம், (கருப்பு) ஆகியோர் கடும் சித்திரவதைக்குள்ளாகியுள்ளனர். இவர்கள் நீதிமன்றத்திலும் இதுபற்றி வாக்குமூலம் அளித்துள்ளனர்.

கண்டி போகம்பரை சிறையிலும் இவ்வாறான தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. நோர்வூட் பகுதியில் சந்தேகத்தின் பெயரில் கைதான திருமலை இளைஞர் ஒருவரை போகம்பரை சிறைச்சாலை

### ஊவாத் தமிழர் கைவிடலா? கழுத்தறுப்பா?

மலையக எழுச்சி முடிந்த கையோடு பசறையில் தமிழ் தாயும் மகளும் வீதியில் வைத்து பசறை பொலிசாரால் துகிலுரியப்பட்டு தாக்கப்பட்டுள்ளார்கள். மூவின மக்களும் திரண்டு காட்டிய எதிர்ப்பினால் நான்கு பொலிசார் இடமாற்றப்பட்டிருக்கிறார்கள். மறுதினமே பதுளை நகரில் 20 தமிழ் இளைஞர் வேட்டையாடப் படுகின்றார்கள். இப்போது பசறைத் தோட்டங்களில் புலிவேட்டை நடக்கிறது.

ஒப்டன், மீதும்பிட்டிய, யூரிதோட்டப் பகுதியில் 10க்குப் மேற்பட்ட இளைஞர்கள் கைதாகியுள்ளனர். நமுனுகுல காட்டில் புலிகள் ஆயுதப்பயிற்சி அளிப்பதாகவும், எல்லாளன்படை இங்கே உருவாகி வருவதாகவும், பிரச்சாரம் செய்யப்படுகிறது.

அம்மையார் ஆட்சிப்பீடமேறிய 1994 இல் அட்டன் பகுதியில் வேட்டையாடப்பட்ட இளைஞர்கள் மலையக விடுதலை முன்னணியைச் சேர்ந்தவர்கள் எனவும், இவர்களிடம் ஆயுதங்கள் கைபற்றப்பட்டதாகவும், பிரச்சாரப் படுத்தப்பட்டது. பின்னர் அவர்கள் சத்தமின்றி விடுவிக்கப்பட்டனர்.

மலையக இளைஞர் கைதுகளை நியாயப்படுத்தியும், துாண்டியும், வருவதில் மலையக அமைப்புகள் தலைமைகளுக்கு ஒரு தீர்க்கமான பங்குண்டு என்பது பல தடவை நிருபனமாகியுள்ளது.

இறுதியாக மலையக இளைஞர்களை கைது செய்வதை நிறுத்துமாறு கோரமுடியாத சக்திகள் அரசுடன் இருக்கின்றன. வேட்டைக்கு முன்னால் மோப்ப நாய்களாக இவர்களும் இவர்களின் ஆதரவாளர்களும் திகழ்கின்றனர்.

மலையகம் மீதான துப்பாக்கித் தாக்குதலில் பல தமிழ் பொலிசாரால் நடத்தப்பட்டுள்ளன. இவர்கள் அனைவரும் ஒரு அமைப்பை சேர்ந்தவர்கள் என்பதும் அம்பலமாகியுள்ளது.

இந்நிலையில் அரச இயந்திரம், பேரினவாதம், இவர்களின் மலையக கைக்கூலிகள் ஏவல் நாய்கள் மக்களை பலி கடாக்களாகவும், வேட்டையாடவும் காத்து நிற்கின்றன.

நிதானமான அடியெடுப்புக்கள் மூலம் நிலைமை மாற்றியமைக்க மக்களை நேசிக்கும் ஒவ்வொருவரும் முன்வரவேண்டும்.

**பொலிஸ் இராணுவ துப்பாக்கிச்சூட்டிலும் குண்டர் தாக்குதலிலும் 80 பேர்வரை படுகாயம் அடைந்ததாக தகவல் தெரிவிக்கின்றன. ஆனால், முழு விபரமும் எங்கும் பெறமுடியவில்லை. பாதிக்கப்பட்டோர் அல்லது தகவல் தெரிந்தோர் அதனை வெளிப்படுத்த முன்வரவேண்டும்.**

| இல | பெயர் | முகவரி | தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1 | எஸ்.சிவகுமார் (துப்பாக்கிச்சூடு) | | மருத்துவ மனையில் இருந்து போகம்பரை சிறைக்கு மாற்றம் |
| 2 | பாக்கியராஜ் செல்வம் (25) (துப்பகாக்கிச் சூடு) | கெலிவத்தை பேகவத்தை பத்தனை | |
| 3 | செல்லையா முத்தையா (வாள் வெட்டு) | அக்கரமலை மெடகும்புர வட்டகொடை | |
| 4 | சுரேஸ் குமார் (வாள் வெட்டு) | | |
| 5 | சுப்பிரமணிய சர்மா (தாக்குதல்) | கொட்டகலை | |
| 6 | ஜெயவேல் ஜெயகுமார் (38) (துப்பாக்கிச் சூடு) | கெலிவத்தை பத்தனை | |
| 7 | இராமன் சுப்பிரமணியம் (58) (துப்பாக்கிச் சூடு) | கெலிவத்தை பத்தனை | |

| இல | பெயர் | வயது | முகவரி |
|---|---|---|---|
| 1 | கந்தையா | | ஓல்டன் தோட்டம் பதுளை |
| 2 | கிருபாகரன் | 15 | களுவங்கேணி, மட்டக்களப்பு |
| 3 | கணேஸ் | 30 | மொனராகலை |
| 4 | இலங்கேஸ்வரன் | 37 | யூரி தோட்டம், பதுளை |
| 5 | லச்சுமணன் சேகரன் | 26 | மீதும்பிட்டிய பசறைத் தோட்டம், பசறை |

### தலவாக்கலை நகரின் இராணுவம் பொலிஸ், காடையர் நடத்திய தீவைப்பு, கொள்ளையடிப்புகளில் சேதமான தமிழரின் கடைகள்

1. நித்திய கல்யாணி யுவலரி
2. மொரன் ட்ரேடர்ஸ்
3. பஞ்சலிங்கம் ஸ்ரோர்ஸ்
4. மகாலட்சுமி ஹோட்டல்
5. உமையாள்ஸ்
6. சிவா ஹாட்வெயார்ஸ்
7. ஹேல்பூருக் வைன் ஸ்ரோர்ஸ்
8. சாய் தொடர்பகம்
9. யோகம் டி ஸ்ரோர்ஸ்
10. சிவாஸ்
11. ராஜா ஸ்ரோர்ஸ்
12. ஜெயாமோர் ஸ்ரோர்ஸ்
13. அபிராமி ஸ்ரோர்ஸ்
14. ரிடா ரிப்பயர்ஸ்
15. சிவாஸ் ரிப்பயர்ஸ்
16. நிவ் லொண்டரி
17. ஈஸ்ட் வெஸ்ட்
18. வசந்தி கோல்ட் ஹவுஸ்
19. குகன் ஸ்ரோர்ஸ்
20. ஜெயலங்கா
21. லங்கம் ஸ்ரோர்ஸ்
22. ரெனு ஸ்ரோர்ஸ்
23. யோகலட்சுமி ஸ்ரோர்ஸ்
24. சந்திரா ஸ்ரோர்ஸ்
25. விநாயகம் மில்
26. புது கட்டிடம்
27. ரவி பிரேம்
28. சாந்தி கபே
29. சத்தியவாணி ஹோட்டல்
30. ஆர்.டி.எம். போர்ஸ் ஸ்ரோர்ஸ்
31. என். சி. பாம்
32. சதீஸ் மில்
33. ரோயல் வைன் ஸ்ரோர்ஸ்
34. சஞ்சீவ் ஸ்ரோர்ஸ்
35. காந்தி ஸ்டுடியோ
36. துர்கா வீடியோ
37. உமையால் பிரின்டஸ்
38. மொடர்ன் ஸ்ரோர்ஸ்
39. சிவம் ஸ்ரோர்ஸ்
40. தீபா ஸ்ரோர்ஸ்
41. கவிதா ஸ்ரோர்ஸ்
42. ஆனந்த பவான்
43. நியூ பெரனி சலுான்
44. புஷ்பா ஹாட்வெயார்ஸ்
45. ரஞ்சனி சலுான்
46. தலவாகலை வைன் ஸ்ரோர்ஸ்
47. ஸ்ரீ முருகன் ஸ்ரோர்ஸ்
48. அருணா ஜுவலரி
49. நியூ குமரன் ஸ்ரோர்ஸ்
50. ஆனந்த கிரைன்டிங் மில்
51. சான் வீடியோ விசன்
52. சரவணா டெய்லர்ஸ்

**தலவாக்கலை நகர சேதம்**

59 மாணவர்கள்
16 குழந்தைகள்
451 குடும்ப உறுப்பினர்கள்
115 குடும்பங்கள்
முழுமையாக எரிந்த கடைகள் 16
கொள்ளையடிக்கபட்ட கடைகள் 47

### ஓளவீடன் தோட்ட தொழிலாளருக்கு இராணுவத்தால் ஏற்படுத்தப்பட்ட சேதம் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் விபரம்

1. கந்தையா பழனி
2. பொன்னுசாமி கணேசன்
3. பிச்சை சிவபிரகாசம்
4. சாமன் நல்லம்மா
5. ராஜி விஜயராணி
6. மாரிமுத்து விஜயராணி
7. அகஸ்டின் மரியதாஸ்
8. பிச்சை மாறிமுத்து
9. சின்னையா துார்த்துமேரி
10. நாராயணன் கதிரமலை
11. துறைபாண்டி ராமசுப்பிரமணியம்
12. திரவியம் சந்தனம்
13. விஜயமோரி சந்தனராஜா
14. சுனந்தா கணேசன்

நன்றி - நூலகத்திட்டம்



## சியாம் செல்வதுரையின்



## 'FUNNY BOY'

## 'விசித்திரமான பையன்'



# பன்றிகளுக்குப் பறக்க முடியாது 5

மாட்டேன்... நான் மாட்டேன்'... நான் வரவில்லை...'

கத்தினேன் நான்.

அவளுடைய பார்வையில் தெரிந்த ஏதோ ஒன்று எனக்கு நினைத்துப் பார்க்க முடியாதளவுக்கு அச்சமூட்டுவதாக இருந்தது. நான் அவளைத் தாக்கினேன். இது அவள் மேலும் என்னை அழுத்தமாகப் பிடிக்கவே உதவியது. நான் இழுத்துச் செல்லப்படுவதை ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்த ஜானகியின் அறையைத் தாண்டி வரவேற்பறைக்குச் செல்லும் ஹொரிடோரினூடாக என்னை இழுத்தபடி கொண்டு சென்றாள் அவள். எனது அடி வயிற்றில் ஏதோ பாரமாக உருள்வதாக உணர்ந்தேன். காந்தி அன்ரியின் மனதில் ஏதோ ஒரு பயங்கரமான எண்ணம் இருப்பதாக எனது உள்ளுணர்வு சொன்னது.

வரவேற்பறையை அடைந்ததும் காந்தி அன்ரி உரத்துக் கத்தினாள். அவளது குரலில் சிரிப்பு நிரம்பி வழிந்தது. "பாருங்கோ என்ன நடக்குதெண்டு!"

வரவேற்பறையிலிருந்த மற்ற மாமா மாமியவை சித்தப்பா சித்தியவை எல்லோரும் தாங்கள் படித்துக் கொண்டிருந்த பத்திரிகைகளிலிருந்து கண்களைத் திருப்பிப் பார்த்தார்கள். தூங்கி வழிந்து கொண்டிருந்தவர்கள் திடீரென சுறுசுறுப்படைந்தவர்கள் போல் பின்பக்கம் திரும்பினார்கள். திடீரென்று ஆவியாக இருந்த நான் உருக் கொண்டு வந்ததைக் கண்டது போல் பெருவியப்புடன் என்னைப் பார்த்தார்கள் அவர்கள். நான் அவர்களை ஒருதடவை சுற்றிப் பார்த்தேன். இறுதியாக எனது பார்வை அம்மாவில் வந்து நின்றது. அவளது முகபாவத்தைக் கண்டதும் எனது அச்சம் இன்னமும் அதிகரிப்பதுபோல இருந்தது. என் கண்களை கீழ்நோக்கித் தாழ்த்தினேன். நான் உடுத்தியிருந்த சேலை திடீரென என்னை மூச்சு முட்டச் செய்வது போல உணர்ந்தேன். முகத்திரையை விழவிடாமல் சொருகியிருந்த 'ஹெயர்பின்' எனது தலையில் உறுத்தியது. திடீரென வெடித்த காந்தி அன்ரியின் கணவரான சிறில் மாமாவின் சிரிப்பொலியால் அங்கு நிலவிய மௌனம் கலைந்தது. இந்தச் சிரிப்பொலியால் தான் தாக்கப்பட்டு விட்டவள் போல் அம்மா அவர் பக்கமாக திரும்பினாள். மற்றவர்களும் சிரிக்கத்தான் செய்தார்கள். அம்மாவோ ஒரு பொறியிலகப்பட்ட விலங்கு போல அவஸ்தைப்பட்டவளாய் ஒவ்வொருவரையும் மாறிமாறிப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளது பார்வை இறுதியாக அப்பாவிடம் போய் நின்றது. அப்போது தான் அந்தக் கூட்டத்தில் சிரிக்காமல் இருந்தவர் அவர் ஒருவர்தான் என்பதை நான் கவனித்தேன். அவர் தனது கண்களை பத்திரிகையிலிருந்து வெளியே எடுக்காமல் வைத்திருந்த விதத்தைப் பார்த்த போது எனது அடிவயிற்றிலிருந்த பாரம் மேலெழுந்து தொண்டைவரை வந்து அடைப்பது போல இருந்தது.

"ஏ.. செல்வா...." சிறில் மாமா மிகவும் இயல்பாகவும் உற்சாகத்துடனும் கூப்பிட்டார்... 'உனக்கு ஒரு விசித்திரமான பையன் இருக்கிறான் போல'

அப்பா அதைக் கேட்காதவர் போல இருந்தார். தலையை மெதுவாக அசைத்து என்னை அங்கிருந்து கொண்டுபோகும்படி அம்மாவிடம் தெரிவித்தார்.

**தமிழில்: எஸ்.கே.விக்னேஸ்வரன்**

அம்மா எட்டி எனது முகத்திரையைப் பிடித்தபடி என்னை வீட்டின் பின்புறமாக கூட்டிச் சென்றார்.

000

அன்று பின்னேரம் வீட்டிற்கு திரும்பும் போது அப்பாவும் அம்மாவும் என்மீது தங்கள் கண்கள் படாதவாறு பார்த்துக் கொண்டார்கள்.

அம்மா அடிக்கடி அப்பாவின் முகத்தைப் பார்த்தாள். ஆனால், அப்பாவோ அவவின் பார்வையை கணக்கெடுக்கவில்லை. நான் படுகிற அவஸ்தையைப் புரிந்து கொண்ட சோனாலி எனது கையை தனது கையால் இறுகப் பற்றிக் கொண்டாள்.

பிறகு அப்பாவும் அம்மாவும் அவர்களது அறைக்குள் சண்டையிடுவதை நான் கேட்டேன்.

'எவ்வளவு நாளா இது நடக்குது!' அப்பா கத்தினார்.

'எனக்குத் தெரியாது' அம்மா தன்னைப் பாதுகாப்பது போல் அழுதபடி சொன்னாள். 'உங்களைப் போலத்தான் எனக்கும் இது புதிசுதான்..'

'இது உனக்குத் தெரிஞ்சிருக்க வேணும்... அவனில் நீ கட்டாயம் ஒரு கண் வைச்சிருந்திருக்க வேணும்'

'நானென்ன செய்யிறது? அவன் விளையாடிற இடமெல்லாம் போய் நிண்டு கொண்டிருக்கிறதோ?'

இவன் அந்த நங்கோத்தவேராப் பெடியன் மாதிரி விசித்திரமானவனாகப் போனானெண்டால் இவன் இந்தக் கொழும்புச் சனம் பாத்துச் சிரிக்கிற ஒருத்தனாய்ப் போவானெண்டால்... அது உன்ரை பிழைதான்..' அப்பா பேச்சை முடித்து வைப்பது போல இறுதியாகச் சொன்னார். 'நீ தான் எப்பவும் அவனைப் பழுதாக்கிறது. இந்த மாதிரி குப்பை வேலையளுக்கு அவனுக்கு தட்டிக் கொடுக்கிறதும் நீதான்.'

"நான் என்ன செய்யிறன் அவனுக்கு தட்டிக்கொடுத்து...." அம்மா எதிர்த்துக் கேட்டாள்.

"நீ தான் அவனை இஞ்சை நீ உடுத்தி வெளிக்கிடுகிற நேரங்கள்ளை வந்து பாக்க விடுறதும் உன்ரை நகையளோடை அவனை விளையாட விடுறதும்...."

அம்மா அந்த உண்மையின் முன்னால் மௌனமானாள்.

000

உண்மையில் எங்கள் மூவரில் எனக்கு மட்டும்தான், ஏதாவது விஷேசத்துக்கு அம்மா உடுத்தி வெளிக்கிடுவதைப் பாக்க அவவின் படுக்கை அறையினுள் நுழையும் அனுமதி இருந்தது. அம்மா உடுத்தி வெளிக்கிடுகிறதைப் பார்க்கிறதே ஒரு அனுபவம் தான். ஒரு மதச்சடங்கு நிகழ்வாக அதைக் (நான் உள்ளூர் சினிமாவின் பெண் தெய்வங்களைப் போற்றிப் புகழ்பவனாக இருந்த போதும்) கருதினேன். ஏனென்றால் என்னைப் பொறுத்தவரை பெண் அழகின் உயர்ந்தபட்ச வடிவமாக அம்மாவே இருந்தாள்.

ஏதாவது விஷேசத்திற்கு அம்மா உடுத்தி அலங்கரிக்க தயாராகின்றாள் என்றால் அவளது அறைக்கதவிற்கு வெளியே போய் நின்று கொள்வேன். அவள் தனது உள் பாவாடையை அணிந்து கொண்டதும் வேலைக்காரி அனுலாவிடம் தனது சேலையை எடுத்து வருமாறு கூப்பிடுவாள், அவளிடம் சேலையை வாங்குவதற்காக அம்மா கதவை திறக்கும் போது நானும் உள்ளே நுழைந்து கொள்வேன். அந்த அறைக்குள் நுழைவது என்னைப் பொறுத்தவரை ஒரு தெய்வீக சூழலுக்குள் நுழைவது போன்றது. இதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. முதலாவது காரணம் அலங்காரம் செய்யும் மேசையில் திறந்து வைக்கப்பட்டிருக்கும் நகைப்பெட்டி. சந்தோசத்துடனும் ஆர்வத்துடனும் நான் அந்தப் பெட்டியுள் என் பார்வையை ஓட்டுவேன். ஒரு மெல்லிய வாசனை அந்தப் பெட்டியிலிருந்து எப்போதும் வீசிக்கொண்டிருக்கும். அதிலிருந்து ஏதாவது ஒரு நகையை எடுத்து அதை எனது மூக்கிலோ காதிலோ அல்லது கழுத்திலோ வைத்து அழகு பார்ப்பேன். அப்போதெல்லாம் அதிலிருந்து அந்த மெல்லிய வாசனை கமழ்ந்து கொண்டிருக்கும். இரண்டாவது காரணம் அம்மா தனது சேலையை உடுத்துகிறவிதத்தைப் பார்க்கிற சந்தோசம். அவள் அந்த சேலையை காற்றிலே படபடக்கும் ஒரு சீனத்திரையைப் போல விரித்து ஒருகணம் காற்றிலே முழுதாகப் பிடிப்பதையும், பிறகு அதை நிலத்திலே மெதுவாகப் போடுவதையும் பார்ப்பது. அதன் ஒரு அந்தத்தை எடுத்து உள்பாவாடையின் இடுப்பு வாரிலே செருகுவது, மடிப்புகளை மடித்து உருவாக்கி அவற்றை தனது கைமடிப்பில் சேர்ந்து இடுப்பில் செருகும் அழகைப் பார்த்துக் கொண்டிருப்பது, கடைசியாக அவள் தாவணியை எடுத்து தனது மார்புக்குக் குறுக்காகப் போட்டு அதை நிற்க வேண்டிய இடத்தில் நிறுத்தி ஒரு 'ப்ரோச்' சினால் குத்தி விடுவது.... என்று இவற்றைப் பார்த்துக் கொண்டிருப்பது... எல்லாம் ஒரு சந்தோசமான அனுபவம்.

அம்மா தயாராகியதும், தனது பின்புற சேலை, தாவணியை குத்தியதில் மேலேறி விட்டதா என்று பார்ப்பதற்காக கண்ணாடியில் திரும்பி நின்று தன்பின்பக்கத்தை நோட்டமிடுவாள். அவளுக்கு அருகாக நின்றபடி அல்லது கட்டிலின் ஓரத்தில் அமர்ந்தபடி அவளது விம்பத்தை நானும் கண்ணாடியில் பார்த்துக் கொண்டிருப்பேன். தான் நினைத்த வடிவத்தை பெற்றுவிட்ட ஒரு கலைஞரின் சந்தோசம் கலந்த திருப்தியுடன் நான் அம்மாவிடம் சொல்வேன்: "நீங்கள் ஒரு படத்திலை நடிக்கிற நட்சத்திரமாக வந்திருக்கலாம் அம்மா".

"சினிமா நட்சத்திரம்" - மெல்லிய அதட்டலுடன் கேட்டபடியே எனது தலையில் தட்டிவிடுவாள் அவள். "என்னை அப்பிடி ஒரு கீழ்த்தரமான ஆளாக நினைக்கிறியா நீ....."

ஒரு நாள், அப்பாச்சி வீட்டுச் சம்பவம் நடந்து ஒருவாரத்துக்குப் பிறகு, நான் அம்மாவின் படுக்கையறை வாசல் முன்பாக நின்றிருந்தேன். அனுலா அம்மாவின் சேலையை எடுத்துக் கொண்டு வந்து கொடுத்ததும், அதை வாங்கிக் கொண்டு திடீரென கதவை அடித்து மூடினாள் அம்மா. நான் அமைதியாக நின்றபடி அவள் இன்னமும் தனது பாவாடையையும் மேற்சட்டையையும் போட்டிருக்க மாட்டாள் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால், அந்தக் கதவு பிறகு திறக்கப்படவே இல்லை. அம்மா சிலவேளை நான் நிற்பதை மறந்திருப்பாளோ என்று தோன்றியது. மெதுவாக கதவில் தட்டினேன் நான். அவள் பதில் சொல்லவில்லை. ஆனால், அவள் உள்ளே அசைவதை எனக்குக் கேட்கக் கூடியதாக இருந்தது. கதவை சற்று அழுத்தமாக தட்டிவிட்டு சாவித் துவாரத்தூடாக அம்மா என்று கூப்பிட்டேன். அதற்கும் எந்தப் பதிலும் இல்லை. திரும்பவும் கூப்பிடத் தயாரான போது அவளிடமிருந்து அழுத்தமான பதில் வந்தது: போ அங்காலை.... நான் வேலையா இருக்கிறது தெரியேல்லையா உனக்கு?

நம்பமுடியாதவனாய் அந்தக் கதவைப் பார்த்துக் கொண்டிருந்தேன். உள்ளே அம்மாவின் சேலை நிலத்திலிருந்து அவள் உடுத்தும் போது இழுபடும் சத்தம் எனக்குக் கேட்டது. திரும்பவும் கதவில் தட்ட எனது கையை உயர்த்திய போது தான் அப்பாச்சி வீட்டுக்கு கடைசியாக போன அன்று அப்பாவும் அம்மாவும் சண்டை பிடித்த போது பேசிய பேச்சுக்கள் ஞாபகத்துக்கு வந்தன. எனது கை சோர்ந்துபோய் விழுந்தது. நான் எனது அறையை நோக்கி அமைதியாக வந்து கட்டிலின் ஓரத்தில் அமர்ந்தபடி நீண்ட நேரமாக எனது கால்களை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தேன். நான் ஏதோ ஒரு பிழையான வேலை செய்துவிட்டேன் என்பது மட்டும் எனக்கு தெரிந்தது. ஆனால் என்ன பிழை என்பதை என்னால் ஊகிக்க முடியவில்லை. அப்பா 'விசித்திரமான' என்ற சொல்லைப் பயன்படுத்தியது எனக்கு நினைவுக்கு வந்தது. என்னைப் பொறுத்தவரை இந்தச் சொல் நகைச்சுவையான, புதுமையான என்ற அர்த்தங்களில் தான் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால், அப்பா இந்தச் சொற்களை அந்த அர்த்தத்தில் பாவிக்கவில்லை என்பது மட்டும் எனக்குப் புரிந்தது. அந்தச் சொல்லை அவர் பாவித்தவிதத்தில் ஒருவகை அருவருப்புணர்வு இருந்ததை நான் கவனித்திருந்தேன். கடைசியாக, அம்மா தன் அறையிலிருந்து வெளியேவந்து அனுலாவைக் கூப்பிட்டு அன்று பின்நேரம் செய்ய வேண்டிய வேலைகளைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தாள். அவளது குரலின் தன்மையைக் கேட்டபோது எனக்கும் அம்மாவுக்கும் இடையில் என்றென்றைக்குமான ஏதோவொரு மாற்றம் நிகழ்ந்துவிட்டிருப்பதாக தோன்றியது.

அப்பாவும் அம்மாவும் தங்களது இராப்போசன விருந்துக்குப் போனபின் சோனாலி என்னைத் தேடி வந்தாள். என்னுடைய கவலை தோய்ந்த இருப்பைக் கண்டதும் அவள் எனக்குப் பக்கத்தில் அமர்ந்து தனது கையை என்னுடைய கையின் மீது வைத்தாள். அவள் அங்கு வந்ததும் இருந்ததையும் நான் கவனிக்காவிட்டாலும் அவளது கையை நான் வேகமாகத் தள்ளிவிட்டேன். அவள் எனது கையைப் பிடித்து ஆதரவாக அழுத்தினால் எங்கே நான் அழுதுவிடுவேனோ என்று பயமாக இருந்தது எனக்கு.

மறுநாள் காலையில் அம்மாவும் நானும் முதல் நாள் இரவில் பயங்கரமாக சண்டையிட்ட இரு நபர்களைப் போல இருந்தோம். எனக்கு அவளது கண்களைப் பார்ப்பது கஷ்டமாக இருந்தது. அவள் வழமைக்கு மாறான சந்தோசமான மனநிலையில் இருப்பதாக எனக்குப் பட்டது.

வரும்

நன்றி - நூலகத்திட்டம்



# நினைவுக் குறிப்பு: கனவுகள் நிறைவேறாத சுதந்திரக் கலைஞன்

**- இராஜ. தர்மராஜா**

சிவராமலிங்கம் என்ற இயற்பெயரையுடைய தர்மு சிவராமு பல பெயர்களை பூண்டு எழுதியுள்ளார். தர்மு சிவராமு, பிரேமிள், பானு, அரூப் சிவராம், அஜித் ராம் பிரேமிள் என்ற பல பெயர்களை புனைந்து கொண்டு தீவிரமாக எழுதி வந்தவர் தான் தர்மு சிவராமு எனும் சுதந்திரக் கலைஞன். இவர் சி.சு.செல்லப்பாவின் 'எழுத்து" சஞ்சிகை மூலம் தன்னை பெரிதும் வெளிக்காட்டிக் கொண்டவர். இன்னும் சிறுகதையின் திருமூலர் என சிறப்பிக்கப்பட்ட மௌனியின் சிறுகதைத் தொகுப்புக்கு முன்னுரை எழுதியதாலும் பெரிதும் கவனிக்கப்பட்டார் தர்மு சிவராமு.

"நவீன தமிழ் இலக்கியத்தில் பாரதிக்கும் புதுமைப்பித்தனுக்கும் பிறகு தோன்றிய ஒரு மகத்தான ஆளுமை பிரமிள் ஆவார். புதுக்கவிதை, விமர்சனம், சிறுகதை, நாடகம் போன்றவற்றில் இவரது படைப்பாற்றல் ஓர் உயர்ந்த பட்சத்தை எட்டியிருக்கிறது என்று லயம் வெளியீட்டில் திரு.கால சுப்ரமணியம் விபரித்துள்ளார்.

தர்மு சிவராமு மெலிந்த உயர்ந்த ஒற்றை நாடி சரிரம் உள்ளவர். சீவப்படாத கேசம்; கனவில் மிதக்கும் கண்கள்" கண்களை பெரிதாக காட்டும் சோடா பாட்டில் கண்ணாடி அணிந்து இருப்பார். சதா யோசனை, சிலசமயம் தன்னை மறந்து சிரிப்பார். பாரிஸ்க்கு போக எண்ணியவரை தாயாரின் அன்புக் கட்டளை திருக்கோணமலையில் இருத்தி வைத்தது.

1968 அல்லது 1969 ம் ஆண்டு என்றே நினைக்கின்றேன். பாடசாலையில் உயர்தரம் கற்கின்ற காலம். கல்வியில் திருக்கோணமலை அன்று மிகவும் பின் தங்கியிருந்த சூழ்நிலை. கல்வி வரட்சியுற்ற நிலையில் உயர்தரம் விஞ்ஞானப் பிரிவில் நாம் நாலுபேர் தான் மாணவர்கள். பாடங்கள் கற்பிக்க போதிய ஆசிரியர்கள் இல்லை! இதனால் எமக்கு பாடங்கள் நடக்கும் நேரத்தை தவிர, ஆசிரியர்கள் இன்மையால் பாடங்கள் நடக்காத நேரம் தான் கூடுதலானது. இந்த நிலை தான் எமது இலக்கிய ஆர்வத்தை கூட்டியது. எனது நண்பன் சங்கரலிங்கமும் (தற்போது அவர் தமிழ் நாட்டில் இந்திய பிரஜையாக வாழ்கின்றார்) நானும் இலக்கிய ஆர்வத்தால் உந்தப் பட்டு பெரும்பாலான நேரங்களை புத்தகங்களில் செலவழித்து. அது பற்றி உரையாடுவதில் மகிழ்ந்து வந்தோம். சிறுகதை பற்றி நாம் மிகவும் ஈடுபட்டோம். எழுதுவது விமர்சிப்பது. சிறந்த தமிழ் சிறுகதையாசிரியர்களின் தொகுப்புக்களை தேடிப் பெற்று வாசிப்பது, புதுமை பித்தன், கு.ப.அழகிரிசாமி, தி.ஜானகிராமன், சிதம்பரம் ரகுநாதன், விந்தன், ஜெயகாந்தன். சுந்தரம் ராமசாமி என நாம் தேடிக் கொண்டிருக்கும் போது மௌனியும் வந்தார்! ஆனால் அவரின் புத்தகம் கிடைக்கவில்லை. எங்கு எடுக்கலாம்? என நாம் துப்பறிந்து திரிந்த போது தான் தர்மு சிவராமு எங்களிடம் அகப்பட்டார்.!

"அட எமக்கு தெரியாமல் போய்விட்டதே! என ஆச்சரியப்படும் படியாய் பக்கத்திலேயே கிடைத்தார். நாம் படிக்கும் இராமகிருஸ்ணமிஸன் இந்துக்கல்லூரிக்கு அருகில், காளி கோவிலுக்கு பக்கத்தில் வசிப்பவரை இந்நாள் வரை எம்மால் பிடிக்க முடியவில்லை என்பது ஆச்சரியம் தான்!

ஒரு நாள் அந்த வித்தியாலய வீதியில் தேடினோம். விசாலமான வளவு. பெரிய ஓலை வேய்ந்த நீட்டுக் குடிசை வீடு தென்பட்டது. வளவின் முகப்பில் வீதியோரத்தில் சிற்றோடு முகப்பு போட்ட சிறிய அறையின் கதவில் பானு என்ற சிறிய எழுத்து எமக்கு தென்பட்டது. ஆனால் கதவு பெரும்பாலும் மூடப்பட்டே இருக்கும். திறந்து இருப்பது அபூர்வம். சரி இதாகத்தான் இருக்கும் என நாம் தீர்மானித்துக் கொண்டோம்.

எமக்குத் தான் பாடசாலையில் ஆசிரியர் இன்மையால் பெரும்பாலான பாட நேரங்கள் வீவாகவே இருக்கும். அந்த சமயங்களில் தர்மு சிவராமுவின் வீட்டை நோட்டம் பார்ப்போம். அப்படி ஒரு சமயம் கவனித்த போது கதவு திறந்து இருந்தது தெரிந்தது. நண்பன் சங்கரலிங்கத்தையும் இழுத்துக் கொண்டு களவாக பாடசாலை மதிலால் குதித்து தர்மு சிவராமுவின் திறந்த கதவின் முன்பு நின்றோம்!

உள்ளே ஒருவர் பழைய தட்டச்சு ஒன்றுடன் மல்லாடிக் கொண்டு இருப்பதை கண்டோம். நாம் மெதுவாக கதவை தட்டினோம். அவர் சற்று தலையை நிமிர்த்தி "என்ன" என்பது போல் பார்த்தார்.

"தர்மு சிவராமு என்பவர்....." என நாம் இழுத்தோம்.

"நான் தான்.... என்ன விடயம்?" என கேட்டார் தர்மு சிவராமு.

"மௌனி புத்தகம் தேவை......?" என்றோம்.

இருங்கள் என்றவர் எழுந்து ஓலைக் குடிலுக்குள் சென்று திரும்பினார். கையில் மௌனியின் சிறு கதைப் புத்தகம்!

நாம் அதுவரை மௌனி கதைகளை படித்தது இல்லை. ஆனால், மௌனி கதைகள் பற்றிய விமர்சனங்களை வாசித்துள்ளோம். கதைகள் மட்டும் மௌனி போலவே இலகுவில் கிடைக்க முடியாததாய் இருந்தது.

"மௌனியை பற்றி என்ன தெரியும்?" என தர்மு சிவராமு கேட்டார்.

"மௌனியை பற்றி ஒன்றும் தெரியாது. நாம் பாடசாலையில் உயர்தர விஞ்ஞான பிரிவில் படிக்கின்றோம். இலக்கிய ஆர்வம். மௌனியின் சிறுகதைகள் பற்றி உயர்வாக கேள்விப்பட்டோம்.... ஆனால், புத்தகம் கிடைக்கவில்லை. உங்களிடம் பெறலாம் என கேள்விப்பட்டோம்.... நீங்களும் முன்னுரை எழுதி இருப்பதாக அறிந்தோம்......."

பெரிதாக சிரித்தார் தர்மு சிவராமு.

"சரி இந்தாருங்கள் புத்தகம்" நீட்டினார் தர்மு சிவராமு.

மௌனி கதையை பெற்றுக் கொண்டு மதில் ஏறி பாடசாலை சென்றோம்.

இதுதான் தர்மு சிவராமுவுடன் நாம் சந்தித்த முதல் சநிதிப்பு. சந்திப்பு தொடர்ந்து வந்தது. நாம் அவரை அண்ணன் என்றே அழைத்து வந்தோம். அவர் இந்தியா செல்லும் வரை பழகி வந்தோம். தாயார் இறந்த பின் வீடு காணியெல்லாம் விற்று விட்டு இந்தியா செல்ல ஆயத்தமானார். செல்லுமுன் எங்களை அழைத்தார்.

"வாருங்கள் உங்களுக்கு ஒரு நல்ல விருந்து தர வேணும்" என்று திருக்கோணமலையில் மிகவும் பெயர் பெற்ற சீன உணவு விடுதியான ஏ.பி.சி.டி. கபேக்கு கூட்டிச் சென்று விருந்து வைத்து விட்டு அடுத்த நாள் இந்தியாவுக்கு சென்று விட்டார். ஆனால் அவரின் கனவு பிரான்சுக்கு போவதே....!

தர்மு சிவராமு பிறந்தது 20.04.1939 இல். தாயார் இவர் மேல் மிகவும் பாசத்துடன் இருந்து வந்தார். தர்மு சிவராமுவும் தாயாருக்காகவே திருக்கோணமலையில் இருந்து வந்தார். அவரின் எண்ணம் எல்லாம் பாரிஸ்க்கு போக வேண்டும் என்பதுதான். ஏன் எனில் பிரான்ஸ் தான் கலைஞர்களுக்கு ஏற்ற நாடு என்பது அவர் துணிவு. அற்புதமாக பெயிண்டிங் செய்வார். அத்துடன் சிற்பங்களும் செய்வார் தர்மு சிவராமு. பல்வேறு பட்ட பெயிண்டிங் படைத்து வைத்திருந்தார். அவற்றையெல்லாம் பார்த்து ஏக்கத்துடன்,

"இவை எல்லாம் பிரான்ஸில் என்றால் உடனடியாகவே விற்று தீர்ந்து விடும்" என்பார். ஆகாய வெளியை வெறித்துப் பார்ப்பார்.

கலை, எழுத்து, வாசிப்பு என்பதே அவர் வாழ்வு. அவரின் ஆன்மீக ஈடுபாடு புற உலகின் கவலைகளை அவர் மேல் படிய விடவில்லை. அவரின் தொழில் கலை தான். வேறு வேலைகள் செய்வது என்பது அவரால் நினைத்தும் பார்த்த முடியாதது. சாப்பாடு இல்லாமலும் பல நாள் இருப்பார். நீர் தான் அவரின் ஆகாரமாய் இருக்கும். ஆன்மீக உறுதி அவரிடம் இந்த நிலையை தோற்றுவித்துவிட்டது.

தாயாருக்கோ இவரின் போக்கு விசித்திரமாகப்பட்டது. என்றாலும் மகன் மேல்



உள்ள பாசம் மிகவும் தீவிரமானது. மகனை மிகவும் நேசித்து பாதுகாத்து வந்தார். காப்புறுதிக் கம்பனியில் யாரையோ பிடித்து சேர்த்து விட்டார். ஆனால், இரண்டொரு மாதங்க்ளில் வேலையை விட்டுவிட்டு வந்து விட்டார் தர்மு சிவராமு.

"எந்த மடையன் இப்படி மேசைக்கு முன் அமர்ந்து ரசீது எழுதுவான்?" என்பது தான் அவர் வாதம்.

ஆம், அவர் ஒரு சுதந்திரக் கலைஞன். பெயிண்டிங் செய்வது, சிற்பம் உருவாக்குவது, எழுதுவது, வாசிப்பது தான் அவர் வேலை. இதனால் ஏதும் பணம் வருமானால் வீட்டில் சந்தோசம் தான். இல்லை என்றால் வறுமை தான்!

தாயாருக்கோ வீட்டில் நிற்கும் தென்னை மரங்கள் தான் உதவி. ஏதோ இருக்கும் வருமானம் கொண்டு மகனை பாதுகாத்து வந்தார். தர்மு சிவராமுவோ வெறும் தண்ணீர் உடனேயே நாட்களை கடத்தி விடுவார்.

பிரான்சுக்கு போக வேண்டும். போனால் அங்கு தன்னால் ஓவியம், சிற்பம் மூலம் நன்கு சம்பாதிக்க முடியும் என்பது அவர் நம்பிக்கை! அந்த நாடு தான் தன்னை வாழ்வில் உயர்த்திவிடும் என எண்ணி சதா பாரிஸ்க்கு போக வேணும் என்பது தான் அவர் கனவு. அதற்கு தடை தாயார் தான்.

" என்னை விட்டு விட்டு நீ எங்கும் போக முடியாது. நான் இறந்த பின் கொள்ளி வைத்துவிட்டு போ.." என்பது தான் தாயின் கட்டளை. அந்த அன்புக் கட்டளையை மீற முடியாமல் தாயாருடனேயே வாழ்ந்து வந்தார்.

தாய் இறந்த பின் விடிய விடிய தாயின் உடலிற்கு அருகிலேயே இருந்து கொண்டார். இரண்டு மூன்று நாளாக சாப்பாடும் இல்லை. தாயார் உடல் ஏலாது படுத்து விட்டதால் இவரும் சோர்ந்து விட்டார். தாயாரும் படுக்கையிலேயே இறந்து விட்டார்...

நானும், சங்கரலிங்கமும் காலையில் அறிந்து உடனடியாக தர்மு சிவராமுவின் வீட்டிற்கு சென்றோம். எங்களை கண்டதும் வீட்டிற்கு வெளியில் வந்தார் தர்மு சிவராமு.

" அம்மா போய்விட்டா..." என கண்ணீர் சிந்தினார். மூக்குக் கண்ணாடியை எடுத்து விட்டு கண்ணீரை துடைத்து விட்டு ஆகாய வெளியை வெறித்து பார்த்தார்.

எமக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. அவர் கைகளை பிடித்து ஆறுதல் கூற முனைந்தோம்.

'நானும் மூன்று நாளாய் சாப்பிடவில்லை. தலைக்குள் ஏதோ செய்கிறது' என்றார் தர்மு சிவராமு.

நாங்கள் திகைப்படைந்தோம். என்ன செய்வது? நாங்களோ மாணவர்கள். அவரை ஆறுதல் படுத்திவிட்டு உடனடியாக வெளியில் உணவுக் கடை தேடி சென்றோம்.

சற்று நேரத்தில் திரும்பி வந்து அவர் கைகளில் உணவுப் பார்சலை கொடுத்தோம். ஒரு ஒதுக்குப் புறத்தில் இருந்து உணவை உண்டபின் எம்முடன் வந்து அமர்ந்தார். நேரம் செல்ல செல்ல அவரின் நண்பர்கள் கேள்விப்பட்டு வந்தார்கள். தாயின் இறுதிக் கிரியைகளை எல்லாம் முடித்து வைத்தனர்.

'பாரிஸ்க்கு போ..." அவரை உசுப்பியது. காணியை விற்க முற்பட்டார். அதற்கும் தடை வந்தது. அயலில் அவர் ஒரு கிறுக்கு. இதனால் காணிக்கு உரிமை கோரி பக்கத்து கோவில் குருக்கள் பிரச்சனை கொடுத்தார்.

நீதிமன்ற தீர்ப்பில் காணி இருவருக்கும் பகிர்ந்து அளிக்கப்பட்டது. தர்மு சிவராமு தனது பங்கை விற்று விட்டு ஒரு தொகை பணத்தை தனது நண்பர் ஒருவரிடம் பிரான்ஸ்க்கு போக வழிசமைக்குமாறு கொடுத்துவிட்டார்.

எமக்கும் விருந்தளித்து விட்டு இந்தியா சென்று விட்டார். நாம் அவருடன் பழகியது ஒரு மூன்று நான்கு வருடங்கள் தான் இருக்கும். குழந்தைத் தனமாக கள்ளம் கபடமற்றே பழகினார். புத்தகங்களை வாசிக்கத் தூண்டினார். தனது தமிழ் நாட்டு எழுத்தாள நண்பர்களைப் பற்றி கூறுவார். அவருடன் பழகியது சொற்ப காலம் தான். என்றாலும் எமக்கு பல அனுபவங்களை அது பெற்றுத் தந்தது.

ஒரு ஆங்கில நாவலை எழுதிவிட்டு அதை வெளியிடுவதற்கு முயற்சி செய்தார். எத்தனையோ பதிப்பகங்களுக்கு அனுப்பினார். ஆனால், அது வெளிவந்ததாக தெரியவில்லை. பிரான்ஸ்க்கு போகும் முயற்சியும் தோற்றுவிட்டது. அவர் பணமும் ஏமாற்றப்பட்டதாகவே கேள்வி!

தமிழ் நாட்டுக்குப் போய் ஆரம்பத்தில் நாகர் கோவிலில் திரு.சுந்தரம் ராமசாமியுடன் நின்றதாக கேள்வி. பிற்பாடு சென்னைக்கு இடம் பெயர்ந்து வாழ்வதாகவே கேள்விப்பட்டேன். தமிழ் நாட்டில் அவர் பெரிதும் நம்பிப் போன எழுத்தாளர் நண்பர்களுடனும் ஐக்கியமாக முடியவில்லை. காரணம் தர்மு சிவராமு நேரடியாகவே முகத்துக்கு நேராக கதைப்பார். போலித்தனம, நடிப்பு, ஏமாற்று எல்லாம் பிடிக்காது. போலியாக வாழ்வதும் பிடிக்காது.

எனது நண்பனும், தர்மு சிவராமுவுடன் பழகியவனுமான சங்கரலிங்கமும் இந்தியா பிரஜா உரிமை பெற்று தமிழ் நாட்டுக்கு சென்று, அங்கு சுங்க அதிகாரியாக வேலையில் சேர்ந்தான். தர்மு சிவராமு மிகவும் உயர்வாகவே மதிக்கப்படுகின்றார். அவருக்கு என்று அங்கு ஒரு மதிப்பும் மரியாதையும் உயர்வாக விளங்குவதாகவே' எழுதினான்.


புதுக்கவிதையில் அவர் ஒரு சிகரமாகவே மதிக்கப்பட்டார். அறிவார்ந்த சூழலில் அவர் மிகவும் ஞானியாகவே விளங்கினார். புதுக்கவிதையில் அவர் படிமக் கவிஞர் ஆகவும் ஆன்மீகக் கவிஞர் ஆகவும் ஒப்புயவுடன் திகழ்ந்தார். அதனால் தான் அவரின் E=MC2 என்ற புகழ் பெற்ற விஞ்ஞானக் கவிதை சிற்பியால் வானம் பாடிக் கவிதா மண்டலத்தில் பரிசுக் கவிதையாக தேர்ந்தெடுக்கப்பட்டது. இச் செயல் அக்காலத்தில் சிற்பி மிகவும் தரக்குறைவாக தாக்கப்படவும் காரணமாயிற்று.

இலங்கையிலும் சில எழுத்தாளர்களுடன் நன்கு பழகியுள்ளார். அந்த விதத்தில் றேடியோ

⇨19

நன்றி - நூலகத்திட்டம்






முல்லைக்கோணேஸின் 'இரண்டாவது காலம்' எனும் சிறுகதைத் தொகுதி அண்மையில் வெளி-வந்துள்ளது. 13 சிறுகதைகளை உள்ளடக்கி வெளிவந்துள்ள இத்தொகுதியில் வந்த பல சிறுகதைகள் ஏற்கெனவே வெளிச்சம், ஈழநாடு, ஈழநாதம் போன்ற பத்திரிகைகளில் வெளி-வந்துள்ளன. வெளிவராத சில சிறுகதைகளும் இத்தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.

ஈழத்து இலக்கிய உலகில் இன்று நம்பிக்கை தருகின்ற பல எழுத்தாளர்களின் தொகுப்புகள் அண்மைக் காலங்களில் வன்னியில் வெளிவந்து கொண்டிருக்கின்றது. அந்த வகையில் கோணேஸ் இன் இந்த தொகுதியும் குறிப்பிடத்தக்கது. சிறந்த சிறுகதை எழுத்தாளரான இவரின் தொகுதியில் இருந்து வாசகர்களுக்காக ஒரு சிறுகதை இங்கு பிரசுரிக்கப்படுகின்றது.

ஆ-ர்

# சிறையிருப்பு

அந்த அறையின் யன்னலோரத்தில் இருந்த மேசை புத்தகங்களாலும் கொப்பிகளாலும் நிறைந்திருந்தது.

மேசையின் முன்னால் கதிரையில் அமர்ந்தபடி, மனோ வெளியே பார்த்தான். தெரு வெறிச்சென்றிருந்தது. பட்டப்பகலில் இப்படி ஒரு அமைதியா என்று நினைக்கும் படியாக எந்தச் சலனமும் இல்லாமல் வீதியோர மரங்களும் அசைவற்று நின்றிருந்தன.

மிக நீண்ட நேரம் கழித்து ஒரு சைக்கிள் யன்னலைக் கடந்து அவனது பார்வையிலிருந்தும் விலகி இடது பக்கமாய்ச் சென்று மறைந்து விடுகிறது.

தெருவைத் தாண்டி வலது பக்கமாய் நூறு மீற்றர் தூரத்தில் அமைந்திருந்த மீன்சந்தையில் இப்போது நாலைந்து சனங்கள் நடமாடத் தொடங்குவதைக் காண முடிகிறது.

சிலர் மீன்களைக் கொண்டு வந்து கொட்டி விட்டு, குழையால் வீசிறியபடி குந்தியிருக்கின்றனர். அதிலும் வயதான பெண்கள் தான் அதிகமாய்த் தெரிந்தார்கள்.

மீனை வாங்குவதற்காக எப்போதாவது ஒருவர் வந்து வாய்த்தர்க்கம் ஒன்றும் இல்லாமலே மீனை வாங்கிக் கொண்டு, வந்த வேகத்துடனேயே சென்று விடுகிறார்.

வேட்டி கட்டிய ஒரு நடுத்தர வயதுக்காரர் கையில் பையுடன் சந்தையை நோக்கி நடந்து வருகிறார். அவர் மலங்க மலங்க விழித்தபடி நடையில் பதற்றம் தெரிய வந்து கொண்டிருப்பது இங்கிருந்தது பார்க்கவே தெளிவாய்த் தெரிகிறது.

வந்தவர் சந்தையின் உட்பகுதியைப் பார்வையால் துளாவுகிறார். கிலி கொண்ட அவரது முகம் பார்ப்பதற்கு சவமாய்த் தெரிந்தது. அதுகள் மதிலோடு மதிலாய் மரத்தோடு மரமாய் ஒட்டி நின்று கொள்கின்றனவா என நின்று அவதானித்து, அவரது கண்கள் தேடியலைந்தவைகள் இருபுறமும் இல்லையென்று உறுதி செய்த பின்னரே "அப்பாடா" எனக் கூறுவது போன்ற நிம்மதி முகத்தில் தெரிய சந்தைக்குகள் நுளைகிறார்.

சிவனே! என்று இயல்பாய் நிற்கும் போது அவைகள் எதிர்பாராத நேரத்தில் முன்னால் முகம்காட்டி அச்சுறத்துவனவாய் இருந்தன. அவ்வாறான நேரங்களில் ஈரல் கலங்கிப் போய் உடடெல்லாம் வெடவெடக்கும்.

இப்போதெல்லாம் யாரும் யாருடனும் நின்று கதைத்துச் சிரித்துப் போவதைக் காண முடிவதில்லை. ஏதோ கிலி பிடித்தவர்களது முகங்களைப் போலவே பீதியில் வெளிறிப்போய்க் காணப்படுகின்றது. எப்போது எங்கே தமக்கு என்ன நேருமோ என்ற பீதி கொண்டவர்களாகவே திரிந்தார்கள்.

முன்னரென்றால் சந்தையில் ஏற்படும் கலகலப்புக்கூட அறைவரைக்கும் தெளிவாய்க் கேட்கும். சனங்கள் மீன் வாங்குவதற்கென்று வந்து குவிவார்கள். கார்த்திகை மார்கழியில் பெய்யற மழையில கடல் கலங்கிப் போய் தை மாதத்தில் றால் நல்லாய்ப் பிடிபடும். அந்த நேரம் சந்தை நிறைந்து போய்க் கிடக்கும்.

பெட்டியில் கொண்டு வந்த றாலைக் கொட்டி விட்டு, மடித்துக்கட்டிய சாறத்திலிருந்து தண்ணீர் சொட்டச் சொட்ட நின்று கொண்டிருப்பார்கள். முண்டியடித்துக் கொண்டு சனங்கள் அங்கும் அங்கும் அலைவார்கள்.

அப்போதைய சந்தையின் சோபிதம் கண்களுக்குள் வந்து மறைந்தது.

"இந்தக் கிரீச்சிடும் கதிரைக்கும் எனக்கும் தான் எவ்வளவு நெருக்கமான உறவாகி விட்டது." நினைத்துக் கொண்டே இரண்டு கைகளையும் உயர்த்தித் தலைக்குப் பின்புறமாகக் கோர்த்து சோம்பல் முறித்துக் கொண்டான்.

கல்லூரி வகுப்பு நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களிலெல்லாம் இந்தக் கதிரையில் இருந்தபடியே யன்னலூடு தெரியும் தெருவெளியைப் பார்த்தபடி இருப்பது தான் தொடரும் விடயமாகிப் போனது.

'லெக்சரு'க்குச் செல்லும் போதும், முடிந்து வரும் நேரங்களிலும் உடலில் உயிரே இருக்காது. வழியில் அவர்கள் உறுக்கி உறுக்கிக் கேட்கும் புரியாத மொழிக் கேள்விகளால் நாவரண்டு உதடுகள் ஒட்டிக் கொள்ளும். நெஞ்சு 'படக் படக்' என்று வேகமாய் அடிக்கும். வகுப்பில் படிக்கும் போது கூட இந்தப் பயமுறுத்தல் ஞாபகங்களே வந்து விடுகிறது. முழத்துக்கு முழம் முளைத்துள்ள அரண்களிலெல்லாம் விசாரணை முடிந்து றூமுக்கு வரும் போது தான் ஓரளவு உயிர் வந்தது போலிருக்கும்.

போனவாரம் கூட மருத்துவ பீடத்தில் படித்துக் கொண்டிருந்த மூன்றாம் வருட மாணவி ஒருத்தி திடீரென்று காணாமல் போய்விட்டாள். அவளை அவனுக்கு நன்றாகவே ஞாபகம் இருந்தது. தலைமுடியை 'டயானா ஸ்ரைலில்' வெட்டி இருந்தாள். நல்ல நிறம். வட்ட முகத்தில் நாடி மட்டும் கொஞ்சம் சின்னதாய் இருக்கும். கைகளிலும் காதோரங்களிலும் மெல்லிய ஆனால் கருப்பான ரோமங்கள் கவர்ச்சியாய்த் தெரிய வளர்த்திற்கேற்ற உடலமைப்புப் பொருந்தி மிகவும் அழகாக இருந்தாள்.



அவளுக்கு அண்ணனோ, தம்பியோ அல்லது அண்ணன்களோ தம்பிகளோ நல்ல வருவாய் உள்ள நாடுகளில் தங்களைக் கரைத்திருக்க வேண்டும். அவ்வளவு பணச்செழுமை அவள் ஆடைகளிலும் உடலிலும் தெரிந்தது.

மாணவர்களிடையே அநேகமாக அவள் தான் கதாநாயகியாக இருந்தாள். எல்லோரிடமும் வளவளவென்று ஏதாவது பேசிக் கொண்டேயிருப்பாள். விழாக்களில் கூட அவள் தான் அதிகம் பங்கேற்றாள்.

'லெக்சர்' முடிந்து வரும் நேரங்களில் அவள் நிறத்தையொத்த கண்ணாடி போட்ட இன்னும் ஒரு மாணவி அவளுடன் கூடவே சைக்கிளில் வருவதையும் அவன் பார்த்திருக்கிறான். அவள் காணாமல் போய்விட்ட பிறகு, அந்தக் கண்ணாடித் தோழி கொஞ்ச நாள் வளாகப் பக்கமே வரவில்லை. இருவாரம் கழித்து அவளை அவளது பெற்றோர்கள் படிப்பை நிறுத்தி வீட்டோடு மறித்து விட்டார்களாம் என்று அறிந்தான்.

மேசை மீதிருந்த புத்தகங்களின் மீது பார்வை தாவியது. படிக்கிற மூட்டும் இல்லை. திவாகரன்ர றூமுக்குப் போய் அவனோட கதைச்சுப் போட்டு வந்தாலே படிக்கிற மூட் வந்து விடும். "என்னடா மனோ! எப்படி இண்டைக்கு லெக்சரெல்லாம்? பொலிற்றிகல் நோட்ஸ் ஒழுங்காய் எடுத்தியா. இல்லேண்டால் என்ர நோட்ஸ்சைக் கொண்டு போய் எழுதிப் போட்டு நாளைக்குக் கொண்டு! டேய்! என்னதான் நாங்கள் பண்ணினாலும் படிப்பில மட்டும் அக்கறையாய் இருக்க வேணும். வீட்டில எங்கட தாய் தகப்பன் எவ்வளவு கஸ்ரப்பட்டு எங்கள இஞ்ச படிக்க விட்டிருக்குதுகள். என்றெல்லாம் கூறும் போது அவனது பக்குவமான வார்த்தைகளைக் கேட்ட மறுநிமிடமே படி படியென்று ஒரு அகோர வெறி எழும்பும். "றூமை' விட்டு இருவரும் வெளியில் வந்து எதிரே இருக்கும் தேநீர்க் கடையில் 'ரீ' குடித்து விட்டு ஸைக்கிளில் கிளம்பினால் தெரு என்னமாய்க் களை கட்டியிருக்கும் சிரிப்புகளும், குதூகலங்களும், அதையும் தாண்டிய இதயம் நுழையும் பார்வைகளும் சே!.... என்ன வாழ்க்கையப்பா. திவாகரனும் இப்ப என்னை மாதிரித்தான் றூமில அடைஞ்சு போய்க் கிடப்பான்.

ஒரு கணம் திவாகரனது றூமுக்குப் போய் வருவோமோ என்றும் எதற்காக இப்படி பயந்து அடைபட்டுக் கிடக்க வேண்டும் என்றும் நினைத்தான். மறுகணமே அது எவ்வளவு அபத்தமானது என்பதை உணர்ந்தவனாய் அலுத்துக் கொண்டான்.

விடிஞ்சதுக்கு இந்தத் தெருவால ஏதும் இளசுகள் போயிருக்கே பக்கத்து வீட்டு சுலோ அன்ரியாக்கள் இருக்கும் போதென்றால் அடிக்கடி அவவும் பிள்ளைகளும் வந்து பைம்பலாய்க் கதைச்சிட்டுப் போகுங்கள். வீட்டில ஏதாவது தின்பண்டங்கள் செய்தாலும் கொண்டு வந்து தருங்கள். இப்ப?

அந்த வீடு திறந்து கிடக்கிறது. வீட்டைச்சுற்றி புல் முளைத்திருக்கிறது. வாசற்படியோரம் நிழலுக்காய் ஒதுங்கிய நாயொன்று நாக்கைத் தொங்கப் போட்டபடி இளைப்பாறிக் கொண்டு கிடக்கிறது.

"சுலோ அன்ரியாக்கள் குடுத்து வச்சதுகள் வன்னியில எங்கேயோ ஒரு இடத்தில நிம்மதியாய் சுதந்திரமாய்.

இறங்கு வெயில் சந்தைக் கட்டிடத்தில் மஞ்சள் அடித்தது.

மாலையாகியதால் பயமும், பதற்றமும் அவனைச் சூழ்ந்து கொண்டது.

பகல் நேரத்தில் என்னதான் பயமிருந்தாலும் அது அவ்வளவு கனதியாய் அவனுக்குத் தெரிவதில்லை. இரவாகிப் போனால் நெஞ்சே காய்ந்து போய், எப்போது விடியும் என்றிருக்கும்.

இரவு பூராவும் தூங்குவதும் அடிக்கடி திடுக்குற்று விழிப்பதுமாய் அழியும். விடிந்தால் இரவுத் தூக்கம் சீரில்லாததால் தலையிடிக்கும். கல்லூரிக்குப் போகவே மனம் வராது.

நிலாக் காலமாதலால் இருளின் பூதாகரம் ஆங்காங்கு கட்டிடங்களின் மூலை முடுக்குகளிலும் மரங்களின் கீழும் உறைந்து போய்க் கிடந்தது. சந்தைக் கட்டிடத்தின் மேற் கூரையில் பக்கத்தில் நின்றிருந்த மரக்கிளையின் நிழல் அசைந்தது. மீதி இடம் வெளேரென்றிருந்தது. உட்பக்கம் இருள் அப்பிப் போயிருக்க, வெளிப்புறத்தில் மாடொன்று படுத்துக் கிடந்த படி வாலசைப்பது தெரிந்தது.

படிப்பதற்காய்ப் புத்தகத்தை விரித்தபடி பார்த்துக் கொண்டிருந்தானே தவிர, புலன் மட்டும் எங்கோ அலைந்தபடி இருந்தது. தாறுமாறாய் ஒற்றையைப் புரட்டியபடி இருந்தான். ஒற்றையைப் புரட்டும், சரக் சரக் ஒலி கூட ஒருவித அச்சத்தை உண்டு பண்ணியது.

புத்தகத்தை மூடினான். திடீரென்று வெளியில் தெருப்பக்கம் ஏதோ அரவம் கேட்கவே, லாம்பை எடுத்து அவசர அவசரமாகத் திரியைத் தணித்து விட்டு ஹோலில் கொண்டு வந்து வைத்தான். மீண்டும் அறைக்குள் சென்று கதிரையில் அமர்ந்தபடி அறையெங்கும் கப்பிக்கிடந்த இருளில் இருந்தவாறே யன்னலூடே வெளியில் பார்த்தான். தூரத்தில் ஒரு எலி

நன்றி - நூலகத்திட்டம்



ஓடினால் கூடக் காணக் கூடியளவிற்கு தெரு நிலவில் பளிச்சென்றிருந்தது.

ஒரு கணம் வீதியின் இருமருங்கிலும் பிசாசுகள் வரிசை வரிசையாக வருவதாக நரபலி கொள்ளும் ஆயுதங்களைக் கைகளில் ஏந்தி வருவதாக கண்களில் தெரிந்தது.

நெஞ்சு குபீரென்று பயத்தால் படபடக்க கைகால்கள் லேசாய் ஆட்டம் கண்டன. நன்றாக உற்றுப் பார்த்தான். தெரு வெறிச்சோடிக் கிடந்தது. நின்ற மூச்சு வந்தது போல் இருந்தது.

மரக்கிளைகள் சலசலப்பில்லாமல் அசைந்து கொண்டிருந்தன. அந்தக் கிளைகளுக்கு மேலால் நிலவு எட்டிப் பார்த்தது.

நிலவென்றால் அவனுக்குப் பிடிக்கும். ஊரில இருக்கும் போது வீட்டு முற்றத்தில் தம்பிமாருடன் நிலவைப் பார்த்து ரசித்த வண்ணம் நீண்ட நேரம் கதைத்துக் கொண்டிருப்பதும், அவர்கள் உறங்கி விட்டதன் பிறகும் தென்னங்கீற்றுகளிலும், மாமரக் கிளைகளிலும் நிலவொளி சிந்திக் கிடக்கும் அந்த மனோகரமான பொழுதுகளில் தனிமையில் கொஞ்ச நேரம் முற்றத்தில் உலாத்துவதும் அவனுக்குப் பிடித்தமானது.

நிலவின் தோற்றம் அவனைக் காட்டிக் கொடுக்கும் ஒரு உளவாளியாய் அச்சுறுத்தியது. அதன் அழகு பொய்யாகவும், கொடூரமுள்ளதான இன்னுமொரு முகம் அதற்கு இருப்பதாகவும், இப்போது தெரிவது கொடூரமானதாகவும் நிறைய அசுத்தங்களை எல்லாம் தன்னில் கொண்டுள்ளதாகவுமே அவனுக்குப் பட்டது. இதைவிட அமாவாசை இருட்டே எவ்வளவோ மேல் என்று தோன்றியது.

அதன் ஒளியில் உலாவி வர வேண்டுமென்றோ அது முகில்களுக்குள் ஓடி ஒளிந்து கொள்வதை ரசிக்க வேண்டும் என்றோ அவனுக்குத் தோன்றவில்லை.

கதிரையை விட்டு எழும்பி வந்து ஹோலில் வைத்த லாம்பை எடுத்து திரியைத் தூண்டிக் கொண்டே அறைக்குள் திரும்பச் சென்று மேசையில் வைத்தான்.

எரிச்சலாக இருந்தது. இந்த அங்கிளையும் காணேல்ல. முந்தியெண்டால் படிக்க விடாமல் வந்திருந்து அலட்டிக் கொண்டிருக்கும். அப்போதெல்லாம் தொடர்ந்து இந்த றூமில இருக்க வேணுமென்பதற்காகவே அவரைத் திருப்திப்படுத்த எங்கோ புலன விழுத்திக் கொண்டு "ம் ம்... " எண்டு கதை கேட்கிறது. இப்ப மனுசன் தானும் தன்ர பாடும் எண்டு இருந்திடுகிறதோடில்லாமல் பொழுதுபட ஏழுமணிக்கெல்லாம் தன்ர றூமில போய் அடைங்சு கொள்ளுது.

"விர்றூம்" கதவு திறக்கும் ஓசையும் தொடர்ந்து ஹோலில் நடந்து வரும் சத்தமும் கேட்டது. திரும்பிப் பார்த்தான். 'அங்கிள்' ஓசைப்படாமல் அவனது அறைக்கதவு திறந்தார்.

"ஓம்மங்கிள்"

"மனோ யன்னலைத் திறந்து போட்டிருக்கிறீர். அடிக்கடி அவங்கட வாகனங்கள் வரும். அவங்களுக்குப் படிக்கிற பொடியள் எண்டிருக்கோ படியாத பொடியள் எண்டிருக்கோ" கூறிக் கொண்டே அவரே இழுத்துக் கதவை அடைத்து விட்டும் போனார். நேரம் எட்டு மணியைத் தொட்டிராத அந்த முன்னிரவிலும் எந்தச் சலனமும் இல்லாமல் நிசப்தம் நீண்டு கொண்டே போனது. இராப் பூச்சிகளின் 'குய்' என்ற சத்தம் தான் எங்கும் ஒலித்தது.

ஊரை நோக்கிய நினைவுகள் வந்து வந்து போயின. "தம்பி! உனக்கென்ன வயசே போட்டுது? ரெண்டு வருசம் கழிச்சு போனால் என்ன? அடுத்தடுத்த வருசத்தில நாட்டுச் சீரப்பார்த்து போய்ப்படியன்." "இல்லேய்யா, என்ர 'பச்' பொடியள் எல்லாம் போட்டாங்கள். நான் மட்டும் நிண்டால் ஒரு வருசம் வீண்தானே" " ஏதோ எனக்கெண்டால் நல்லாப்படேல்லை. நீ போறன் எண்டு நிக்கேக்க இனி மறிக்கிறதில பலனில்ல. நல்லபடியாய்ப் போட்டு வா." கடைசி நேரத்தில் 'பஸ்' ஏற முதல் ஐயா கூறியது காதுகளில் ஒலித்தது. இப்ப நெஞ்சுக்குள் வலித்தது.

சே! எவ்வளவு தப்புப் பண்ணிட்டன். ஊரில இருந்து இவ்வளவு அவசரப்பட்டு யாழ்ப்பாணம் வந்திருக்கவே கூடாது.

இரவின் அமைதி அந்தகாரமாக இருந்தது.

"ங்வோ மியாவோ" குழந்தை ஒன்றின் அழுகுரலைப் போல ஆரம்பித்து, இரவின் அமைதியைக் குலைத்துப் பயங்கரமாக ஒலி எழுப்பியது கடுவன் பூனை ஒன்று. சற்று நேரத்தில் வேறும் சில பூனைகள் சேர்ந்து எழுப்பும் அருவருப்பான ஒலிகள் ஒருகணம் பயத்தைத் தருவித்தன. கொஞ்ச நேரம் ஆடாமல் அசையாமல் அப்படியே இருந்தான்.

"சனியன்கள்" என்று திட்டிக் கொண்டே லாம்பை அணைத்து விட்டு எழும்பும் போது கதிரை கிறிச்சிட்டது. ஓசைப்படாமல் கட்டிலில் சாய்ந்தான்.

ஊர் நினைவுகள் தான் அடிக்கடி வந்தது. அம்மாவைப் பார்க்க வேணும் போல ஆசையாக இருந்தது.

எங்கோ தூரத்தில் 'ட்ரக்' வண்டிகளின் இரைச்சல் ஒன்றின் பின் ஒன்றாய் கேட்டது. நெஞ்சு 'திக் திக்' என்று அடிக்க கை கால்கள் சோர்ந்து போய் கிடந்தன. உடலெங்கும் அசைய முடியாதபடிக்கு ஆணி அடித்து இறுக்கியது போல் அப்படியே கிடந்தது. அங்கங்களின் ஒவ்வொரு முனையிலும் ஏதோ ஒரு எரிதிரவம் ஊற்றப்படுவதாய் அது கொஞ்சம் கொஞ்சமாக அரித்து அரித்து உடலுள்ளுறுப்புகளையும் சல்லடைக் கண்களாக்குவதாய்.... அவஸ்தைப் பட்டான்.

'ட்ரக் வண்டிகளின் இரைச்சல் நெருங்க நெருங்க வாழ்வின் கடைசி நிமிடங்களுக்கும் மரணத்துக்கும் இடையிலான பெரும்பாடு.

ஐயா, அம்மா யாருமேயில்லாத இடத்தில் அநாதரவாகப் பிடிபடப்போவதை நினைத்துப் பார்த்தான். அவனது முகத்துக்கு மேலே ஏராளமான பிசாசுகளின் மூர்க்கத்தனமான முகங்கள் கெக்கலித்தபடி வருவதாய் கண்களை இறுக மூடிக்கொண்டான்.

வந்த 'ட்ரக்"குகள் சந்தை முடக்கால் திரும்பி, வடக்கு நோக்கிப் போவதாகச் சத்தம் ஓய்ந்து போனது.

கொஞ்சம் கொஞ்சமாய் இதயத் துடிப்புச் சீராகியது. மனசில் நிம்மதியை வரவழைக்க மிகவும் பிரயத்தனப்பட்டுக் கொண்டு படுத்திருந்தான்.

இரவு ஏதோ ஒரு ஊர் சுற்றி வளைக்கப்படும். அதிகாலையில் தாம் துமென்று கதவு தட்டப்படும். திறந்தால் குலை நடுங்க வைக்கும் பீதியைத் தரக்கூடிய கொடிய தோற்றத்தால் தலைக்கவசமும் துப்பாக்கியுமாய் குவிந்து போய் நிற்பர். வீட்டில் உள்ள இளசு பழசெல்லாம் விசாரணைக்கென்று அழைத்துச் செல்லப்படுவர். அவர்களில் யார் யார் திரும்புவார்களோ? எத்தனை பேர் மிஞ்சுவார்களோ? தூக்கமின்றிக் கட்டிலில் புரண்டபடி கிடந்தான். இரவு இருளில் கரைந்து கொண்டிருந்தது.

முல்லைக்கோணேஸ்

# தேவை சினிமாவுக்கு வெளியே ஒரு மாற்று இசை!

– அதிநி

ஈழத்தின் மாற்று இசைப் பாரம்பரியத்தின் தொடர்ச்சியாய் உயிர்ப்புள்ள ஈழத்து கவிதைகளும் செழுமைமிக்க இசையும் இணைந்து காத்திரமான பாடல்களாக 'கண்ணீரும் குருதியும் காத்திருப்பும்' எனும் இசைத்தட்டு வெளிவருகிறது.

ஈழத்தில் தொடரும் போர் தமிழர் பரம்பலை உலகின் பல பாகங்களுக்கும் இட்டுச் சென்ற பின்னர் தமிழ் - தமிழர் அடையாளம் சம்பந்தமான தேடலும் முனைப்படையத் தொடங்கியிருப்பதை அவதானிக்கக் கூடியதாய் உள்ளது. அத்தகைய முனைப்பின் வெளிப்பாடாய் சிறு சஞ்சிகைகள், பத்திரிகைகள், வானொலிகள், மத நிறுவனங்கள், தமிழ் பாடசாலைகள், சங்கங்கள், நாடகம்-இசை-நாட்டியம் போன்றதான கலை முயற்சிகளை நாம் இனங் காணக்கூடியதாய் உள்ளன.

ஈழத் தமிழரின் பண்பாட்டு, கலாச்சார வாழ்வியல் முறைமைகள் புலம் பெயர்ந்த பின்பும் பாரிய மாற்றமடையவில்லை. புலம் பெயர்ந்த நாடுகளில் ஈழத்தமிழரின் வாழ்வியல் முறைமை புலம்பெயர்ந்த நாடுகளில் உள்ள கலாசார பண்பாட்டு வாழ்வியல் முறைமைகளோடு பரஸ்பர உடன்பாட்டுக்கும், சமரசத்துக்கும், முரண்பாட்டுடனான விலகல்களுக்கும் உள்ளாகியிருக்கிறது.

இத்தகையதான போக்கின் வெளிப்பாடாய் ஈழத் தமிழர்களின் முயற்சிகளையும் வகை செய்ய முடியும். புலம்பெயர்ந்த இடங்களில் நடைபெறும் பல்வேறு முயற்சிகள் தமிழ் - தமிழர் அடையாளத்திற்கு ஒரு உந்துதலைத் தருமென்பதில் பலருக்கும் முரண்பாடு இருக்க முடியாது. ஆயினும் தமிழின் ஆக்கத்துவத்திற்கு, தமிழ் நவீனத்துக்கு, தமிழின் புதிய அடையாளத்திற்கு இம் முயற்சிகள் எவ்வாறு பயனளிக்கும் என்பதே எம்முன்னுள்ள கேள்வி. ஈழத் தமிழர் புலம்பெயர்வு குறித்தான சமூக ஆய்வு, ஈழ தமிழரின் புலம்பெயர்வு பற்றிய நெறிமுறையான பதிவு என்பனவே இக்கேள்வியின் விடையை நோக்கி எம்மை இட்டுச் செல்லும்.

இந்நிலையில் இன்றைய காலத்தின் பதிவாய் வெளிவருகிறது கண்ணீரும் குருதியும் காத்திருப்பும் என்ற இசைத்தட்டு. கனடாவிலும் ஏனைய புலம்பெயர்ந்த இடங்களிலும் குறிப்பிடத்தக்க இசை முயற்சிகள் நடைபெற்றுள்ளன. அதன் தொடர்ச்சியாக இவ் இசை முயற்சியை நாம் கருத்திற் கொள்ள முடியும். சமகால தமிழ் இசை சினிமா இசை என்பதாகிவிட்ட நிலையில் சினிமாவில் இருந்து தமிழிசையை எவ்வாறு மீட்பது என்னும் இன்னுமொரு கேள்வியும் உண்டு.

சினிமா தரும் வரிகளே பாடல்களாகவும், சினிமாவில் பாடுவோரே பாடகர்களாகவும், சினிமாவுக்கு இசையமைப்போரே இசையமைப்பாளர்களாகவும் உள்ள நிலையே தமிழ் இசைக்கு உண்டு.

இன்னுமொரு பக்கத்தில் தமிழ் இல்லாத கர்னாடக இசையின் அபத்தம். இந்தக் கலைஞர்களின் ஆளுமை குறித்து நான் கேள்வியெழுப்பவில்லை. இசையின் பாரிய வெளி சினிமாவெனும் ஒரு குறுகிய வட்டத்திற்குள் நெரிக்கப்பட்டிருக்கிறது. தமிழ் இசையின் இயக்கம் சினிமாவில் தங்கியிருக்கும் நிலை மாற்றப்பட்டு அது தனக்கான சுய போக்கை அடையும் சந்தர்ப்பத்தில்தான் தமிழ் இசை தமிழுக்கும் தமிழருக்கும் ஒத்திசைவான வடிவத்தை பெறும் என்று நான் கருதுகிறேன்.

## கண்ணீரும் குருதியும் காத்திருப்பும் இசைத்தட்டு குறித்த ஒரு அறிமுகம்

சினிமாவுக்கு வெளியேயான மாற்று இசை தமிழருக்கு தேவைப்படுகிறது. எனவே அவ்விசை தமிழரது உண்மையான வாழ்வியலை, அவலங்களை, துயரை, எழுச்சியை, நம்பிக்கையை சுமக்கும் பாடல்களாக வரும் சூழல் உருவாகிறது.

மாற்று இசைக்கு ஈழத்தவரின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது. இலங்கை வானொலியால் உருவாக்கப்பட்ட ஈழத்துப்பாடல்கள், ஈழத்தின் துள்ளிசைப் பாடல்கள், போராட்ட காலங்களில் எழுந்த பாடல்கள், புலம்பெயர்ந்த இடங்களில் வெளிவந்த பாடல்களென மாற்று இசைக்கான போக்கு தொடர்கிறது. மாற்று இசை சினிமா இசையை புறம் தள்ளிய வரலாறு ஈழத்தில் தான் நடந்தது. பொப் இசை வளர்ச்சிக் கட்டத்திலும், போர்ச் சூழலிலும் இப் போக்கை அவதானிக்கக் கூடியதாயிருந்தது. இசையில் ஆர்வமுள்ள பலர் இக் காலத்தில் அறிமுகமானார்கள். இக்காலங்களில் அறிமுகமான கண்ணன் ஈழத்தின் போர்க்கால பாடல்கள் பலவற்றின் உருவாக்கத்திற்கு காரணமாய் அமைந்தவர். இம் முயற்சியிகளின் தொடர்ச்சியே மாற்று இசைப் பண்பை எம் மத்தியில் வளர்க்கும் என்பதே என் போன்றோரின் நம்பிக்கை.

ஆயினும் ஈழத்தில் தொடரும் யுத்தம் தொடர்ச்சியான மாற்று இசையோட்டத்திற்கு வழி சமைக்கவில்லை. இலங்கை வானொலி முயற்சிகளும் தேக்க நிலையிலேயே

⇨17

நன்றி - நூலகத்திட்டம்



# உரைக்குறிப்பு

## 'எங்கள் தேசத்தில்' 'வெளிச்சம்' எங்கே?

– வேலோன்

தொண்ணூறுகளில் போராட்ட நிகழ்வுகள் மற்றும் புலப்பெயர்வு-களின் விளைவுகளால் ஈழத்துத் தமிழ் இலக்கியத்தின் புதிய வரவுகளில் இனங்காணப்பட்ட உணர்திறன் முறைமை மாற்றமானது புனைகதைகளின் பரிணாம வளர்ச்சிக்குப் புது ரத்தம் பாய்ச்சியது.

போராட்ட இலக்கியங்களைப் போலன்றி: புலம் பெயர் இலக்கி-யங்களில் வாசகர் அனுபவித்த வாழ்கையானது அவர்களது இயல்பான வாழ்க்கைக் கோலங்களுக்கு முற்றிலும் அந்நியமாகத் திகழ்ந்ததற்கும் அப்பால் புலம்பெயர் இலக்கியங்-களில் தரிசித்த புதிய காட்சிகளும், மொழிநடையும் புதியதோர் உலகத்திற்கு அவர்களை அழைத்துச் சென்றதே அவ்விலக்கியம் முக்கியத்துவம் பெறுவதற்கான காரணமாக அமைந்திருந்தது.

புலம்பெயர் இலக்கியத்தில் காணப்பட்ட இத்தகைய வித்தியாசமான, தனித்துவமான அம்சம் தான் அதற்கோர் சர்வதேசிய அந்தஸ்தைக் கொடுத்ததோடு புதிய சகத்திரத்தில் அதுவே கிரீடம் சூடிக்கொள்ளும் என்று எஸ்.பொ போன்றவர்கள் கூறுமளவிற்கு நிறைய நம்பிக்கையயுந் தந்தது.

கருணாகரமூர்த்தி, நிஷ்டை தந்த கலாமோகன் ஆகியோருடன் அறுபதுகளில் எழுத ஆரம்பித்து 90களின் பிற்பகுதியில் உணர்திறன் முறைமை மாற்றத்தில் புதிய பரிமாணம் பெற்ற அ.முத்துலிங்கம், முதலானோர் புலம்பெயர் இலக்கியத்தில் ஆழத் தடம் பதித்ததோடன்றி மேலும் தமது தொடர்ச்சிகளை உருவாக்க முனைந்தனர்.

இத்தகைய இலக்கியப் போக்கின் ஒரு கீற்றாக 'வெளிச்சம்' எனும் சிறுகதைத் தொகுதியூடு சில காலங்களுக்கு முன் தன்னை வெளிச்சப்படுத்திய லெ.முருகபூபதி அண்மையில் 'எங்கள் தேசம்' எனும் தொகுப்பினையும் வெளிக்கொணர்ந்துள்ளார்.

**எங்கள் தேசம்**
முருகபூபதி
வெளியீடு :
முகுந்தன் பதிப்பகம்,
அவுஸ்திரேலியா
**இந்திய விலை : 36 ரூபா**

புலம் பெயர்ந்து வாழும் மக்களின் இடர்கள், மன ஓட்டங்கள், குடும்ப உறவுகளின் சிதைவுகள், கலாசாரப் பாதிப்புகள் முதலானவற்றை நிறுவத்தக்க வகையில் சில கதைகளையும்: புலம்பெயர்ந்த பின்பும் கடந்து வந்த பாதையை மறந்து விடாமல் எங்கள் தேச போராட்ட நிகழ்வுகள் குறித்த சில கதைகளையும் ஐம்பதுக்கு ஐம்பதாக இத் தொகுதி உள்வாங்கியுள்ளமை இத்தொகுதிக்கான சிறப்பியல்பாக அமைந்துள்ளது.

கத்தியைக் காணவில்லை.

தேவகி வீடு முழுவதும் தேடிப் பார்த்தாள். மீன் வெட்டும் கத்தியைக் காணவில்லை.

ஒருவாறு தம்மிகா வீட்டில் கத்தி வாங்கி வந்து மீன் வெட்டிச் சமைத்து உணவு வேளைக்குத் தயாரான பின்பு, மீன் வெட்டும் கத்தி விசாரணைக் குள்ளானது.

யார் எடுத்தது? எங்கே தொலைந்தது?




பிள்ளைகளைக் கூட்டி வந்து தேவகி குரலைக் கடுமையாக்கிப் பார்த்தாள்.

"பெரியம்மா.... பெரியம்மா...." தேவகி திடுக்கிட்டு விழித்தாள். தங்கையின் இளைய மகன் அது.

"பெரியம்மா... அந்தக் கத்தியை நான் தான் எடுத்தன்"

"உனக்கேன் அந்தக் கத்தி... அதனோடை என்ன விளையாட்டு?"

"பெரியம்மா... பெரியம்மா.... எங்கடை அப்பாவை ஊரிலை கொலை செஞ்ச அவன்கள் இங்கையும் வருவான்கள், அவனுகள் வந்தா வெட்டிக் கொல்ல வேணும் பெரியம்மா."

தேவகி அதிர்ந்தாள்.

அந்நியம் சென்ற கணவனுக்கு இந்த அவலங்களை எழுதி ஆறுதல் தேடியவள் தேவகி.

இன்றும் அவளுக்கு அவுஸ்திரேலியாவுக்கு எழுதுவதற்குப் புதிய 'செய்தி' கிடைத்துள்ளது. ஒவ்வொரு கடிதத்திலும் புதினம் கேட்டெழுதும் கணவனுக்கு எழுத 'கத்தி காணாமல் போன' கதை கருக்கொண்டது.

அது மட்டுமல்ல, பக்கத்து வீட்டு தம்மிகாவின் கணவனை அவன்கள் பிடிச்சுக்கொண்டு போறாங்கள்.

அவருக்கும் பொடியங்களுக்கும் தொடர்பம்....

"சீ இதென்ன வாழ்க்கை... எங்கடை தேசத்திலை யாருக்குத் தான் பாதுகாப்பு?" - கணவனுக்கு, அவுஸ்திரேலியாவுக்கு எழுதுவதற்கு இன்னும் இருக்கிறது தேவகிக்கு.


எங்கள் தேசம் எனும் இச்சிறுகதை சில சிந்தனைகளை எமக்களிக்கிறது. ஒன்று எங்கள் தேசத்தில் யாருக்குத் தான் பாதுகாப்பு என்பது. மற்றது, இன்றைய இளந்தளிர்களின் மனவோட்டம். அத்தோடு புலப்பெயர்வுக்கான மூல விசை நாட்டின் போர்க்கோலமே என புலம்பெயர் இலக்கியப் பரிமாணங்களினூடாக சருவதேசியத்திற்கும் தொற்றவைக்கும் பூபதியின் இரண்டக சிந்தனையே மொத்தத்தில் இங்கு கவனிப்புக்குரிய தொன்றாகின்றது.

ஆனாலும், மூன்று அல்லது நான்கு கதைகளுக்குரிய கருக்களை ஒரே கதையிலேயே உள்ளடக்கியிருப்பது, சிறுகதைக்குரிய கட்டமைப்பினைப் பொறுத்தமட்டில் உடன்பாடானதா? என்றொரு கேள்வி இக்கதையினைப் பொறுத்தமட்டில் எழுவது தவிர்க்க முடியாததொன்றாகின்றது. தேவகி அதிர்ந்தாள்!, என்றளவுடன் அக்கதை முற்றுப் பெற்றிருந்தால் அ.பாலமனோகரன் கூறுவது போலவே மொழிபெயர்ப்பிற்குரிய வகையான கதையாக அக்கதை அமைந்திருக்கும்.

முருகபூபதியின் 'வெளிச்சம்' சிறுகதைத் தொகுதி வரவேற்புப் பெற்றதற்கு அந்நூலின் கதைகளில் கையாளப்பட்டிருந்த 'கடலோர வளவினுள் காற்று உலாவருவது போன்ற' சுகமான, இலகுவான மொழிநடையே முதன்மையான காரணியாக அமைந்திருந்தது.

இத்தொகுதியிலும் அவர் அதைத் தக்க வைத்துக் கொண்டிருப்பாரேயானால் 'எங்கள் தேசமும் வெளிச்சம்' பெற்றிருக்கும்!

# வருகைகள்



**உயிர்நிழல்**
**சஞ்சிகை**

உயிர்நிழல் செப். -ஒக்டோ. 2000 இதழ் வெளிவந்துள்ளது.

இவ்விதழின் சிறப்பாக மறைந்த ஓவியர் மாற்குவின் முன் அட்டைப் படமும், அவர் தொடர்பான கட்டுரைகளும் வெளிவந்துள்ளன.

அத்துடன் 'வரண்ட மனங்களும் வக்கற்ற இலக்கியச் சூழலும்' என்ற அசோக் இன் கட்டுரை, 'வன்முறையும் இலக்கியமும்' என்ற நாவலாசிரியை திலகவதியுடனான யமுனா ராஜேந்திரனின் உரையாடல், 'நினைவுச் சின்னங்களின் மீது ஒரு துளி குருதியா? அல்லது ஒரு சிறு மலரா?' என்ற சேரனின் கட்டுரை என்பனவும் முக்கிய அம்சங்களாக வெளிவந்துள்ளன.


சித்தார்த்த சே குவேரா, சி.புஸ்பராஜா போன்றோரின் சிறுகதைகள், துர்க்கா, மாரிமுத்து யோகராஜன், சோலைக்கிளி போன்ற சிலரின் கவிதைகள் என்பனவும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

'எஸ்.பொ. வின் இனி ஒரு விதி செய்வோம்' - அருந்ததி ரத்னராஜ், 'எஸ்.பொ.வின் கருத்தியல் பிரமைகள்' - ஜமுனா ராஜேந்திரன் போன்ற சிலரின் எஸ்.பொ. வின் அரசியல் இலக்கியம் தொடர்பான பார்வை-களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இம்முறையும் சிறந்த படைப்புக்களுடன் வெளிவந்துள்ள உயிர்நிழல் தொடர்ந்து தனது பங்கை ஆற்றும் என எதிர்பார்க்கிறோம்.

தொடர்புகளுக்கு

EXIL
27 Rue Jean Moulin,
92400 Courbevoie,
France
e-Mail: EXILFR@aol.com
Web :
http:www.geocities.com/uyinizhal



**முள்ளில் படுக்கையிட்டு......**
**குறுங்காவியம்**

எஸ்.நஜிமுதீன்

வெளியீடு
டீன்ஸ் பதிப்பகம்
கலை இலக்கிய வட்டம்
சாய்ந்தமருது.

விலை: 80.00

கிராமிய இலக்கியமான நாட்டார் பாடல் பெருமளவான காரணங்களால் மறைந்து போகும் சூழலில் சிலர் தமது தனிப்பட்ட விருப்பினால் நாட்டார் இலக்கி-யத்திற்கு உயிர் கொடுக்க முயற்-சித்தார்கள், முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த முயற்சியில் நாட்டார் பாடல்களை நூல்களாக வெளி-யிடுவதும் ஒன்று.

இந்த வகையில் 'முள்ளில் படுக்கையிட்டு...' என்னும் எஸ்.நஜிமுதீன் இன் இந்நூல் கிழக்கிலங்கை நாட்டார் பாடல்-களை தொகுத்து ஆசிரியரின்ள காட்சிப்படுத்தல் விவரணத்துடன் வெளியிடப்பட்டுள்ளது. கிராமிய முஸ்லிம் மக்களின் வாழ்வு முறை, பழக்க வழக்கம், ஊடாட்டம் என்பவற்றை எம் கண்முன் கொண்டுவரும் விதத்தில் நாட்டார் பாடல்களை ஒரு கதை வடிவில் தொகுத்துள்ள இம்முயற்சி பாராட்டுக்குரியது.



**சத்தியம் அறிந்தது**
**நிமலராஜனின் நினைவு மலர்**

மறைந்த யாழ் பத்திரிகையாளர் நிமலராஜனின் நினைவு மலர் 'சத்தியம் அறிந்தது' என்ற பெரில் ஒரு சிறு நூலாக வெளிவந்துள்ளது. நிமலராஜன் ஞாபகார்த்த அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ள இம்மலரில் நிமலராஜன் கொலையைக் கண்டித்த பலரின் தமிழ், சிங்கள அறிக்கைகள், அனுதாபச் செய்திகள் உட்பட சிலரின் கவிதைகளும் இடம் பெற்றுள்ளன.

நன்றி - நூலகத்திட்டம்



# திருட்டுக்களும் புரட்டுக்களும் செய்வதில் மன்னன்!

சாகித்திய அக்கடமிகளுக்கும், சுதந்திர இலக்கிய விழாக்களுக்கும், அரச சாகித்திய விழாக்களுக்கும் என்ன நடந்ததோ தெரியவில்லை அவை அண்மைக் காலமாக திருடர்களின் கூடாரமாக மாறி வருகின்றன.

கடந்த வாரம் இணைவலையில் வலம் வந்த போது தமிழ் நாட்டு எழுத்தாளர்கள் இந்தியாவில் சாகித்திய அக்கடமியின் செயற்பாடுகளை ஒரு வாங்கு

1988ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது



வாங்கியிருந்தார்கள். சாகித்திய அக்கடமி விருது தகுதி இல்லாதவர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது உண்மை தான் என்றிருக்கிறார் பிரபல எழுத்தாளரான சா.கந்தசாமி.

சாகித்திய அக்கடமி மற்ற மொழிகளில் எப்படியோ தெரியாது தமிழைப் பொறுத்தவரைக்கும் பாரபட்சமாகவும், மேட்டுக்குடித் தனமாகவுமே நடந்து கொண்டுள்ளது கண்கூடு என்கிறார் இன்னொரு எழுத்தாளரான சு.சமுத்திரம்.

பிரபல வடஇந்தியப் பத்திரிகையாளரும் பெருமளவில் ஆங்கிலத்தில் எழுதுபவருமான குஷ்வந்த் சிங்கோ இந்த அபிப்பிராயங்கள் எல்லாவற்றுக்கும் மேலே போய் சாகித்திய அக்கடமிகளைக் கலைக்க வேண்டும், அவை உருப்படியாக எதையும் செய்ததில்லை என்று ஒரு போடு போட்டிருக்கிறார்.

கூடவே திறமையான எழுத்தாளர்களுக்கு இந்த விருது தேவையில்லை என்றும் அவர் சொல்லியிருக்கிறார்.

உண்மை தான். எங்களுடைய நாட்டு அரச சாகித்திய விழாக்களையும் சுதந்திர இலக்கிய விழாக்களையும் பார்க்கிற போது அந்த அபிப்பிராயம் சரி தானோ என்று எண்ணத் தோன்றுகிறது.

உண்மையில் இதனால் ஆடிப்போயிருப்பவர்கள் பின் கதவால் விருது வாங்கும் எழுத்தாளர்களேயன்றி திறமையான எழுத்தாளர்களல்ல.

இலங்கையில் அரச சாகித்திய விழாவுக்கு மாற்றாக அது சிறந்த படைப்பாளர்களையும் படைப்பாளிகளையும் புறக்கணிக்கிறது என்று கூறி சிறந்த படைப்பாளர்களும் படைப்பாளிகளும் எந்தவித தலையீடுமின்றி நேர்மையாகவும் சுதந்திரமாகவும் தேர்ந்தெடுத்து கௌரவிக்கப்பட வேண்டும் என்ற நோக்குடன் சுதந்திர இலக்கிய விழா ஆரம்பிக்கப்பட்டது.

காலப்போக்கில் ஆரம்பித்த நோக்கத்திற்குப் புறம்பாக அரச சாகித்திய விழாவின் நடுவர் குழாமில் இருந்தவர்களில் பெரும்பாலானவர்கள் சுதந்திர இலக்கிய விழாவின் நடுவர் குழாமிலும் அங்கம் வகித்ததை அன்றே சரிநிகர் சுட்டிக் காட்டி இவ்வாறான நடுவர் குழுவால் எவ்வாறு சுதந்திரமாக சிறந்த படைப்புக்களைத் தெரிவு செய்ய முடியும் என்று கேள்வியெழுப்பியிருந்தது.

படைப்புக்களைத் தெரிவு செய்வதற்காக அரச சாகித்திய விழாவில் வழங்கப்படும் அளவு கோல் வேறு, சுதந்திர இலக்கிய விழாவில் வழங்கப்படும் அளவு கோல் வேறு. நடுவர்கள், கொடுக்கப்படுகிற அளவு கோலின்படி சிறந்த படைப்பைத் தெரிவு செய்தால் சரி என்கிற கருத்துப்பட விழா அமைப்புக்குழுவினர் விளக்கமளித்தனர். சுதந்திர இலக்கிய விழாவில் சிறந்த படைப்புக்களைத் தெரிவு செய்ய வேண்டிய நடுவர்களோ கொடுக்கப்படும் அளவுக்கேற்ப சட்டை தைத்துக் கொடுக்கும் தையற்காரர்களானார்கள்.

இதன் இறுதி விளைவு அரச சாகித்திய விழாவிலும், அதற்கு மாற்றாக உருவாக்கப்பட்ட சுதந்திர இலக்கிய விழாவிலும் பெருமளவில் நடுவர்களும் ஒரே குழாமினர். பரிசு பெறுபவர்களும் ஒரே குழாமினர் ஆகியதே தவிர வெறொன்றாகவுமிருக்கவில்லை.

அன்றே சரிநிகர் சுட்டிக்காட்டியது போல பத்தோடு பதினொன்று அத்தோடு இதுவொன்றாகப் போயிற்று.

அரச சாகித்திய விழாவைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை. 1997இல் பதிப்பிக்கப்படாத, வெளிவராத நாவலுக்கான பரிசை செ.யோகநாதன் பின்கதவால் பெற்றுக் கொண்டார். அதற்கு

1999ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது



அவர் செய்ததெல்லாம் இரண்டு அமைச்சர்களின் காலில் விழுந்தது தான். நாவல் வெளிவரவில்லை என்ற செய்தியை மறைக்க கணணியில் எழுத்துக் கோர்க்கப்பட்ட பிரதியை தினகரன் பத்திரிகைக்குக் கொடுத்து மாத்தளை வடிவேலன் என்பவரூடாக நாவல் வெளிவந்து விட்டதாக அதற்கு ஒரு விமர்சனமும் எழுதுவித்திருந்தார்.

சரிநிகர் இவ்விடயத்தை அம்பலப்படுத்தி, வெளிவந்துவிட்டதாகச் சொல்லப்பட்ட நாவலின் ஒரு பிரதியை யாராவது கொண்டு வந்து தர முடியுமா என்று சவாலும் விட்டிருந்தது.

அது எப்படிச் சாத்தியம்? அது 1997இல்.

இவ்வருடமும் 1999ம் ஆண்டுக்கான சாகித்திய விருது வழங்கப்பட்டுள்ளது. அதில் சிறந்த சிறுவர் இலக்கியத்துக்கான விருது செ.யோகநாதனுக்கு அவருடைய 'தங்கத் தாமரை' என்ற நூலுக்காக வழங்கப்பட்டிருக்கிறது.

இங்கே நடந்த புரட்டுக்களைப் பாருங்கள். 'தங்கத் தாமரை' ஏற்கெனவே 1988 டிசம்பரில் வெளியான நூல். அந்த நூலில் மொத்தம் 11 கதைகள் இருந்தன. அதிலிருந்து தங்கத் தாமரை, ஆந்தையும் சிட்டுக்குருவியும், காட்டில் நடந்த ஓட்டப் போட்டி, இரண்டு பூனைக்குட்டிகள் ஆகியவற்றை எடுத்து அவற்றுடன் புதிதாக நான்னு கதைகளையும் இணைத்து தொகுப்பை தேர்வுக்கு அனுப்பி விட்டார் யோகநாதன்.

தேர்வுக்குழுவில் இருந்தவர்களுக்கு தமிழ்நாட்டில் பத்து வருடங்களுக்கு முன்னரே இந்நூல் வெளியானது தெரியாது என்ற நம்பிக்கை யோகநாதனுக்கு. அப்படி யாருக்காவது இதனை எங்கேயோ பார்த்த ஞாபகம் வந்து கேட்டாலும் அவர்களை ஏமாற்றவென பழைய கதைகள் சில உருவப்பட்டு புதிய கதைகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அத்தோடடு ட்ராஸ்க்கி மருதுவின் அட்டை இப்போது வண்ணத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டிலும் அது முதல் பதிப்புத் தான். இலங்கையில் இப்போது அது திருத்தப்பட்டு வெளியிடப்படும் போதும் அது முதல் பதிப்புத் தான்.

இது இங்கே ஏன் குறிப்பிடப்படுகிறது என்றால் நூல் தேர்வுக்கான விதிகள் தெளிவாக இரண்டு விடயங்களைக் குறிப்பிடுகின்றன. ஒன்று, நூலாசிரியர் இலங்கையராய் இருப்பதுடன், நூல் இலங்கையில் அல்லது இந்தியாவில் பதிப்பிக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.(விதி 13) இரண்டாவது, முதற்பதிப்பு மட்டுமே கவனத்தில் கொள்ளப்படும்.(விதி 14).

இவ்விரண்டு விதிகளையும் மீறி சாகித்திய விழாக்குழுவினர் விருது வழங்கியுள்ளனர். யோகநாதன் விருதுக்குரியவரானார்.

ஏற்கெனவே வெளியிடப்பட்ட நூலில் இவ்வாறு காலத்திற்கேற்ப திருத்தங்கள் செய்து வெளியிடுவதாயின் அதில் திருத்தப்பட்ட இரண்டாம் பதிப்பு எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். இது பதிப்பித்தல் துறைக்கான மரபொழுக்கம். இந்த சாதாரண விடயம் கூட தெரியாத அல்லது தெரிந்து கொண்டே சுத்துமாத்துப் பண்ணியிருக்கிறார் யோகநாதன். இந்த யோகநாதனை எம்.டி.குணசேன என்கிற வெளியீட்டாளர்கள் தமிழ் வெளியீட்டுக்கு ஆசிரியராக நியமித்திருப்பது தான் நகைப்புக்கிடமானது.

1997இல் வெளியாகாத நூலுக்கு பரிசு வழங்கியது சாகித்திய விழா நூல் தேர்வுக்குழு. 1999இல் ஏற்கெனவே வெளியான நூலுக்குப் பரிசு வழங்கியிருக்கிறது.

இப்போது குஷ்வந்த் சிங் இந்திய சாகித்திய அக்கடமி குறித்து கூறியதற்குத் திரும்ப வருவோம். சாகித்திய அக்கடமிகளைக் கலைக்க வேண்டும். அவை உருப்படியாக எதையும் செய்வதில்லை என்று கூறியிருக்கிறார் அவர். ஆம், திருட்டுக்களும் புரட்டுக்களும் செய்பவர்களுக்கு இடம் வழங்குவதைத் தவிர வேறெதையும் செய்ததில்லை என்று இங்கு நாங்கள் வேண்டுமானால் சேர்த்துக் கொள்ளலாம்.

## தேவை......

உள்ளன. இன்னிலையில் புலம்பெயர்ந்த தமிழர்கள் மேல் எதிர்பார்ப்பு வளர்வது தவிர்க்க முடியாததாய் உள்ளது.

புலம்பெயர்ந்த மக்கள் தமது வருமானத்தில் கணிசமான அளவை சினிமா, சினிமா இசை, சினிமாசார் கேளிக்கைகளுக்கு செலவிட்டு வருகின்றனர். இப் பணத்தில் ஒரு சிறு தொகையை மாற்று இசைக்கு அவர்களால் வழங்க முடியுமாயின் புலம்பெயர் இடங்களிலும் மாற்று இசைப் பாரம்பரியத்தை ஏற்படுத்த முடியும். ஆயினும் புலம்பெயர் மக்கள் மத்தியில் உள்ள பொருளாதார சமூகம் முழுத் தயாரிப்புக்கும் உதவி விட முடியாது. இசைசார் கலைஞர்களின் பற்றாக்குறை, தொழில்சார் கலைஞர்களின் பற்றாக்குறை போன்ற தடைகள் எம்முன்னுள்ளன.

கனடாவில் வெளியான இசைத்தட்டுகளுக்கு பின்னுள்ள மணிக் (நேர) கணக்குகள் இதற்கு நல்ல உதாரணம். இத் தடைகளை எம்மவர்கள் மீறுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. கனேடிய கலைஞர்களின் உளவார்ந்த உழைப்பை நாம் இச் சந்தர்ப்பத்தில் நினைவுகூறுவது நன்று.

இவ் வகை தடைகளை குறைத்து ஒரு தயாரிப்பை செய்து கொள்ள ஈழ-தமிழக-புலம்பெயர் நாடு என்ற முத்தள இணைப்பு தற்போது சாத்தியப்பாடாயுள்ளது. ஈழ-தமிழக கலைப்பாலம் ஒருவழிப்பாதையில் இருந்து இரு வழிப்பாதையாக மாற்ற முயற்சிகள் இடம்பெறும் இந்நிலையில் கலைஞர்கள் படைப்பாளிகளுக்கிடையேயான புரிந்துணர்வு அடிப்படையாகிறது. ஆகவே ஆக்க பூர்வமான கூட்டு முயற்சிகள் இணைப்பை, பரஸ்பர புரிந்துணர்வை இருசாராரிடையேயும் ஏற்படுத்தவும், அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவும் ஏதுவாய் இருக்கிறது. இக் கண்ணீரும் குருதியும் காத்திருப்பும் எனும் இசைத்தட்டு மாற்று இசைக்கும், ஈழ-தமிழக கலைப் புரிந்துணர்வுக்கும் முனைப்பாய் அமைகிறது.

இம் முயற்சியின் முன்னணித் தெரிவு மாதவன் ரவீந்திரன். இவர் 400 இற்கும் மேற்பட்ட மலையாளப் படங்களுக்கும் பல தமிழ் படங்களுக்கும் இசையமைத்தவர். மாநில, தேசிய விருதுகளை பெற்ற சிறந்த இசையமைப்பாளர். ஈழத்து தமிழ் மக்களின் துயரை நன்கறிந்த ஒருவர். ஈழத்து கவிதைகளை, மொழி மேல் ஈழத்தவர் கொண்ட ஆழ்ந்த ஈடுபாட்டை மதிக்கும் கலைஞர். 'ஒவ்வொரு ஈழத்து முகங்களையும் நான் காணும் போது ஊரான ஊர் இழந்தோம்... ஒற்றைப் பனைத் தோப்பிழந்தோம் என்ற பாடல்தான் என் மனதில் வரும்' என்று சொல்லும் ஒருவர். ஈழத்து மக்களின் அவலங்களை, அவர்களின் உணர்வுகளை பதிவு செய்யும் கவிதைகள் பாடல்களாக்கப்பட்டுள்ளன. எல்லா அவலங்களையும் மீறி மக்கள் வெல்லுவர் என்ற நம்பிக்கையை சுமக்கும் பாடல்களை வ.ஐ.ச.ஜெயபாலன், சேரன், பா.அ.ஜயகரன் ஆகியோர் ஆக்க வாணி ஜெயராம், வேணுகோபால், ராஜ் ராஜரத்தினம், சுனந்தா, அருந்ததி, ரவீந்திரன், பிரபாகர் ஆகியோர் பாடியுள்ளார்கள்.

முற்றிலும் மாறுபட்ட கவிதை-இசை இணைவின் செழுமையை இப் பாடல்களில் காணமுடிகிறது.

இத்தகைய முயற்சிகளுக்கு அனைத்து இசை இரசிகர்களும் ஆதரவளிக்க வேண்டும். அத்தகைய ஆதரவுடனேயே மாற்று இசைப் பாரம்பரியத்தை வளர்க்க முடியும் என நான் நம்புகிறேன்.

**நன்றி: உதயன் (கனடா)**

நன்றி - நூலகத்திட்டம்



## நினைவுக் குறிப்புகள் - 12


இந்தச் சட்ட விரோத பத்திரிகை வெளியீட்டுடனான என்னுடைய தொடர்பானது கட்சியின் இன்னொரு முக்கிய தொழில் வல்லுனருடனான தொடர்பை எனக்கு ஏற்படுத்திக் கொடுத்தது. அவர் தனக்கேயுரிய ஒரு பாணியைக் கொண்ட மிகவும் குறிப்பிடத்தக்க ஒரு பாத்திரம் என்று சொல்லலாம். அவர்தான் ஹென்றி பீரிஸ். அவர் தனது இளமைக்கால அரசியல் வாழ்வை ஏ.ஈ.குணசிங்கவினைப் பின்பற்றி ஆரம்பித்து பின்னாளில் லங்கா சமசமாஜக் கட்சியில் இணைந்து கொண்டவர். ஏ.ஈ.குணசிங்க தொழிற்சங்கவாதியாக இருந்த அந்தச் சிறப்பான காலத்து மேடைப் பேச்சுகளை, ஒரு மெல்லிய 'குடியின் பின்அவரைப் போலவே, அப்படியே செய்துகாட்டுவார் ஹென்றிபீரிஸ். இவர்தான் இந்த இரகசியச் சிங்களப் பத்திரிகையின் ஆசிரியராக செயற்பட்டார். அதாவது அந்தப் பத்திரிகையின் ஒவ்வொரு இதழின் இரண்டு பக்கங்களையும் தான் ஒருவராகவே எழுதி வந்தார். அவரிடம் கையெழுத்துப் பிரதிகளை எடுத்துக் கொண்டு அச்சகத்திற்குப் போவதற்காக நான் அடிக்கடி அவரிடம் போகவேண்டியிருந்தது. அவர் ஒரு சிறந்த சிங்கள எழுத்தாளர். அவரின் எழுத்துக்களில் ஒருவகைக் கிளர்ச்சித் தன்மையின் சுவை இருக்கும். அத்துடன் அவருக்கு கோட்பாடுகளை ஜனரஞ்சகப்படுத்தும் விதத்தில் எழுதக் கூடிய திறமை ஒரு கொடையாக இருந்தது. இதை பின்னாளில், நான் தலைமறைவு வேலைகளில் ஈடுபடாத காலத்தில் அவருடன் சென்ற கல்வி வகுப்புக்களில் கண்டிருக்கிறேன்.

அப்போது ஹென்றி ஒரு சிறிய வாடகைக் குடியிருப்பில் வேறொரு புனை பெயரில் வசித்துவந்தார். பத்திரிகை விநியோகத்திற்குப் பொறுப்பாக இருந்த குழு கிரமமாக அங்கே சந்தித்து வந்தது. இவ்வாறு அடிக்கடி ஆட்கள் வருவது பற்றி அயலவர்களுக்கு சந்தேகம் ஏற்படாதிருப்பதற்காக, ஹென்றி தான் சிங்கள மொழி வகுப்புக்களை நடாத்தி வருவதாக ஒரு கதையைக் கட்டியிருந்தார். உண்மையில் அவருடைய அன்றைய வாழ்க்கையை ஓட்டுவதற்கு என்று கிடைத்ததெல்லாம் கட்சியால் கட்சியின் தொழில் வல்லுர்களுக்காக வழங்கப்பட்டு வந்த அற்பமான, அதுவும் ஒழுங்கற்ற விதத்தில் வழங்கப்பட்ட கொடுப்பனவு மட்டுமே. இந்தச் சிறு தொகையில்தான் அவர் ஒரு மனைவியையும் சில காலம் ஒரு குழந்தையையும் பரமரிக்க வேண்டி இருந்தது. ஹென்றி, லோறன்ஸ் போன்ற ஒருசில கட்சியின் தொழில் வல்லுனர்களின் அர்ப்பணிப்பிலும் தியாகத்திலும்தான் அந்தக் காலத்தில் கட்சி உயிர் வாழ்ந்தது!

000

நான் இதுவரை எழுதி வந்தவற்றைப் படிக்கும் சில வாசகர்கள் நான் எழுதியவர்களின் பெயர்களையும் அடையாளங்களையும் வைத்துக் கொண்டு அக்காலத்து ல.ச.ச.கட்சியை ஆண்களை மட்டுமே கொண்ட ஒரு கட்சி என்று நினைக்கக் கூடும். இதுவரை எழுதிய விடயங்களைத் திருப்பிப் பார்க்கையில் 'விவி' மட்டும்தான் நான் குறிப்பிட்ட ஒரேயொரு கட்சிப் பெண்ணாக உள்ளார். உண்மையில் அன்றைக்கு இருந்த கட்சிப் பெண்களின் தொகையை அது சரியாகவே வெளிப்படுத்து-கிறது. கட்சியின் சில மூத்த தலைவர்கள் தமது மனைவி-மாரையோ, சகோதரிகளையோ கட்சிக்குள் கொண்டுவந்தார்கள். புல்சாரா லியனகேயின் சுயசரிதையில் குறிப்பிடப்படுவது போல விவி வெறுமனே அவரது கணவருக்காக கட்சிக்கு வந்தவரல்ல: அவர் தனது விருப்பத்தின் பேரில் தான் கட்சிக்கு வந்தார் என்ற போதும் இதுதான் நிலைமையாக இருந்தது.

**கட்சிக்குள் பெண்கள் மனைவிமார்களாகவோ அல்லது சகோதரிகளாகவோ தான் வந்து சேர்ந்தார்கள்!**




தலைமறைவு வாழ்க்கை

றெஜி சிறிவர்த்தன

விவியைப் பொறுத்தவரை அவர் ல.ச.ச.கட்சியின் அரசியல் மீது அவருக்கு இருந்த கவர்ச்சி காரணமாகவும், அரசியல் மீதான அவரது ஆர்வம் காரணமாக அவர் கட்சிக்கு வந்தார். அங்கே தான் அவருக்கு லெஸ்லியுடனான உறவு உருவாகிறது! விவியும் செலினா (என்.எம்.இன் மனைவி)வும் இந்தியாவிலிருந்து மலர்ந்தவர்கள். இந்தியாவிலிருந்து இலங்கைக்கு திரும்பியபோதும் ஒரு அரசியல் நபராக மாறினார் விவி. செலினாவோ கல்கத்தாவிலேயே ஒரு குறிப்பிடத்தக்க இடதுசாரி அரசியல்வாதியாக வளர்ந்திருந்தார். ஆனால், நான் இதை எழுதிக் கொண்டிருக்கும் காலத்தில் இருவரும் தங்கள் கணவன்மார்களில் நிழல்களாகத்-தான் இருந்தார்கள். யுத்தகாலத்து ல.ச.ச.கட்சியில் பெண்கள் ஒரு சின்னச் சிறுபான்மையினராகவே இருந்தனர். அப்போதைய கட்சியின் ஆட்சிக்குழுவில் ஒரு பெண் கூட இருக்கவில்லை. எனக்குத் தெரிந்த ஒரேயொரு சுவாரஸ்யமான உதாரணமாக கட்சிக்குள் மனைவியாகவோ, சகோதரியாகவோ அல்லாமல் வந்த பெண்தான் சுசான் டி சில்வா. இவர் மிகவும் சுவாரஸ்யமான ஒருவராக இருந்ததற்கு காரணம் வெளிப்படையாகவே அவர் ஒரு விடுதலை அடைந்த பெண் என்பதற்கான அடையாளங்கள் இருந்தன. குட்டையாக வெட்டப்-பட்ட தலைமுடியுடன் இருந்த அவர் புகைபிடிக்கவும் செய்தார். ஒருநாள், யுத்தம் முடிந்த பிறகு, கட்சியில் நான் இருந்த அணிக் எதிரணியில் அவர் இருந்த வேளையில் ஒரு சில நிமிடங்கள் சந்தித்தது தவிர அவருடன் நான் பழகியதில்லை. அவருடனான நெருக்கமான புரிதலை ஏற்படுத்திக் கொள்ளக்கூடிய வாய்ப்பினை துரதிஷ்டவசமாக இந்த எதிரணியில் இருந்த நிலைமை தவிர்த்துவிட்டது. அவர் பின்னாளில் கட்சிக்குள் நடந்த அணிகளிற்கிடையேயான போராட்டம் தொடர்பாக 'ல.ச.ச.கட்சியின் உடைவு' என்ற ஒரு பிரசுரத்தை எழுதினார். என்னுடைய பல்கலைக்கழக காலத்திய ல.ச.ச.கட்சியின் மாணவர் அணியில் கூட ஒரு பெண்களும் இருக்கவில்லை. கம்யூனிஸ்ட் கட்சிக்குழுவில் சீத்தா விக்கிரமசூரிய இருந்தார். இவர் பின்னர் நா.சண்முகதாசன் அவர்களை திருமணம் செய்து கொண்டார். ஆனால், ல.ச.ச.க.வில் இவர்களுடன் ஒப்பிடக்கூடிய எந்தப் பெண்களும் அடுத்த பரம்பரையை சேர்ந்த மீ தெனிய சகோதரிகள் (ஐராங்கனியும் காமதியும்) வரும்வரை இருக்கவே இல்லை எனலாம்.

**பெண்களது குறிப்பான பிரச்சினைகட்கான நடவடிக்கைகளோ, அல்லது இன்னும் சற்றுக் குறைவாக சொல்வதானால் பெண்களுக்கான ஒரு தனியான அமைப்பு தேவை என்பதோ எமக்கு கனவில் கூடத் தோன்றியதில்லை!**

என்னைக் கேட்டால், இந்த ஆண்களையே அதிகளவில் கொண்ட இந்த நிலமை, முதலாளிய சமுதாயத்தில் ஆண்களை விட பெண்கள் அரசியல் ரீதியாக பின்தங்கியே இருப்பார்கள் என்ற அபிப்பிராயத்தினையே கொண்டிருந்தோம் என்று தான் சொல்வேன். எங்கல்சின் 'குடும்பத்தின் தோற்றம்' என்ற நூலைப் படித்ததன் காரணமாக பெண்கள் ஒடுக்கப்பட்டவர்ள்ள என்பதை நாம் அறிந்திருந்தோம். ஆயினும் சோசலிசப் புரட்சி மட்டுமே இந்த ஒடுக்குமுறைக்கான ஒரே தீர்வு என்று தான் நாம் நினைத்தோம். பெண்களது குறிப்பான பிரச்சினைகட்கான நடவடிக்கைகளோ, அல்லது இன்னும் சற்றுக் குறைவாக சொல்வதானால் பெண்களுக்கான ஒரு தனியான அமைப்பு தேவை என்பதோ எமக்கு கனவில் கூடத் தோன்றியதில்லை!

(தொடரும்)

## புதிதல்ல புதைகுழிகள்!

புதியதல்ல புதியதல்ல
புதைகுழிகள் எங்களுக்குப் புதியதல்ல.

புதிது புதிதாக தோன்றிடினும் எங்களுக்கு
புதுமையல்ல புதைகுழிகள்.

புதைகுழிகள் தோண்டிப் புதைப்பதிலே வல்லவர்கள்
புதைத்ததெல்லாம் கண்டவர் நாம்
கண்ட வரலாறும் கண்முன்னே புதைபட்டுப்
போனதையும் கண்டவர்கள்

வாய்திறந்து ஏனென்று
நியாயம் கேட்டவர்கள்
போகின்ற வழிமாறிப் போனவரைத்
தடுத்தவர்கள்
உண்மை எதுவென்று உரத்துச் சொல்வதற்கு
உன்னியவர்
புதையண்டு போன புதைகுழிகள் ஏராளம்.

தஞ்சை மண்ணில் நாம்
கண்டவையோ அனந்தம்
மண் கும்பான் மண்மேடு மற்றும் வயல்வெளிகள்
பனங்காடு பற்றைப் பகிறுக்காடெல்லாம்
இன்றும் உறங்குவன எத்தனையோ புதைகுழிகள்

சமாதானம், விடுதலை
மற்றும் அதனோடு சேர்ந்துவரும்
சம்பச் சரக்கெல்லாம்
செம்மணியில் புதையுண்டு போனதையும்
கண்டவர் நாம்

அன்று முதல் இன்று வரை
அதிகாரம் கைப்பிடித்து வந்தவர்கள் எல்லோரும்
வெட்டிப் புதைத்தவைகள் எல்லாமே நாமறிவோம்
இன்று மிரிசுவிலில் கண்ட புதைகுழிகள்
ஒன்றும் புதிதல்ல எங்களுக்கு

புதையுங்கள்
இன்றும் புதையுங்கள்
ஆழக் கிடங்கெடுத்து அத்தனையும் புதையுங்கள்
உங்கள் கண்முன்னே தெரிகின்ற எதிரிகளை
வாழ வழிகேட்ட வல்லமை சற்றேவரை
மனிதத்தை எங்கள் வரலாற்றை
இன்னுமின்னும்
எஞ்சியுள்ள எல்லாவற்றையும்
தேடிவந்து
போட்டுப் புதையுங்கள்.

அதிகாரம் உங்களது; ஆதலினால்
அங்காரம் உம் சொந்தம்
புதைகுழிகள் தோண்டிப் புதைப்பதற்கும்
வல்லவர் நீர்
போட்டுப் புதையுங்கள்.

வானம் பொழிகின்ற
பூமி விளைகின்ற
வளமான ஓர் நாளில்
எங்கள் வரலாற்றை எழுதும்
புதைகுழிகள்!

- யுதிஸ்டிரன்

நன்றி - நூலகத்திட்டம்



## ஆசிரியர் நியமனத்தில் ஊழல்?

வவுனியா வடக்கு கல்விப் பணிப்பாளர் ஆ. பொன்னையா அவர்கள் தலைமையில் நடைபெற்ற தொண்டர் ஆசிரியர்களுக்கான நேர்முகத் தேர்வின் அடிப்படையில் உண்மையாக சேவைபுரிந்த சேவை மூப்புக்கொண்ட 44 தொண்டர் ஆசிரியர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

தெரிவுசெய்யப்பட்ட 44 பேரில் 5பேர் தவிரு ஏனைய பலருக்கு எதிராக மூவர் (இவர்களில் ஒருவர் தற்போது நியமனம் பெற்றுள்ளார்.) மாகாண சபைக் கல்வி அமைச்சிற்கு மேன்முறையீடு செய்தனர். உடன் அவர்கள் நியாயவாதிகள்போல் பறந்து வந்தனர். விசாரணைகளை (சம்பந்தப்பட்டவர்களைக் கூப்பிட்டு) நடாத்திவிட்டுச் சென்றனர். சிலமாத இடைவெளிக்குப்பின்:

திடிரென மாகாண கல்வி அமைச்சின் மரவேலைக்கு பொறுப்பான சுப்ரமணியம் தலைமையில் ஓர் குழு வருகை தந்து தீர்வு காண்பதாக கூறிவிட்டு சென்றது. சுப்பிரமணியம் குழு கடந்த 5 வருடங்களாக மழைக்கு கூட பாடசாலைக்குள் ஒதுங்காத இரு தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கியுள்ளது.

இந்த இருவரும் எப்படி நியமனம் பெற்றார்கள் என சுப்பிரமணியம் பதில் சொல்வாரா? அதைவிட இவர் மூன்று வருடம் பாடசாலைக்கு செல்லாத இன்னொரு பெண்ணுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது. உண்மையாகவும் தொடர்ச்சியாகவும் சேவைபுரிந்து இன்றுவரையும் பாடசாலைக்கு சென்றுகொண்டிருப்பவர்களும் மேன்முறையிட்டிற்கு ஆளாகாதவர்களுமான சுப்பிரமணியம் சிவராஜா, சுந்தரலிங்கம் இரத்தினேஸ்வரன், கணபதிப்பிள்ளை கபீஸ்வரன், அரியரட்ணம் சியாம் சுந்தர், செல்லையா பாலகிருஷ்ணான் தொடக்கம் 5வருடம் குறையா சேவை மூப்புக்கொண்ட 5 பேருக்கும் சுப்பிரமணியம் அவர்களால் நியமனம் வழங்கப் படாமல் தடை செய்யப்பட்டுள்ளது. காரணம் கேட்டபோது சிறிய சாட்டுகள் தாமதங்கள் கூறப்படுகின்றன.



ஐயா பத்திரிகை ஆசிரியர் அவர்களே, நாங்கள் படித்த பத்திரிகைகளில் உண்மையை வெளிக்கொண்டு வந்து சரிநிகர் என்ற பெயருக்கு ஏற்ப உண்மையாக உறங்கிக் கொண்டிருக்கும் சம்பவங்களை மக்களும் கபடம் நிறைந்த அதிகாரிகளின் நிலைமைகளையும் வெளிக் கொண்டுவர உதவுவீர்கள் என எதிர்பார்த்து எழுதுகின்றோம். கட்டாயம் பிரசுரிக்க நாம் எதிர்பார்ப்போம்.

**தி.கெ. வவுனியா**

## கனவுகள் நிறைவேறாத..........

சிலோனில் வேலை பார்த்த ஜோர்ஜ் சந்திரசேகரம் மற்றும் வீரகேசரியில் பணியாற்றிய அன்ரன் பாலசிங்கமும் முக்கியமானவர்கள் என்றே நினைக்கிறேன். அந்தப் பழக்கம் விடுதலைப் புலிகள் பத்திரிகையிலும் சில காலம் இவர் பணியாற்ற உதவியிருப்பதாக எண்ணலாம். அன்ரன் பாலசிங்கத்துடன் தர்மு சிவராமு நன்கு பழகியுள்ளார். அத்தொடர்பு வீரகேசரியிலும் அவர் சில கட்டுரைத் தொடர்களை எழுத துாண்டியுள்ளது. பிற்பாடு விடுதலைப் புலிகள் பத்திரிகையின் ஆசிரியர் குழுவிலும் பணியாற்றும் அளவுக்கு வளர்ந்துள்ளது. ஏனெனில் தர்மு சிவராமுவுக்கு அரசியல் என்பது பிடிக்காத விடயம். அவரால் எந்த கொள்கையுடனும் ஒத்துப் போக முடியாது. முரண்பட்டுக் கொண்டே இருப்பார்.

அதுதான் பிற்பாடு விடுதலைப் புலிகள் பத்திரிகையில் இருந்து அவர் விலக காரணமுமாய் இருக்கலாம்!

அவர் வாழ்க்கை மிகவும் முரண்பாடுகள் நிறைந்த வாழ்க்கை! நட்சத்திர வாசி என்ற அவரது நாடகத்தில் வரும் நட்சத்திர வாசியும் அவர் தான். அவர் ஒரு சிக்கலான ஆன்மா! ஆளுமைமிக்க அவருக்கு போலியாக நடிக்க முடியாது. எல்லாம் வெளிப்படை. முகமூடி என்பது தேவைப்படவில்லை!

காலங்கள் போகப் போக வாழ்க்கையும் மாறிக் கொண்டே வந்தது. உயர் கல்வி கற்க கொழும்பு. பின்பு 1983 ஜுலைக் கலவரத்தால் அகதியோட்டம். அதைத் தொடர்ந்து வந்த நிலையில்லாத வாழ்க்கை என்பன தொடர்புகளை அறுத்துவிட்டது.

இறுதியாக நோய்வாய்ப்பட்டு படுக்கையில் தர்மு சிவராமு இருப்பதாக கேள்விப்பட்டேன். அவரின் சில நண்பர்கள் இந்தியா போய் வரும் போது தகவல்கள் கிடைக்கும். இந்த விதத்தில் டாக்டர் இராமச்சந்திரன் தர்மு சிவராமுவுடன் போய் பழகி வந்தார். பல தகவல்களையும் தந்து உதவினார்.

இறுதிக் காலங்களில் வாழ்க்கையில் பற்று இல்லாமலே சீவித்தார் தர்மு சிவராமு. இடையில் இரண்டொருதரம் தற்கொலை செய்து கொள்ளவும் முயன்றுள்ளார் என்று கேள்வி. தமிழில், தமிழ் நாட்டில் சுதந்திரக் கலைஞனாக வாழ்வது என்பது மிகவும் கேள்விக்குறியே? என்றாலும் விடாப்பிடியாக தர்மு சிவராமுவும் எழுத்து - வாசிப்பு - ஓவியம் என்று சுதந்திரக் கலைஞனாக வாழ்ந்து இறந்தார்!

கலை, எழுத்து என்பன அவருக்கு போதிய சாப்பாடு போட முடியவில்லை. ஆனால், அவரின் ஓவியத்திறமை, சிற்பம் செய்யும் கலை ஓரளவுக்கு வாழ உதவி செய்துள்ளது என்று கூறலாம்! அவைதான் ஓரளவுக்கு அவரை உயிர் வாழ வைத்தது. பாரதி போல் அநீதி கண்டு கோபமுறும் அவருக்கு எதிரிகளும் அதிகம். பாதகம் செய்பவரை கண்டால் உமிழ்ந்து வெறுத்து விடும் குணம் அவருடையது. அதனால் யாருடனும் ஒட்ட முடியாது. அதிகம் எதிர்ப்பையும், பகைமையையும் தேடிக் கொண்டார். ஆனால் தலை வணங்க மாட்டார். எமக்கு தொழில் எழுத்து, கலை என நிமிர்ந்தே கூறுவார். தன்னை புரிந்து கொண்டவருடன் அன்புடன் பழகுவார். அவரின் கனவு பிரான்ஸ்.

ஆம், அவரின் கனவு பிரான்ஸ்க்கு செல்வதே! அது இறுதி வரை கைகூடவில்லை. போலியும், சூழ்ச்சியும், ஏமாற்றும் தந்திரங்கள் நிறைந்த உலகில் அவர் தனிமைப்பட்டு போனார். வாழ்க்கையை இடையில் முடித்துக் கொள்ள விரும்பினார். முடியவில்லை. இறுதியில் சுதந்திரக் கலைஞனாக வேலுார் அருகிலுள்ள கரடிக்குடியில் 06.01.1997 அன்று உலகை விட்டே அகன்று சென்று விட்டார்.

அவர் சென்று விட்டாலும் அவர் நினைவுகள் வரும்!

**(ஜன. 6ம் திகதிய அவரது நினைவு தினத்தை ஒட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது)**

## பாடசாலை மாணவர்கட்கான சிறுகதை, கவிதைப் போட்டி

பாடசாலை மாணவர்களின் படைப்பிலக்கிய ஆளுமைகளை ஊக்குவிக்கும் நோக்குடன் சரிநிகர் பத்தாவது ஆண்டு நிறைவை ஒட்டி நாடளாவிய ரிதியில் நடாத்தப்படும் சிறுகதை, கவிதைப் போட்டிகள்.

முதற்பரிசு ரூபா 1500
இரண்டாம் பரிசு 1000
மூன்றாம் பரிசு 500

போட்டி விதிகள்:

1. ஆக்கங்கள் பாடசாலை மாணவர்களின் சொந்த ஆக்கமாக, இதற்கு முன் எங்கும் வெளியிடப்படாததாக இருக்க வேண்டும்.

2. ஆக்கங்கள் பாடசாலை அதிபர் அல்லது வகுப்பாசிரியரால் உறுதி செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

3. கதைகள் புல்ஸ்காப் தாளில் ஒரு பக்கத்தில் ஆறு பக்கங்களுக்கு மேற்படாமலும் கவிதைகள் இரண்டு பக்கங்களுக்கு மேற்படாமலும் அமைய வேண்டும்.

4. போட்டி முடிவுத் திகதி ஜனவரி 15,2001

5. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

6. அனுப்பப்படும் படைப்புகளில் பெயர் எழுதப்படாமல், தனியான தாளில் பெயர் விபரம் எழுதி அனுப்பப்பட வேண்டும்.

படைப்புகள் அனுப்பப்பட வேண்டிய முகவரி

**ஆசிரியர்**
சரிநிகர்
இல: 19/04, 01/01, நாவல வீதி,
நுகேகொடை.

**பாடசாலை விடுமுறை காரணமாக முடிவுத் திகதியை பின்போடுமாறு பல ஆசிரியர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க முடிவுத் திகதி ஜனவரி 15ற்குப் பிற்போடப் பட்டுள்ளது.**

## நூல்கள் அறிமுகமும் கலந்துரையாடலும்

*** ஈழத்துத் தமிழிலக்கியத் தடம் பார்வையும் விமர்சனங்களும்**
– கார்த்திகேசு சிவத்தம்பி

*** பலஸ்தினக் கவிதைகள்**
– எம்.ஏ.நுஃமான்

காலம்
07 ஜனவரி 2001 ஞாயிறு
பிப.4.30 மணி

இடம்
இராமகிருஷ்ண மண்டபம்

தலைமை
செ.யோகராசா

நூலாய்வு
எஸ்.கே.விக்னேஸ்வரன்
ஈழத்துத் தமிழலக்கியத் தடம்

சி.சிவசேகரம்
பலஸ்தீனக் கவிதைகள்

கருத்துரை
கொ.றொ.கொன்ஸ்ரன்ரைன்

அழைப்பு
மூன்றாவது மனிதன் பதிப்பகம்

## யுத்த நிறுத்தத்....

கட்சிகளை நாங்கள் அழைக்கவில்லை. ஆனால் இதொகாவின் மாற்றுக்குழு பாராளுமன்ற உறுப்பினர் பி.பி.தேவராஜ் இருக்கிறாரே - இது பதில்

மீளவும் மலையகம் பற்றி ஒரு கேள்வி.

மலையகத்தின் பிரச்சினை வேறு வடகிழக்குப் பிரச்சினை வேறு அல்லவா?

பிரச்சினையின் தன்மை வேறு வேறாயிருக்கலாம். ஆனால் தமிழர்கள் என்ற வகையில் எதிர்நோக்கும் நெருக்கடிகள் ஒரே மாதிரியானவை. அவர்களும் தமிழர்கள் என்றதனாலேயே நெருக்கடிக்குள்ளாக்கப்படுகிறார்கள். - இது பதில்

அரசாங்கம் அரசியலமைப்புச் சீர்திருத்தத்தைக் கொண்டு வந்தால்...

ஏற்கெனவே அரசாங்கம் முன்வைத்துள்ள அரசியலமைப்புச் சீர்திருத்தங்களைத் தமிழ்க் கட்சிகள் நிராகரித்துள்ளன. அவை குப்பைக் கூடைக்கே பொருத்தமானவை. அந்த அடிப்படையில் பேசிப் பயனில்லை. வடகிழக்கின் பிரச்சினை தனித்துவமாகத் தீர்க்கப்பட வேண்டும். என்றார் அ.இ.த.கா. பாராளுமன்ற உறுப்பினர் விநாயக மூர்த்தி.

திம்பு அடிப்படையிலா....?

அது ஒரு அடிப்படையான விடயம். அதனைப் புலிகளும் ஏற்றிருந்தார்கள். அதிலிருந்து ஆரம்பிக்கலாம் புலிகளுக்கும் அரசுக்கும் இடையே நடைபெறும் பேச்சுவார்த்தையில் எடுக்கப்படும் முடிவுகளுக்கமையத் தான் அரசியலமைப்புத் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் - இது சிறிகாந்தா.

ரெலோ அமைப்பின் முதல்வர் சிறிகாந்தா தெளிவாக ஒரு விடயத்தைச் சொன்னார். ஆயுதம் என்பது பேச்சுவார்த்தை மேசையில் பேரம் பேசலுக்கான பலம். புலிகளிடம் இன்று ஆயுதம் இல்லை என்றால் பேச்சுவார்த்தை மேசையில் அவர்களால் எதையும் சாதித்துவிட முடியாது. வன்முறை வழியைக் கைவிடுவதாகக் கூறி இந்திய-இலங்கை ஒப்பந்தத்துடன் ஆயுதங்களைக் கைவிட்டு ஜனநாயக வழிக்கு வந்து தமிழ்க்கட்சிகள் வந்து பத்து வருடங்களுக்கு மேலாகி விட்டது. இந்த ஜனநாயக நீரோட்டத்துக்கு வந்த நாங்கள் தமிழ் மக்களுக்காக எதைப் பெற்றுக் கொடுத்து விட்டோம். இன்று தமிழ்க்கட்சிகள் சிதைந்து சிதைந்து செல்லாக்காசாகி யாருக்குமே தேவையற்றவர்களாக ஆகிக் கொண்டிருப்பதைத்தவிர.

1987 இந்திய இலங்கை ஒப்பந்தத்துடன் இந்தியா இலங்கை அரசுக்குச் செய்த பெரிய பணி, சிறிலங்கா அரசுக்கு எதிராகப் போராடி வந்த தமிழ் அமைப்புக்களில் பெரும்பாலானவற்றை அதே சிறிலங்கா அரசுடன் இணைய வைத்து, அவர்கள் எதற்காகப் போராட ஆரம்பித்தார்களோ அந்நோக்கத்திற்கு எதிராகவும், அவர்கள் யாரைத் தமது பிரதான எதிரியாகக் கருதினார்களோ அவர்களைப் பிரதான நண்பனாகவும் ஆக்கி வைத்தது தான்.

## மலையகப் பொலிஸ்.....

வகையில் திட்டித் தீர்த்த குணசேகரனும், பொறுப்பதிகாரி டிரோன் சில்வாவும் இவர் மீது சந்தேகம் இருப்பதாக கூறி ஓரிரவும் ஒரு பகலும் விசாரணைக்கென தடுத்து வைத்ததோடு பெண் பொலிசார் இல்லாத பொலிஸ் நிலையத்தில் 20 மணித்தியாலம் இவரைத் தடுத்து வைத்துள்ளனர். மேலும் நள்ளிரவு 2.00 மணி வரை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இவரைத் தனியாக விசாரணை செய்துள்ளனர்.

மலையக அரசியல் தொழிற்சங்க தலைமைகளுக்கு இவை ஒன்றும் பிரச்சினைகளே இல்லை அல்லவா?

நன்றி - நூலகத்திட்டம்

Registered as a Newspaper in Sri Lanka


# சரிநிகர்

"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இல 19/04, 01/01, நாவல வீதி, நுகேகொட
தொலைபேசி, தொலைமடல் 074400045
மின்னஞ்சல் :sarini@sltnet.lk


## யுத்தம் ஒழியட்டும்: சமாதானத்திற்காக!

நாடு எங்கே போய்கொண்டிருக்கிறது?

நாம் எங்கே போய்க்கொண்டிருக்கிறோம்?

-இந்தக் கேள்விகள் இப்போதெல்லாம் மிகச் சாதாரணமாக நம்மிடையே அடிபடுகிற கேள்விகள் தான். இக்கேள்விகளில் ஒருவித சலிப்பும் அவநம்பிக்கையும், தொனித்து சொல்லித்தெரிய வேண்டியதில்லை.

'- கூடவே சமாதானப் பேச்சுவார்த்தை என்ன மாதிரி முடியப் போகிறது? அரசாங்கம் விடாது போலிருக்கிறதே' என்ற அப்பிராயங்களையும் நாம் கேட்கிறோம். இவையெல்லாம் சமாதானத்திற்கான மக்களின் விருப்பங்களதும் கோரிக்கைகளதும் வெவ்வேறு வெளிப்பாடுகள்.

புலிகளின் போர் நிறுத்த அறிவிப்பு உதாசீனம் செய்யப்பட்டு அவர்கள் காட்டிய சமாதானக் கொடிமீது ஏறிமிதித்துக் கொண்டு படை நகர்ப்பில் ஈடுபடுகிறது அரசு.

இந்தப் படை நகர்ப்பு குடாநாட்டின் நிலப்பரப்புகளை மீண்டும் தாம் கைப்பற்றிய பெருமிதத்துடன் அரசாங்கத்தை கொக்கரிக்க வைத்துள்ளது. இலங்கை அரசாங்கங்களில் காலத்துக்கு காலம் கேலிச்சித்திரங்களை தோற்கடிக்கும் விதத்தில் ஒருவர் இருக்கவே செய்வார். அரசுகளின் அட்டூழியங்களினால் துன்பப்படுகிற மக்களுக்கு சிரிப்பதற்கும் யாராவது வேண்டாமா? கூத்துக்கு ஒரு கோமாளி வேண்டாமா?

ஆனால், இந்தக் கோமாளிகள் காரியார்த்தக் கோமாளிகள் வெறும் நகைப்புக் கிடமான கதைபேசுபவர்கள் மட்டுமல்ல, அரசின் கோட்பாடுகளையும், திட்டங்களையும் கூட வெளிப்படுத்துவார்கள்.

இப்போது 'எமது நோக்கம் யுத்தமே' என்று திரும்பத்திரும்ப சுத்தி வருகிறார் பிரதமர் ரட்ணசிறி காரியார்த்தக் கோமாளியாக.

இன்று புலிகளின் யுத்த நிறுத்தத்தின் பின்னான போர் நடவடிக்கையின்போது படையினர் 'பேரழிவிலிருந்து வெற்றியை நோக்கி' நடைபோட்டிருப்பதாக அறிக்கைவிட்டு அவர்களைப் பாராட்டி இருக்கிறார் அமைச்சர் மங்கள சமரவீர.

ஆக அரசு இந்த வெற்றிக்களிப்பில், சமாதானக் கொடியை இரத்தத்தில் தோய்த்தபடி சமாதானத்திற்கான யுத்தத்தில் ஈடுபடுவதை தீவிரமாகத் தொடர்கிறது.

தமிழ் மக்களும், தமிழ்க்கட்சிகளும் - அரசுடன் பங்காளிகளாக மாறியுள்ள தமிழ்க்கட்சிகள், மற்றும் அதன் வால்பிடிக் கட்சிகள் தவிர - தமிழ் முஸ்லிம் மக்களும், ஏன் சிங்கள ஜனநாயக சமாதான அமைப்புகளும் கூட இந்த போர் நிறுத்ததை ஏற்றுக்கொள் என்று வலியுறுத்துகின்றன. புலிகளுடன் சமாதானப் பேச்சை ஆரம்பி என்று அரசை வற்புறுத்துகின்றன.

ஆனால், வெற்றிக்களிப்பிலும் இனவெறியிலும் திளைத்துப்போயுள்ள அரசுக்கும் அரச படைகளுக்கும் கண்மண் தெரியவில்லை. யுத்த நிறுத்தம் செய்துள்ள புலிகளை ஓரங்கட்டி ஒழித்துவிட அதைவிட வேறு சந்தர்ப்பம் கிடையாது என்ற அவசரத்துடன் அவை இயங்குகின்றன. ஆனால், அரசின் ஒவ்வொரு அடி முன்னேற்றமும் அப்பாவி மக்களதும் அவர்களது சொத்துக்களதும் அழிவுக்கு வழிவகுத்துக் கொண்டு செல்கின்றன.

மிருசுவில் புதைகுழிகள் இதற்கு நல்ல உதாரணம். மிருசுவில் மட்டுமல்ல, இன்னும் எத்தனை எத்தனை புதைகுழிகள் இதுவரை கண்டு பிடிக்கப்படாமல் இருக்கின்றவோ என்பது யாருக்குத் தெரியும்?

சமாதானம் பின்போடப்படுவதால், யுத்தம் தீவிரமடைவதால் துன்பப் படுகிறவர்கள் எப்போதும் யுத்தத்தில் சம்பந்தப்படாத அப்பாவி மக்களே என்பதால், அரசுக்கு இதுபற்றி எந்த அக்கறையும் இல்லை. அதிலும் தமிழ் மக்கள் என்பதால் தான் அக்கறைப்படுவது அவசியம் என்று அது கருதவும் இல்லை!

இயற்கையின் சீற்றத்தால் பாதிக்கப்பட்டு உடமைகளையும், உயிர்களையும் இழந்த அப்பாவி மக்களில் கூட தமிழர்களா சிங்களவர்களா என்று பேதம் பிரித்துப் பார்த்து சிங்கள மக்களுக்கு மட்டும் ஆதரவு தெரிவிக்கவும், அவர்களது நேரில் சென்று பார்த்து துன்பங்களைத் துடைத்துக்கவும் உடனடி நடவடிக்கை எடுக்கிறார் நாட்டின் ஜனாதிபதி. மிருசுவில் கொல்லப்பட்ட மக்களுக்காக 'அட' என்று ஒரு அதிர்ச்சி வெளியிடக்கூட அரசுக்கு அக்கறை இல்லை.

தமிழ் மக்கள் கொல்லப்பட்டால் அது வெறும் 'பொலிஸினதும் நீதிமன்றத்தினதும்' விவகாரமாகப் போய் விடுகிறது. சிங்கள மக்கள் என்றால் அரசாங்கத்தின் தீவிர அக்கறைக் குறியதாகி விடுகிறது. இது இந்த அரசின் தன்மை. மாற்றத்தால் மனோ பாவத்தின் வெளிப்பாடு. இனப்பிரச்சினைக்கு ஆரம்பமே இங்கே தான் உருப்பெற்றது.

ஆக, அரசு சமாதானத்தை ஒரு 'பேச்சுக்குத் தான்' உச்சரிக்கிறது என்பதை புரிந்துகொள்ள வேறு உதாரணங்கள் தேவையில்லை. அதை சமாதானத்தை நோக்கி இடித்துத் தள்ளுகின்ற பணி இந்நாட்டு மக்கள் அனைவரதும் கையிலுள்ளது.

சர்வதேச சமூகம் - அரசுக்கு ஆயுதமும் பண உதவியும் செய்யும் அரசுகள் - எல்லோருக்கும் இது ஒரு கடப்பாடும் கூட. இதற்கான தமிழ்க் கட்சிகளினதும், புத்திஜீவிகளிதும் செயற்பாட்டில் சரிநிகரும் சேர்ந்து நிற்கிறது. ஒழிக யுத்தம்: வருக சமாதானம்!

## யுத்த நிறுத்தத்துக்கு தமிழ்க்கட்சிகள் ஆதரவு!

# அரசியல் களத்தில் தமிழ் கட்சிகள்?

பதினொரு தமிழ்க்கட்சிகள் இணைந்து ஜனவரி 3ம் திகதி கொழும்பு ஹொலிடே இன் ஹோட்டலில் ஒரு பத்திரிகையாளர் மாநாட்டினை நடாத்தின.

மாநாட்டின் நோக்கத்தினை அதன் அமைப்பாளர்களில் ஒருவரான ரெலோ அமைப்பின் முதல்வர் என்.சிறிகாந்தா கருத்துத் தெரிவிக்கையில்,

டிச.24ம் திகதி முதல் ஜனவரி 24 வரை புலிகள் போர் நிறுத்தமொன்றை அறிவித்திருக்கிறார்கள். இந்தப் போர் நிறுத்த அறிவிப்புக்கு, நீண்ட நாட்கள் கழித்து அதனைத் தாங்கள் நிராகரிப்பதாக அரசாங்கம் அறிவித்திருக்கிறது. ஆனால் புலிகளோ போர் நிறுத்தத்தைத் தாங்கள் தொடர்வதாகவும் அரசும் போரை நிறுத்தி பேச்சுக்கான நல்லெண்ணத்தை வெளிப்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் தெற்கில் யாருமே அதனைக் கவனத்தில் எடுத்ததாகத் தெரியவில்லை. குறிப்பாக அரசாங்கம் போரைத் தொடர்வதிலேயே கூடிய ஆர்வம் காட்டி வருகிறது.

இந்நிலையில் போர் நிறுத்தமொன்றை மேற்கொள்ள அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் பல்வேறு சக்திகளை இணைத்து வெகுஜனப் போராட்டங்களை மேற்கொள்வதும், அவ்வாறு அரசுக்கு அழுத்தம் கொடுக்குமாறு இலங்கையின் இனப்பிரச்சினையில் அக்கறை கொண்டுள்ள அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பிய யூனியன், மற்றும் இந்தியா போன்ற நாட்டின் தூதுவர்களை நேரில் சந்தித்துக் கோருவதும், பேச்சுவார்த்தை மூலமாக தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காண நிர்ப்பந்திப்பதுமே எமது நோக்கமாகும் என்று தெரிவித்திருந்தார்.

புலிகள் பலவீனமடைந்த நிலையில் உள்ளார்கள். அவர்கள் தம்மைப் பலப்படுத்துவதற்கான இடைவெளியாகவே இந்தப் போர் நிறுத்தத்தைக் கோரியிருக்கிறார்கள் என்று சொல்லலாம் அல்லவா என்று கேட்டார் ஒரு செய்தியாளர்.

அதற்குப் பதிலளித்த சிறிகாந்தா புலிகள் பலவீனமடைந்திருப்பதாகச் சொல்ல முடியாது. 1995இல் பேச்சுவார்த்தை முறிவடைந்து யுத்தம் தீவிரமானது. சமாதானப் பேச்சுவார்த்தைக்குத் தாங்கள் தயார் என்று புலிகள் பலமுறை தெரிவித்திருந்தாலும், ஐந்து வருடங்களுக்குப் பிறகு முதன்முறையாகப் போரை நிறுத்தியிருக்கிறார்கள். இந்த அறிவிப்புக்குப் பின்னரும் அரசு போரைத் தொடர்ந்து முன்னெடுத்த போதும் புலிகள் போரை ஆரம்பிக்கவில்லை. இதனை புலிகளின் பலவீனமாக ஏன் கொள்ள வேண்டும். போர்முனையில் தளங்கள் இராணுவத்தினுடைய கையிலிருந்து புலிகளின் கைக்கும், புலிகளுடைய கையிலிருந்து இராணுவத்தின் கைக்கும் மாறுவது சாதாரணமானது. இதனைப் பலிகளின் தோல்வியாகக் கூற முடியாது. இங்கு கூடிய 11 தமிழ்க்கட்சிகளின் நோக்கமும் தமிழ் மக்களுடைய அபிலாஷையான போரை நிறுத்தி பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண வேண்டும் என அரசை வற்புறுத்துவதோடு, அவ்வாறு 'அரசுக்கு அழுத்தத்தை ஏற்படுத்துமாறு சர்வதேசத்திடம் வேண்டுகோள் விடுப்பதே என்றார்.

டக்ளஸ், வரதராஜப் பெருமாள் போன்றோர் புலிகளிடம் சில கோரிக்கைகளை வைத்திருக்கிறார்களே அதைப் போல நீங்களும் புலிகளிடம் ஏதாவ்து கோரிக்கை வைத்திருக்கிறீர்களா? அல்லது வைப்பீர்களா என்றார் இன்னொரு செய்தியாளர்.

நாங்கள் இங்கே கூடியிருப்பதன் நோக்கமே வேறு. முதலாவதாக நோர்வேயின் அனுசரணையுடன் பேச்சுவார்த்தை ஒன்றை ஆரம்பிப்பதற்கான முயற்சி ஒன்று தொடங்கப்பட்டிருக்கிறது. இரண்டாவதாக அந்த முயற்சியின் ஓரங்கமாக புலிகள் ஒரு மாத காலத்திற்கு போரை நிறுத்துவ்தாக அறிவித்திருக்கிறார்கள். அரசும் போரை நிறுத்துமானால் போர் நிறுத்தத்தை தாங்கள் தொடர்வதாகவும் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். மூன்றாவதாக புலிகளின் போர் நிறுத்தக் கோரிக்கையை அரசு நிராகரித்த போதும் மீளவும் தாங்கள் போர் நிறுத்தத்தைத் தொடர்வதாகப் புலிகள் அறிவித்திருக்கிறார்கள். இந்நிலையில் இங்கு கூடியுள்ள 11 அமைப்புக்களும் பேச்சுவார்த்தை ஒன்றை ஆரம்பிப்பதற்கான ஒரு நல்ல சூழல் உருவாகியிருக்கின்றது என்றே கருதுகின்றன. அந்தச் சூழலைத் தவறவிடாது அரசும் போர் நிறுத்தத்தை அறிவித்து பேச்சுவார்த்தையை முன்னெடுக்க வேண்டுமென்றே கருதுகின்றன. அதனை வலியுறுத்துவதே எமது நோக்கம்.

இந்த நேரத்தில் ஒலிவாங்கியை வாங்கிய அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் விநாயகமூர்த்தி, நாங்கள் இன்னொரு விடயத்தையும் கவனிக்க வேண்டும். புலிகள் போர் நிறுத்த அறிவிப்புச் செய்த பின்னர் தான் படையினர் புலிகளிடமிருந்து நிலங்களைக் கைப்பற்ற ஆரம்பித்திருக்கிறார்கள். புலிகளோ போர்நிறுத்தம் செய்திருக்கிறார்கள். அப்படியானால் படையினர் யாருடன் போர் புரிகிறார்கள்: புலிகளுடனா என்று எதிர்க் கேள்வி போட்டார்.

கூடவே புலிகளுடன் அரசு பேச ஆரம்பித்தால் தங்களுடைய இருப்புக்கு அர்த்தம் இல்லாது போய்விடும், தங்களுடைய அரசியல் வாழ்வு அஸ்தமித்து விடும் என டக்ளஸ், பெருமாள் போன்றோர் அஞ்சுகின்றனர் எனவும் அவர் தெரிவித்தார்.

புலிகள் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா என்று அ.இ.த.கா. செயலாளர் ந.குமரகுருபரனிடம் கேள்வியெழுப்பினார் செய்தியாளர் ஒருவர்.

ஆம். புலிகள் தான் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் என்பதை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம் என்று அவர் சொல்ல அவரிடமிருந்து ஒலிவாங்கியை வாங்கி, மிகவும் சாதுரியமாகப் பதிலளித்தார் சிறிகாந்தா. 'இங்கு கூடியுள்ள அமைப்புக்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறு விடயங்களில் வெவ்வேறு அபிப்பிராயங்களைக் கொண்டுள்ளன. ஆனால் யதார்த்தம் ஒன்றை அனைவரும் அறிவர். புலிகள் போரை நடாத்துகிறார்கள். அவர்களுடன் பேசாமல் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது. ஆகவே அரசு அவர்களுடன் பேசியாக வேண்டும். அதனை இங்குள்ள அனைவரும் ஏகமனதாக ஏற்றுக் கொண்டுள்ளனர் என்றார்.

இங்கு முக்கியமான கட்சியாகிய இ.தொ.கா.இல்லையே? இது இன்னொரு செய்தியாளரின் கேள்வி. அரசின் பங்காளிக்

⇨19


ஜனவரி மாதம் 09 ஆம் திகதி மாலை 7.30 மணிக்கு ரி.என்.எல். தொலைக்காட்சியில் விழிப்பு நிகழ்ச்சியைப் பாருங்கள்




செவ்வாய் தோறும் இரவு 7.25 மணிக்கு
ரி.என்.எல் தொலைக்காட்சியில்

எரியும் இனப்பிரச்சினை ! மக்களின் அவலங்கள் போதும் !!

இன நல்லிணக்கம் மூலமான சமாதானத்திற்கு
இளையவர்களின் பணி !!!

சமஉரிமை, சகவாழ்வு, சமாதானம்

இலங்கையின் வரலாற்றில் இனப்பிரச்சினை தொடர்பான
முதலாவது தமிழ் தொலைக்காட்சி சஞ்சிகை நிகழ்ச்சி இது